# பொருளடக்கம்


வரலாறு 01







13 அரசியல் அறிவியல்

புவியியல் 14






15 பொருளாதாரம்

அறிவியல் 18






தினசரி தேசிய நிகழ்வு 20



சர்வதேச நிகழ்வு 41




தமிழ்நாடு 45

# 1. வரலாறு






## 1.1 முக்கிய தினங்கள்

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| ஏப்ரல் 02 | **சர்வதேச குழந்தைகள் புத்தக தினம்** | ▪ இத்தினமானது 1967 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ இந்த வாரியமானது, சிறுவர் புத்தகங்கள் மீதான கவனத்தை ஈர்ப்பதற்காகவும் வாசிப்பு ஆர்வத்தைத் தூண்டுவதற்காகவும் செயல்படும் இரு சர்வதேச மற்றும் இலாப நோக்கமற்ற அமைப்பாகும்.<br>▪ 2022 ஆம் ஆண்டில் "கதைகள் என்பது நீங்கள் ஒவ்வொரு நாளும் மேலே உயர உதவும் சிறகுகள்" என்ற கருத்துருவில் கனடா இத்தினத்தை ஏற்பாடு செய்கிறது. |
| | **உலக மன இறுக்க விழிப்புணர்வு தினம்** | ▪ உலகம் முழுவதும் உள்ள மன இறுக்கக் குறைபாட்டு நோயால் (Autism) பாதிக்கப்பட்ட நபர்கள் குறித்த விழிப்புணர்வை குடிமக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக வேண்டி இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.<br>▪ இத்தினமானது ஐக்கிய நாடுகளின் உலகத் தகவல் தொடர்புத் துறை மற்றும் ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை ஆகியவற்றில் நடத்தப்படுகிறது.<br>▪ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "அனைவருக்கும் உள்ளார்ந்த தரமான கல்வி" (inclusive Quality Education for All) என்பதாகும். |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| ஏப்ரல் 03 | **இராணுவ மருத்துவப் படை நிறுவன தினம்** | ▪ இராணுவ மருத்துவப் படையின் நிறுவன தினத்தை நினைவுகூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.<br>▪ வங்காள மாகாண மருத்துவச் சேவை ஆனது 1764 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.<br>▪ இது இந்தியாவில் உள்ள மூன்று மாகாணங்களின் முதல் ராணுவச் சேவை அமைப்பு ஆகும்.<br>▪ இந்திய மருத்துவச் சேவை, இந்திய மருத்துவத் துறை மற்றும் இந்திய மருத்துவ மனைப் படை ஆகியவை இணைக்கப்பட்டு 1943ஆம் ஆண்டு ஏப்ரல் 03ஆம் தேதி அன்று இந்திய இராணுவ மருத்துவப் படை உருவாக்கப்பட்டது.<br>▪ இந்திய ராணுவ மருத்துவப் படையானது சுதந்திரத்திற்குப் பிறகு ராணுவ மருத்துவப் படை என மறுபெயரிடப்பட்டது.<br>▪ இராணுவ மருத்துவப் படையின் முழக்கம் சர்வே சாந்து நிராமயா (அனைவரும் நோய் மற்றும் இயலாமையிலிருந்து விடுபடலாம்) என்பதாகும். |
| ஏப்ரல் 05 | **தேசியக் கடல்சார் தினம்** | ▪ இந்த ஆண்டு 59வது தேசிய கடல்சார் தினமாகும்.<br>▪ உலகின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு சரக்குப் பொருட்களை ஏற்றிச் செல்வதற்காக வேண்டி நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட, பாதுகாப்பான மற்றும் உறுதியான, சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒரு அணுகுமுறையாக, கண்டங்களுக்கு இடையேயான வணிகம் மற்றும் உலகப் பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பது குறித்த விழிப்புணர்வை எடுத்துரைக்கச் செய்வதற்காக ஒவ்வோர் ஆண்டு இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.<br>▪ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Sustainable Shipping beyond Covid–19' என்பதாகும். |
| ஏப்ரல் 06 | **சர்வதேச வளர்ச்சி மற்றும் அமைதிக்கான விளையாட்டுத் தினம்** | ▪ ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் இந்த தினமானது அறிவிக்கப்பட்டது.<br>▪ மனித உரிமைகள், சமூகம் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகிய துறைகளில் விளையாட்டு ஏற்படுத்தக் கூடிய நேர்மறையான தாக்கத்திற்கு ஐக்கிய நாடுகள் சபை அதகளவில் அங்கீகாரம் அளிப்பதை இந்தத் தினம் குறிக்கிறது.<br>▪ 2022ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் உலகளாவிய கருத்துரு, "அனைவருக்குமான நிலையான மற்றும் அமைதியான ஒரு எதிர்காலத்தைப் பாதுகாப்பது விளையாட்டின் பங்களிப்பு" என்பதாகும். |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| ஏப்ரல் 07 | சர்வதேச சுகாதார தினம் | ▪ இந்த ஆண்டின் கருப்பொருள் – நமது பூமி, நமது ஆரோக்கியம். |
| | ருவாண்டாவில் 1994 இனப் படுகொலை பற்றிய சர்வதேசப் பிரதிபலிப்பு தினம் | ▪ ருவாண்டாவில் டுட்சி (Tutsi) இன மக்களுக்கு எதிரான இனப் படுகொலையை இது நினைவு கூருகிறது.<br>▪ இது ருவாண்டாவில் உள்ள ஹுட்டு (Hutu) என்ற தீவிரவாத தலைமையிலான அரசால் நடத்தப்பட்டது. |
| ஏப்ரல் 08 | சர்வதேச ரோமானி தினம் | ▪ 1990 ஆம் ஆண்டில் முதன்முதலில் அறிவிக்கப்பட்ட பிறகு, ஒவ்வோர் ஆண்டும் இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.<br>▪ சர்வதேச ரோமானியத் தினமானது உலகளவில் உள்ள ரோமானிய சமூகங்கள் மீதான பாகுபாடுகள் குறித்து கவனத்தை ஈர்க்கிறது.<br>▪ இது அனைவரின் மனித உரிமைகளும் மதிக்கப்பட வேண்டும் மற்றும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்ற அழைப்பு விடுக்கிறது. |
| ஏப்ரல் 09 | மத்திய சேமக் காவல் படையின் 57வது வீர தினம் | ▪ மத்திய சேமக் காவல் படையின் வீர தினம் ஆனது (சௌர்ய திவாஸ்) அப்படைப் பிரிவின் துணிச்சலான வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2022 ஆம் ஆண்டானது மத்திய சேமக் காவல் படையின் 57வது வீர தினத்தைக் குறிக்கச் செய்கிறது.<br>▪ 1965 ஆம் ஆண்டில் இதே நாளில் தான், குஜராத்தின் கட்ச் பகுதியில் அமைந்துள்ள சர்தார் காவல் முகப்பில், பல மடங்கு பெரியளவில், நாட்டினுள் படையெடுத்த பாகிஸ்தான் ராணுவத்தைத் தோற்கடித்து, மத்திய சேமக் காவல் படையின் சிறிய படைப் பிரிவு வரலாறு இன்றைப் படைத்தது, |
| ஏப்ரல் 10 | உலக ஹோமியோபதி தினம் | ▪ ஹோமியோபதியின் நிறுவனர் டாக்டர் கிறிஸ்டியன் ஃப்ரெட்ரிக் சாமுவேல் ஹானிமனின் 267வது பிறந்தநாளை நினைவு கூரும் வகையில் இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது<br>▪ ஏப்ரல் மாதத்தின் 09 மற்றும் 10 ஆம் தேதிகளில் ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் உள்ள மூன்று உயர்மட்ட அமைப்புகளால் இரண்டு நாட்கள் அளவிலான அறிவியல் மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது,<br>▪ மத்திய ஹோமியோபதி ஆராய்ச்சி சபை, தேசிய ஹோமியோபதி ஆணையம் மற்றும் தேசிய ஹோமியோபதி நிறுவனம் ஆகியவை இந்த மூன்று உயர்மட்ட அமைப்புகள் ஆகும். |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| ஏப்ரல் 11 | **பாதுகாப்பான தாய்மைக்கான தேசிய தினம்** | ▪ இத்தினமானது இந்தியாவில் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ மகப்பேறிற்கு முன்பும், மகப்பேறின் போதும், அதற்குப் பின்பும் ஒரு கர்ப்பிணிப் பெண்ணிற்குத் தேவைப்படும் நலம் பேணுதல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதே இத்தினத்தின் நோக்கமாகும்.<br>▪ இத்தினமானது வெண் பட்டை கூட்டமைப்பினால் தொடங்கப்பட்ட முன்னெடுப்பாகும். 2022 ஆம் ஆண்டானது 19வது பாதுகாப்பான தாய்மைக்கான தேசிய தினமாகும். |
| | **உலக நடுக்குவாத நோய் தினம்** | ▪ வீரியமிக்க நரம்பு மண்டலக் கோளாறான பார்கின்சன் (நடுக்குவாத) நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.<br>▪ இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, ஒருங்கிணைக்கப்பட்ட சுகாதாரம்' என்பதாகும்.<br>▪ இலண்டனைச் சேர்ந்த டாக்டரான ஜேம்ஸ் பார்கின்சன் என்பவரின் பிறந்த நாளை இத்தினம் குறிக்கிறது.<br>▪ பார்கின்சன் நோயின் அறிகுறிகளைக் கொண்ட ஆறு நபர்களின் குறைபாடுகள் பற்றி முறையாக விவரித்த முதல் நபர் இவரே ஆவார்<br>▪ மேலும், ஏப்ரல் மாதமானது பார்கின்சன் நோய் விழிப்புணர்வு மாதமாக அனுசரிக்கப்படுகிறது. |
| ஏப்ரல் 12 | **சர்வதேச மனித விண்வெளிப் பயண தினம்** | ▪ 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் தேதியன்று யூரி காகரின் என்பவர் மேற்கொண்ட முதல் மனித விண்வெளிப் பயணத்தின் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இத்தினமானது ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது,<br>▪ தொழில்நுட்ப வளர்ச்சியால் மனிதகுலம் எவ்வளவு சாதித்துள்ளது என்பதை அடையாளம் காண உதவுவதே இந்தத் தினத்தின் நோக்கமாகும். |
| | **சம ஊதிய தினம்** | ▪ சம ஊதிய தினமானது பாலின ஊதிய இடைவெளி குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2021 ஆம் ஆண்டில் ஒரு சராசரி ஆண் சம்பாதித்த வருவாயைச் சம்பாதிப்பதற்கு, இரு சராசரி பெண் 2022 ஆம் ஆண்டில் கூடுதலாக எத்தனை மாதங்கள் உழைக்க வேண்டும் என்பதை இத்தினம் எடுத்துரைக்கிறது. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| ஏப்ரல் 14 | **தீயணைப்போர் தியாகிகள் தினம்** | ▪ மும்பை துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பலில் கடந்த 1944 ஏப்ரல் 14–ஆம் தேதி தீ விபத்து ஏற்பட்டது. இக்கப்பலில் இருந்த 1,200 டன் வெடிபொருள்கள் வெடித்து சிதறியதில் தீயணைப்புத் துறையைச் சேர்ந்த 66 வீரர்கள் வீரமரணம் அடைந்தனர். அவர்களது தியாகத்தையும், நினைவையும் போற்றும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 14–ஆம் தேதி தீயணைப்போர் தியாகிகள் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. |
| ஏப்ரல் 16 | **யானைகளைப் பாதுகாத்தல் தினம்** | ▪ யானைகள் எதிர்கொள்ளும் ஆபத்துகள் மற்றும் உயிர்வாழ்வதற்காக அவை எதிர் கொள்ள வேண்டிய பல்வேறு சிரமங்கள் குறித்து இரு விழிப்புணர்வினை ஏற்படுத்தச் செய்வதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது,<br>▪ தாய்லாந்தைச் சேர்ந்த எலிபண்ட் ரீஇன்டரடக்சன் (யானைகளை மீண்டும் அறிமுகப்படுத்தல்) என்ற அறக்கட்டளையால் இந்தத் தினமானது நிறுவப்பட்டது. |
| | **உலக குரல் தினம்** | ▪ அனைத்து மக்களின் அன்றாட வாழ்விலும் குரலின் மகத்தான முக்கியத்துதைப் பற்றி எடுத்துரைப்பதற்காக இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.<br>▪ இந்த ஆண்டு உலக குரல் தினத்தின் மையக்கருத்து "**உங்கள் குரலை உயர்த்துங்கள்**" என்பது ஆகும். |
| ஏப்ரல் 17 | **உலக ஹீமோபிலியா தினம்** | ▪ இந்த ஆண்டு இத்தினத்தின் மையக்கருத்து Access for All: Partnership, Policy, Progress, Engaging your government, integrating inherited bleeding disorders into national policy என்பதாகும். |
| ஏப்ரல் 18 | **உலக பாரம்பரியத் தினம்** | ▪ 2022ஆம் ஆண்டின் உலகப் பாரம்பரியத் தினத்தின் மையக்கருத்து "**மரபு மற்றும் பருவ நிலை**" என்பதாகும்.<br>▪ இந்தியாவில் மொத்தம் 3691 நினைவுச் சின்னங்கள் மற்றும் தளங்கள் உள்ளன.<br>▪ இவற்றில் 40 தளங்கள் யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. |
| ஏப்ரல் 19 | **உலக கல்லீரல் தினம்** | ▪ கல்லீரலை முழுவதுமாக பராமரித்துக் கொள்வதற்காக வேண்டி கல்லீரல் நோய்க்கான காரணங்கள் மற்றும் அதைத் தடுப்பதற்கான வழிமுறைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வைப் பரப்புவதற்கு இத்தினம் அனுசரிக்கப்படுகிறது. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **ஏப்ரல் 21** | **தேசியக் குடிமைப் பணி தினம்** | ▪ நாட்டின் பல்வேறு பொதுப்பணிச் சேவைத் துறைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் பணிகளை அங்கீகரிக்கும் வகையில் இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.<br>▪ சுதந்திர இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் படேல் அவர்கள், 1947ஆம் ஆண்டில், டெல்லியில் உள்ள மெட்காஃப் நிலையத்தில் நிர்வாகச் சேவை அதிகாரிகளின் தகுதிகாண் அதிகாரிகளிடம் உரையாற்றிய ஒரு தினத்தை நினைவு கூரும் வகையில் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.<br>▪ அவர் தனது உரையில் குடிமைப் பணியாளர்களை இந்தியாவின் எஃகுச் சட்டகம் என்று அழைத்தார். |
| | **உலகப் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க தினம்** | ▪ 2022ஆம் ஆண்டிற்கான உலகப் படைப்பாற்றல் மற்றும் புதுமை தினத்தின் மையக்கருத்து, "ஒத்துழைப்பு" என்பதாகும். |
| **ஏப்ரல் 22** | **உலகப் புவி தினம்** | ▪ இத்தினமானது சர்வதேச பூமி தினம் எனவும் அழைக்கப்படுகிறது.<br>▪ இந்த ஆண்டிற்கான மையக்கருத்து – "நமது கோளுக்காக முதலீடு செய்யுங்கள்" என்பதாகும். |
| **ஏப்ரல் 23** | **உலகப் புத்தகம் மற்றும் பதிப்புரிமை தினம்** | ▪ புத்தகங்களைப் படிப்பதன் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.<br>▪ இந்த ஆண்டிற்கான மையக்கருத்து – "Read, so you never feel low" என்பதாகும். |
| **ஏப்ரல் 24** | **தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினம்** | ▪ பஞ்சாயத்து ராஜ் அமைச்சகமானது தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினம் அல்லது தேசிய உள்ளாட்சி தினத்தை ஏற்பாடு செய்கிறது.<br>▪ 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (73ஆவது திருத்தம்) சட்டத்தின் வாயிலாக பஞ்சாயத்து ராஜ் நிறுவப்பட்டதன் மூலம் அடித்தட்டு நிலையில் அதிகாரப் பரவல் வழங்கப்பட்டதன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வை இது குறிக்கிறது. |
| | **சுரங்க விழிப்புணர்வு மற்றும் சுரங்க நடவடிக்கைகளில் உதவிக்கான சர்வதேச தினம்** | ▪ 2022 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் சுரங்க நடவடிக்கை சேவை என்ற அமைப்பானது "பாதுகாப்பான நிலம் பாதுகாப்பானப் படிகள் (பாதைகள்) பாதுகாப்பான இல்லம்" என்ற கருத்துருவின் கீழ் இந்த தினத்தை அனுசரிக்கிறது. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| ஏப்ரல் 24 முதல் 30 வரை | **உலக நோய்த் தடுப்பு வாரம்** | ▪ உலக நோய்த் தடுப்பு வாரம், ஏப்ரல் மாதத்தின் கடைசி வாரத்தில் கொண்டாடப்படுகிறது.<br>▪ இந்த ஆண்டு நோய்த் தடுப்பு வாரத்தின் மையக்கருத்து "**அனைவருக்கும் நீண்ட ஆயுள்**" (Long Life for All) என்பதாகும். |
| ஏப்ரல் 25 | **தேசிய டிஎன்ஏ தினம்** | ▪ 2003ஆம் ஆண்டில் மனித ஜீனோம் திட்டம் நிறைவடைந்ததையும் 1953ஆம் ஆண்டில் டிஎன்ஏவின் (மரபணுவின்) இரட்டைச் சுருள் வடிவமைப்பு கண்டுபிடிக்கப்பட்டதையும் நினைவு கூரும் வகையில் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது. |
| | **உலக மலேரியா தினம்** | ▪ இந்த ஆண்டிற்கான மையக்கருத்து "**மலேரியா நோயின் அதிகரிப்பைக் குறைக்கவும், உயிர்களைக் காப்பாற்றவும் வேண்டி புதுமைகளைப் பயன்படுத்துதல்**" என்பதாகும். |
| | **உலக பென்குயின் தினம்** | ▪ இந்த தினமானது புவியில் வாழும் தனித்துவமான பல்வேறு பறவைகளில் ஒன்றை அங்கீகரிக்கிறது.<br>▪ புவியில் 17 வகை பென்குயின் இனங்கள் உள்ளன. |
| ஏப்ரல் 26 | **உலக அறிவுசார் சொத்து தினம்** | ▪ இந்த ஆண்டிற்கான உலக அறிவுசார் சொத்து தினத்திற்கான மையக்கருத்து ஒரு சிறந்த **எதிர்காலத்திற்காக வேண்டி அறிவுசார் சொத்து மற்றும் இளைஞர்களின் புத்தாக்கம் மீது ஈடுபாடு** செலுத்துகிறது.<br>▪ இந்தத் தினமானது, "**காப்புரிமைகள், பதிப்புரிமை, வர்த்தக முத்திரைகள் மற்றும் வடிவமைப்புகள் ஆகியவை அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதைப் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக**" 2000ஆம் ஆண்டில் உலக அறிவுசார் சொத்து அமைப்பினால் நிறுவப்பட்டது. |
| ஏப்ரல் 30 | **உலக கால்நடை தினம்** | ▪ இந்த தினம் ஏப்ரல் மாதத்தின் கடைசி சனிக்கிழமையன்று அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2022ஆம் ஆண்டின் உலக கால்நடை தினத்தின் மையக்கருத்து "**கால்நடை மருத்துவத்தின் நெகிழ்திறனை வலுப்படுத்துதல்**" என்தாகும். |

# 1.2 பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

## இந்தியாவுக்கு எஸ்–400 ஏவுகணை சாதனம்

- ரஷியாவிடம் இருந்து எஸ்–400 ரக வான் பாதுகாப்பு ஏவுகணை சாதனங்களின் 5 தொகுதிகளை வாங்குவதற்கு கடந்த 2018–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5 பில்லியன் டாலர்கள் (ரூ.38,000 கோடி) மதிப்பிலான ஒப்பந்தத்தை இந்தியா இறுதி செய்தது.
- இந்த ஏவுகணை சாதனங்களின் முதல் தொகுதியை கடந்த 2021–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்தியாவிடம் ரஷியா ஒப்படைத்தது.

## ஏப்ரல் 20–இல் 'வாஹீர்' அறிமுகம்: ஸ்கார்பீன் திட்டத்தின் கீழ் 6–ஆவது நீர்மூழ்கிக் கப்பல்

- பி75 ஸ்கார்பீன் திட்டத்தின் கீழ் 6–ஆவது நீர்மூழ்கிக் கப்பலான வாக்ஷீர்' ஏப்ரல் 20–ஆம் தேதி அறிமுகப்படுத்தப்படவுள்ளது.
- கடந்த 2005–ஆம் ஆண்டு இந்தியா–பிரான்ஸ் இடையே 3.75 பில்லியன் டாலர்கள் (சுமார் ரூ.28,600 கோடி) மதிப்பில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் கீழ், இந்திய கடற்படைக்காக 6 ஸ்கார்பீன் ரக தாக்குதல் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கட்ட திட்டமிடப்பட்டது. அந்த கப்பல்கள் டீசல் மற்றும் மின்சார உதவியுடன் இயங்குபவை. பிரான்ஸில் உள்ள நேவல் குரூப் நிறுவனத்தின் உதவியுடன் மும்பையில் உள்ள மஸகான் டாக் கப்பல் கட்டுமான பொதுத்துறை நிறுவனத்தால் அந்தக் கப்பல்கள் கட்டப்பட்டன. அவற்றில் ஐஎன்எஸ் கல்வரி, ஐஎன்எஸ் கன்டேரி, ஐஎன்எஸ் கரஞ், ஐஎன்எஸ் வேலா ஆகிய 4 ஸ்கார்பீன் கப்பல்கள் ஏற்கெனவே பயன்பாட்டுக்கு வந்துள்ளன. 'வாகீர்' என்ற பெயர் கொண்ட 5–ஆவது ஸ்கார்பீன் கப்பல் தற்போது சோதனை ஓட்டத்தில் உள்ளது.
- இந்நிலையில், 'வாக்ஷீர்' என்ற பெயர்கொண்ட 6–ஆவது ஸ்கார்பீன் கப்பல் ஏப்.20–ஆம் தேதி அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று மஸகான் டாக் கப்பல் கட்டுமான நிறுவனத் தலைவர் நாராயண் பிரசாத் தெரிவித்தார்.

# 1.3 உலக அமைப்புகள் – உடன்படிக்கைகள் மற்றும் மாநாடுகள்

## உக்ரைன் முதல் இந்தோ–பசிபிக் விவகாரம் 2+2 பேச்சுவார்த்தையில் இந்தியா–அமெரிக்கா விரிவான ஆலோசனை

- இந்தியா–அமெரிக்கா நாடுகளின் வெளியுறவு, பாதுகாப்பு அமைச்சர்கள் இடையேயான 4–ஆவது 2+2 பேச்சுவார்த்தை, அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் நடைபெற்றது. அதில் வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆன்டனி பிளிங்கன், பாதுகாப்புத் துறை அமைச்சர் லாய்டு ஆஸ்டின் ஆகியோர் பங்கேற்றனர்.

# 1.4 விளையாட்டு

## ஆஸ்திரேலியா உலக சாம்பியன்

- ஐசிசி மகளிர் ஒருநாள் உலகக் கோப்பை போட்டியில் நடப்புச் சாம்பியன் இங்கிலாந்தை 71 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி 7–ஆவது முறையாக சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது ஆஸ்திரேலியா.
- இதுவரை நடந்துள்ள ஆடவர் மற்றும் மகளிர் ஒருநாள் உலகக் கோப்பை இறுதி ஆட்டங்களில் அலிஸா ஹீலி அடித்த 170 ரன்களே அதிகபட்ச ரன்களாகும்.

## வாகை சூடி வரலாறு படைத்தார் கார்ஃபியா

- அமெரிக்காவில் நடைபெற்ற மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்கராஸ் கார்ஃபியா சாம்பியன் ஆனார். இது அந்த இளம் டென்னிஸ் வீரர் பெறும் முதல் பிரதான சாம்பியன் பட்டமாகும்.

### சார்லஸ்டன் ஓபன்: பென்சிச் சாம்பியன்

- அமெரிக்காவில் நடைபெற்ற சார்லஸ்டன் ஓபன் மகளிர் டென்னிஸ் போட்டியில் சுவிட்ஸர்லாந்தின் பெலிண்டா பென்சிச் வாகை சூடினார்.
- போட்டித்தரவரிசையில் 10–ஆம் இடத்திலிருந்த பென்சிச் இறுதிச்சுற்றில் 6–2, 5–7, 6–4 என்ற செட்களில், 4–ஆவது இடத்திலிருந்த டுனீசியாவின் ஆன்ஸ் ஜாபியுரை வென்றார். இது பென்சிச் வெல்லும் 6–ஆவது கேரியர் பட்டமாகும். அதுவே, கிளே கோர்ட்டில் இது அவரது முதல் பட்டம்.

### ரெய்க்யாவிக் ஓபன் செஸ்: பிரக்ஞானந்தா சாம்பியன்

- ஐஸ்லாந்தில் நடைபெற்ற ரெய்க்யாவிக் ஓபன்செஸ் போட்டியில் இந்திய வீரரும், சென்னையைச் சேர்ந்தவருமான ஆர்.பிரக்ஞானந்தா சாம்பியன் பட்டம் வென்றார்.
- 9 சுற்றுகள் கொண்ட இந்தப் போட்டியில் பிரக்ஞானந்தா 7.5 புள்ளிகள் பெற்று வெற்றியாளர் ஆனார். இறுதிச்சுற்றில் அவர் சக இந்திய கிராண்ட்மாஸ்டரான டி.குகேஷை வீழ்த்தினார். போட்டி முழுவதுமாக தோல்வியை சந்திக்காமல் அசத்தியிருக்கிறார் பிரக்ஞானந்தா.

### ஆசிய மல்யுத்தம்: இந்தியாவுக்கு 3 வெண்கலம்

- மங்கோலியாவில் தொடங்கிய ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப்பில் இந்தியாவுக்கு முதல் நாளில் 3 வெண்கலப் பதக்கம் கிடைத்தது.
- இதில் சுனில் குமார் (87 கிலோ) முதல் சுற்றில் ஜப்பானின் மசாடோசுமியை 5–3 என்ற கணக்கில் வென்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றார். எனினும் அதில் உஸ்பெகிஸ்தானின் ஜல்கஸ்பே பெர் டிமுராடோவிடம் தொழில்நுட்பப் புள்ளிகள் அடிப்படையில் தோல்விகண்டார். பின்னர் வெண்கலப் பதக்கத்துக்கான சுற்றில் 5–0 என்ற கணக்கில் மங்கோலியாவின் பத்பயார் லுட்பயாரை வீழ்த்தினார்.

### பேயர்ன் முனிச் சாதனை சாம்பியன்

- ஜெர்மனியின் பந்தெஸ்லிகா கால்பந்து போட்டியில் பேயர்ன் முனிச் 10–ஆவது முறையாக சாம்பியனாகி சாதனை படைத்திருக்கிறது.

### உலக வில்வித்தை: ராய்/ரிதிக்கு தங்கம்

- உலகக் கோப்பை வில்வித்தை 1–ஆம் நிலை போட்டியில் ரீகர்வ் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியா தங்கப் பதக்கம் வென்றது.

### தேசிய டேபிள் டென்னிஸ்: சரத்கமல், ஸ்ரீஜா அகுலா சாம்பியன்

- மேகாலயா தலைநகர் ஷில்லாங்கில் நடைபெற்ற 83–ஆவது தேசிய சீனியர் டேபிள் டென்னிஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற தமிழகத்தின் சரத் கமல், தெலங்கானாவின் ஸ்ரீஜா அகுலா. சரத் கமல் 10–ஆவது முறையாகவும், தெலங்கானாவின் ஸ்ரீஜா அகுலா முதன்முறையாகவும் ஒற்றையர், இரட்டையர் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினர்.

## 1.5 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

### குடவாயில் பாலசுப்ரமணியன், ஓவியர் டிராட்ஸ்கி மருதுக்கு மா.அரங்கநாதன் இலக்கிய விருது

- முன்றில் இலக்கிய அமைப்பு சார்பில் எழுத்தாளர் மா.அரங்கநாதன் நினைவுநாளையொட்டி, கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, நாடகம், மொழிபெயர்ப்பு, ஆராய்ச்சி நூல்கள், கவின்கலை, விமர்சனம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு கடந்த 2018–ஆம் ஆண்டு முதல் மா.அரங்கநாதன் இலக்கிய விருது வழங்கப்படுகிறது.
- சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள ராணி சீதை அரங்கில் ஏப்ரல் 16–ஆம் தேதி நடைபெறும் விழாவில் உச்சநீதிமன்ற நீதிபதி வெ.ராமசுப்பிரமணியன் கலந்து கொண்டு விருதுகளை வழங்க உள்ளதாக மூன்றில் இலக்கிய அமைப்பு தெரிவித்துள்ளது.

### இந்தியர்கள் இருவருக்கு கிராமி' விருது!

- பிரபல இசை விருதுகளில் ஒன்றான 'கிராமி விருது இந்தியாவைச் சேர்ந்த இருவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- 64-ஆவது கிராமி விருதுகள் வழங்கும் விழா அமெரிக்காவின் லாஸ் வேகஸ் நகரில் நடைபெற்றது. அதில், 'டிவைன் டைட்ஸ்' என்ற பாடல் தொகுப்புக்காக பெங்களூரைச் சேர்ந்த ரிக்கிகெஜ், 'சிறந்த புதிய ஆல்பம்' என்ற பிரிவில் கிராமி விருதை வென்றார்.
- ரிக்கி கெஜ் பெறும் இரண்டாவது கிராமி விருது இதுவாகும். அவர் ஏற்கெனவே விண்ட்ஸ் ஆஃப் சம்சாரா' என்ற பாடலுக்காக 2015-இல் கிராமி விருதைப் பெற்றுள்ளார். அவரின் பெற்றோர் அமெரிக்காவில் குடியேறியவர்கள் ஆவர். அமெரிக்காவில் பிறந்த ரிக்கி கெஜ், தற்போது பெங்களூரில் வசித்து வருகிறார். விருது பெற்ற பிறகுரிக்கிகெஜ் ட்விட்டரில் வெளியிட்ட பதிவை மறுபதிவு (ரீட்வீட்) செய்த பிரதமர் நரேந்திர மோடி, அவருக்கு வாழ்த்து தெரிவித்தார்.
- மும்பையில் பிறந்த பாடகியான ஃபால்குனி ஷா, 'சிறார்களுக்கான சிறந்த ஆல்பம்' என்ற பிரிவில், 'எகலர்ஃபுல் வேர்ல்டு' பாடலுக்காக கிராமி விருதைப் பெற்றார். அவர் வெல்லும் முதல் கிராமி விருது இதுவாகும். கடந்த 2000-ஆம் ஆண்டில் அமெரிக்காவுக்குச் சென்ற ஃபால்குனி ஷா, தற்போது நியூயார்க் நகரில் வசித்து வருகிறார்.
- விருதைப் பெற்றதற்காக இருவரும் மகிழ்ச்சி தெரிவித்தனர். கிராமி விருது வழங்கும் விழாவில், அவ்விருதை ஏற்கெனவே இருமுறை வென்றுள்ள இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் தனது மகன் ஏ.ஆர்.அமீனுடன் பங்கேற்றார்.

## சென்னை மாநகராட்சிக்கு இரண்டு விருதுகள்

- நீர்நிலைகள் சீரமைப்பு, கரோனா தடுப்புக்கான உள்கட்டமைப்பு உள்ளிட்டவற்றில் சிறந்து விளங்கியதற்காக மத்திய அரசின் ஸ்மார்ட் சிட்டி 2020 என்ற தலைப்பில் இரண்டு விருதுகளை பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுள்ளது.
- மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில் நாடு முழுவதும் சிறந்து விளங்கும் நகரங்களுக்கு ஸ்மார்ட் சிட்டி விருது வழங்கப்படுகிறது. சென்னை மாநகராட்சிப் பகுதியில் 210 நீர்நிலைகள் கண்டறிந்து சீரமைக்கப்பட்டன. அதேபோல், கரோனா தடுப்புக்கான உள்கட்டமைப்புகள் மற்றும் புதிய யுக்திகளை சென்னை மாநகராட்சி கையாண்டது.
- இதற்காக, "ஸ்மார்ட் சிட்டி 2020" ஆண்டுக்கான இரண்டு விருதுகளுக்கு சென்னை மாநகராட்சி தேர்ந்தெடுக்கப்பட்டது. இதற்கான விருதை, தில்லியில் அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரியிடம் இருந்து சென்னை மாநகராட்சி துணை ஆணையர் விஷு மகாஜன், சென்னை ஸ்மார்ட் சிட்டியின் தலைமைச் செயல் அலுவலர் ராஜ் செரூபல் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

## உலக பாரம்பரிய நீர்ப்பாசனக் கட்டமைப்பு: மூன்று விருதுகளுக்கு தமிழகம் தேர்வு

- நீர்ப்பாசனக் கட்டமைப்புகளில் சிறந்து விளங்கியமைக்காக, மூன்று விருதுகளுக்கு தமிழகம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- இதுகுறித்து, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்ஸேனா, வெளியிட்ட அறிவிப்பு:
- சர்வதேச நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் ஆணையமானது ஒவ்வோர் ஆண்டும், உலக பாரம்பரிய நீர்ப்பாசனக் கட்டமைப்புகள் மற்றும் நீர் சேமிப்பு விருதுகளை அறிவிக்கிறது. இந்த விருதுக்கான பரிந்துரைகள் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்து அனுப்பி வைக்கப்படுகிறது.
- இதன்படி, கடந்த ஆண்டு ஜுலையில் தமிழ்நாடு நீர்வளத்துறை சார்பில் கல்லணை, காலிங்கராயன் அணைக்கட்டு, வீராணம் நீர்த்தேக்கம், பேச்சிப்பாறை அணை, மதுராந்தகம் ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி ஆகிய ஆறு கட்டமைப்புகளை சர்வதேச பாரம்பரிய நீர்ப்பாசனக் கட்டமைப்புகளாக அறிவிக்கக் கோரி விண்ணப்பம் செய்யப்பட்டது.
- இதைத் தொடர்ந்து சர்வதேச நீர்ப்பாசன மற்றும் வடிகால் ஆணையத்தில் இருந்து ஆய்வுக் குழுவானது தமிழ்நாடு அரசு விண்ணப்பித்த கட்டமைப்புகளை நேரில் ஆய்வு செய்தது. இதன் தொடர்ச்சியாக உலக பாரம்பரிய நீர்ப்பாசன கட்டமைப்புகளுக்கான விருதுகளுக்கு கல்லணை, வீராணம் ஏரி, காளிங்கராயன் அணைக்கட்டு ஆகிய மூன்று கட்டமைப்புகள் தேர்வு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு நாட்டுக்கும் நான்கு விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. இதில், தமிழ்நாடு மட்டும் மூன்று விருதுகளைப் பெறுவது மகிழ்ச்சிக்கு உரியது என நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா தெரிவித்துள்ளார்.

### மலேரியா தடுப்பு நடவடிக்கைகள்: தமிழகத்துக்கு தேசிய விருது

- மலேரியா தடுப்பு நடவடிக்கைகளை சிறப்புற மேற்கொண்டதற்காக தமிழகத்துக்கு தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது. தில்லியில் நடைபெற்ற உலக மலேரியா தின விழாவில், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா இவ்விருதை தமிழக பொது சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் செல்வவிநாயகத்துக்கு வழங்கினார்.
- மாநில பொது சுகாதாரத் துறை சிறப்பு இயக்குநர் டாக்டர் வடிவேலன், இணை இயக்குநர் டாக்டர் கிருஷ்ணராஜ் ஆகியோர் அப்போது உடனிருந்தார்.
- 2024–ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தில் மலேரியா நோயை முழுமையாக ஒழித்திட மாநில அரசு மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளால் மலேரியா நோய் பாதிப்பு வெகுவாக குறைக்கப்பட்டு கட்டுக்குள்ளது. கொசுக்களால் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா, மூளைக்காய்ச்சல் மற்றும் யானைக்கால் நோய் உட்பட அனைத்து நோய்களும் தமிழக அரசின் தீவிர தொடர் தடுப்பு நடவடிக்கைகளால் குறைக்கப்பட்டு, தற்போது மலேரியா நோய் ஒழிக்கப்படும் தருவாயில் உள்ளது.
- 1990–களில் 1.20 லட்சமாக இருந்த மலேரியா நோய் பாதிப்புகள் 2011–ஆம் ஆண்டில் 22,171 ஆக குறைந்து தற்போது 772–ஆக உள்ளது.
- கொசுவிலிருந்து பரவும் மலேரியா பிளாஸ்மோடியம் எனும் ஒட்டுண்ணியால் இந்நோய் உண்டாகின்றது. இந்த தொற்று அனா∴பிலிஸ் பெண் கொசுக்கள் மூலம் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவுகிறது. இந்தியாவில் இரண்டு வகை மலேரியா ஒட்டுண்ணிகளான பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் மற்றும் பிளாஸ்மோடியம் பால்சிபாரம் மட்டுமே உள்ளது.

## 1.6 சிறந்த நபர்கள்

### அணு விஞ்ஞானி ஏ.கே.பாதுரி மறைவுக்கு இரங்கல்

- கல்பாக்கம் இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தின் முன்னாள் இயக்குநரும், பணி ஓய்வுக்குப் பின்னர் அங்கு ஹோமி பாபா இருக்கையில் பேராசியரியராகப் பணியாற்றி வந்தவருமான விஞ்ஞானி ஏ.கே.பாதுரி மாரடைப்பால் காலமானார்.

## 1.7 கலாச்சாரம்

### கிருஷ்ணகிரியில் 2,000 ஆண்டுகளுக்கு முந்தைய மனிதனின் உள்ளங்கைப் பதிவு கல்திட்டு

- கிருஷ்ணகிரி அருகே 2,000 ஆண்டுகளுக்கு முந்தைய மனிதனின் உள்ளங்கைப் பதிவு கற்திட்டையை வரலாற்று ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தும் குழுவினர் கிருஷ்ணகிரி அரசு அருங்காட்சியகத்தின் உதவியுடன் கண்டெடுத்துள்ளனர்.
- கிருஷ்ணகிரி அரசு அருங்காட்சியகம், கிருஷ்ணகிரி வரலாற்று ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தும் குழுவினருக்கு கிருஷ்ணகிரியை அடுத்த மகாராஜகடையைச் சேர்ந்த அரசு மருத்துவர் லோகேஷ், அவரது நண்பர்கள் அளித்த தகவலின் பேரில் வரலாற்றுக் குழுத் தலைவர் நாராயணமூர்த்தி தலைமையில் மகாராஜகடைமலையின் அருகே உள்ள பூதிகுட்டை பகுதியில் அண்மையில் ஆய்வு மேற்கொண்டனர்.

# 1.8 நியமனங்கள்

## வெளியுறவுச் செயலராக வினய் மோகன் குவாத்ரா நியமனம்

- மத்திய வெளியுறவு செயலராக வினய் மோகன் குவாத்ரா நியமிக்கப்படுவதாக மத்திய பணியாளர் அமைச்சகம் தெரிவித்தது.
- தற்போது மத்திய வெளியுறவுச் செயலராக பதவி வகிக்கும் ஹர்ஷ்வர்தன் ஷ்ரிங்லா ஏப்ரல் 30–ஆம் தேதி பணி ஓய்வு பெறும் நிலையில், வினய் மோகன் குவாத்ரா அந்தப் பதவிக்கு நியமிக்கப்படுகிறார்.
- 1988 ஆம் ஆண்டு ஐஎஃப்எஸ் பிரிவு அதிகாரியான குவாத்ரா, தற்போது நேபாளத்துக்கான இந்திய தூதராகப் பணியாற்றி வருகிறார். தனது 32 ஆண்டுகால பணி அனுபவத்தில் அமெரிக்க, சீன தூதராகவும், பிரதமர் அலுவலக இணைச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

## ராணுவ துணை தலைமை தளபதியாக பி.எஸ்.ராஜு நியமனம்

- இந்திய ராணுவப் படையின் துணை தலைமைத் தளபதியாக லெப்டினென்ட் ஜெனரல் பி.எஸ்.ராஜு நியமிக்கப்பட்டுள்ளார்.
- ராணுவதலைமைத்தளபதி எம்.எம்.நரவணேவின் பதவிக் காலம் (ஏப்ரல் 30) நிறைவடைகிறது. ராணுவத்தின் அடுத்த தலைமைத் தளபதியாக லெப்டினென்ட் ஜெனரல் மனோஜ் பாண்டே ஞாயிற்றுக்கிழமை (மே 1) பொறுப்பேற்க உள்ளார். இந்நிலையில், ராணுவத்தின் துணை தலைமைத் தளபதியாக பி.எஸ்.ராஜு நியமிக்கப்பட்டுள்ளார். மே 1 –ஆம் தேதி அவர் பொறுப்பை ஏற்பார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# 2. அரசியல் அறிவியல்

## 2.1 மத்திய அரசாங்கம்–பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

### பிரதமரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்: தமிழகத்துக்கு ரூ.440 கோடி

- பிரதமரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 2021–22–ஆம் ஆண்டில் தமிழகத்துக்கு ரூ.440 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- இதுதொடர்பாக மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய ஊரக வளர்ச்சித்துறை இணையமைச்சர் சாத்வி நிரஞ்சன் ஜோதி அளித்த பதில்: பிரதமரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நிகழாண்டு மார்ச் 31 வரை நாடு முழுவதும் 7,88,185 கி.மீ. சாலைகள் மற்றும் 9.509 பாலங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, 701205 கி.மீ. சாலைகள் மற்றும் 6,852 பாலங்களை அமைக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

# 3. புவியியல்



## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

### மூன்று மாதங்களில் கடலில் விடப்பட்ட 21,000 ஆலிவ் ரிட்லி ஆமைக் குஞ்சுகள்

- சென்னையில் வனத்துறை சார்பில் அமைக்கப்பட்ட பொறிப்பகம் மூலம் கடந்த மூன்று மாதங்களில் 21,338 ஆலிவ் ரிட்லி ஆமைக் குஞ்சுகள் கடலில் விடப்பட்டுள்ளன.
- உலகில் உள்ள 7 வகையான கடல் ஆமைகளில் மிகவும் சிறிய உடல் அமைப்பைக் கொண்டுள்ளது ஆலிவ் ரிட்லி ஆமைகள். பங்குனி மாதத்தில் இவை முட்டை இடுவதால் பங்குனி ஆமைகள் என்றும் தமிழில் இவை அழைக்கப்படுகின்றன.
- அழியும் நிலையில் உள்ள உயிரினமாக சர்வதேச இயற்கை பாதுகாப்புச் சங்கத்தால் பட்டியலிடப்பட்டுள்ள இவை, இரண்டரை அடி நீளமும், அகலமும் கொண்டவையாகும்.

| குஞ்சு பொறிப்பகம் | கேசரிக்கப்பட்ட முட்டைகள் | கடலில் விடப்பட்ட குஞ்சுகள் |
|---|---|---|
| பெசன்ட் நகர் | 29,191 | 11, 724 |
| நீலாங்கரை | 6, 654 | 2, 125 |
| ஈஞ்சம்பாக்கம் | 4, 194 | 2, 583 |
| பழவேற்காடு | 14, 345 | 4, 906 |



# 4. பொருளாதாரம்

## 4.1 இந்தியப் பொருளாதாரத்தின் தற்போதைய போக்குகள்

### 8 முக்கிய துறைகள் உற்பத்தி 5.8% அதிகரிப்பு

- நாட்டின் 8 முக்கிய துறைகளின் உற்பத்தி சென்ற பிப்ரவரி மாதத்தில் 5.8 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு வெளியிட்ட புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது.
- நிலக்கரி, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, சுத்திகரிப்பு பொருள்கள், உரம், உருக்கு, சிமெண்ட் மற்றும் மின்சாரம் ஆகிய 8 துறைகளின் உற்பத்தி சென்ற பிப்ரவரி மாதத்தில் 5.8 சதவீதம் அதிகரித்துள்ளது. இத்துறைகளின் உற்பத்தி, கடந்தாண்டின் இதே மாதத்தில் 3.3 சதவீதம் சரிவைச் சந்தித்திருந்தது. நிகழாண்டு ஜனவரியில் இந்த 8 முக்கிய துறைகளின் உற்பத்தி 4 சதவீதம் வளர்ச்சி கண்டிருந்தது.
- ஒட்டுமொத்த அளவில் ஏப்ரல்–பிப்ரவரி வரையிலான 11 மாதங்களில் முக்கிய 8 துறைகளின் வளர்ச்சி 11 சதவீதம் என்ற அளவில் உள்ளது. அதே சமயம், கடந்த நிதியாண்டின் இதே காலகட்டத்தில் இத்துறைகளின் உற்பத்தியானது 8.1 சதவீத எதிர்மறை வளர்ச்சி விகிதத்தை கொண்டிருந்தன.
- ஏப்ரலில், நிலக்கரி உற்பத்தி 6.6 சதவீதம், இயற்கை எரிவாயு 12.5 சதவீதம், சுத்திகரிப்பு பொருள்கள் 8.8 சதவீதம், சிமெண்ட் துறை உற்பத்தி 5 சதவீத வளர்ச்சியும் பெற்றதாக மத்திய அரசின் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜிஎஸ்டி வருவாய் ரூ.1.42 லட்சம் கோடி

- கடந்த ஜனவரியில் ரூ.1.40 லட்சம் கோடி சரக்கு–சேவைவரி வசூலாகியிருந்தது. அதுவே அதிகபட்ச அளவாக இருந்தது. இந்நிலையில், கடந்த மார்ச்சில் ஜிஎஸ்டி வருவாய் ரூ.1,42,095 கோடியாக இருந்ததாக மத்திய நிதியமைச்சகம் அறிவித்தது.
- அதில் மத்திய சரக்கு–சேவை வரியாக (சிஜிஎஸ்டி) ரூ.25,830 கோடியும், மாநில சரக்கு–சேவை வரியாக (எஸ்ஜிஎஸ்டி) ரூ.32,378 கோடியும், ஒருங்கிணைந்த சரக்கு–சேவை வரியாக (ஐஜிஎஸ்டி) ரூ.74,470 கோடியும் வசூலாகியுள்ளது. செஸ் வரியாக ரூ.9,417 கோடி வருவாய் கிடைத்துள்ளது.
- கடந்த மார்ச் மாத ஜிஎஸ்டி வருவாயானது கடந்த ஆண்டு மார்ச்சுடன் ஒப்பிடுகையில் 15 சதவீதம் அதிகமாகும். கடந்த 2021–22–ஆம் நிதியாண்டில் ஒட்டுமொத்த ஜிஎஸ்டி வருவாயானது, நிர்ணயிக்கப்பட்ட ரூ.5.70 லட்சம் கோடி இலக்கைக் கடந்துள்ளது.
- கடந்த நிதியாண்டின் கடைசி காலாண்டான ஜனவரி முதல் மார்ச் வரை சராசரியாக ரூ.1.38 லட்சம் கோடி ஜிஎஸ்டி வருவாய் கிடைத்துள்ளது. கடந்த நிதியாண்டின் முதல் 3 காலாண்டுகளில் சராசரி ஜிஎஸ்டி வருவாயானது முறையே ரூ.1.10 லட்சம் கோடியாகவும், ரூ.1.15 லட்சம் கோடியாகவும், ரூ.1.30 லட்சம் கோடியாகவும் இருந்தது.

### இந்திய பொருளாதாரம் மீண்டு வருகிறது

- கரோனா தொற்று பரவல் காரணமாக பாதிக்கப்பட்ட நாட்டின் பொருளாதாரம், வேகமாக மீண்டு வருவதாகத் தெரிவித்த நீதிஆயோக் துணைத் தலைவர் ராஜீவ் குமார், மத்திய அரசின் சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக பொருளாதார அடித்தளம் வலுவடைந்துள்ளதாகக் கூறினார்.
- கரோனா தொற்று பரவல் கட்டுக்கு வந்தபிறகு நாட்டின் பொருளாதாரம் மீளத் தொடங்கிய நிலையில், உக்ரைன் மீது ரஷியா தொடுத்த போர் இந்தியப் பொருளாதாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

நிதி ஆயோக்

- தொடக்கம் – ஜனவரி 1, 2015
- தலைவர் – பிரதம அமைச்சர்
- துணை தலைவர் – ராஜிவ் குமார்
- CEO – அமிதாப் கண்ட்

## வேளாண் ஏற்றுமதி ரூ.3.79 லட்சம் கோடியை எட்டி சாதனை

- இந்தியாவின் வேளாண் பொருள்களின் ஏற்றுமதி ரூ.3.79 லட்சம் கோடியை (5,000 கோடி டாலர்) எட்டி வரலாற்று உச்சத்தைத் தொட்டுள்ளது.
- அரிசி, கோதுமை, சர்க்கரை, இதர தானியங்கள் மற்றும் இறைச்சி போன்ற முக்கிய பொருள்கள் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.
- கடந்த நிதியாண்டில் (2021–22)–இல் வேளாண் பொருள்களின் ஏற்றுமதி (கடல் மற்றும் தோட்டப் பொருட்கள் உட்பட) 5,000 கோடி டாலர்களை (சுமார் ரூ.3.79 லட்சம் கோடி) கடந்துள்ளது. இது வேளாண் ஏற்றுமதியில் இதுவரை எட்டப்படாத அதிகபட்ச அளவாகும்.
- வணிக நுண்ணறிவு மற்றும் புள்ளியியல் துறை தலைமை இயக்குநர் வெளியிட்ட புள்ளி விவரங்களின்படி, 2021–22 ஆண்டில் வேளாண் ஏற்றுமதி 19.92% அதிகரித்து 5,021 கோடி டாலர்களைத் தொட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அனைத்து வங்கி ஏடிஎம்களிலும் விரைவில் அட்டை இல்லாமல் பணம்

- அனைத்து வங்கி ஏடிஎம்களிலும் பற்று அட்டை இல்லாமல் பணம் எடுக்கும் வசதி விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று இந்திய ரிசர்வ் வங்கி (RBI) அறிவித்துள்ளது. இதன் மூலம் பற்று அட்டைகள் மூலம் நடைபெறும் முறைகேடுகளை பெருமளவில் குறைக்க முடியும்.
- இப்போது பாரத ஸ்டேட் வங்கி உள்ளிட்ட சில வங்கிகளில் பற்று அட்டை இல்லாமல் பணம் எடுக்கும் வசதி உள்ளது.
- இந்நிலையில், மும்பையில் நிதிக்கொள்கைக் குழு கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய RBI ஆளுநர் சக்திகாந்ததாஸ், "ஏற்கெனவே மின்னணு முறையில் பணப்பரிமாற்றத்துக்கு UPI தொழில்நுட்பம் பரவலாக பயன்பாட்டில் உள்ளது.

## முத்ரா திட்டம் 34.42 கோடி பயனாளிகளுக்கு ரூ.18.60 லட்சம் கோடி கடன் விநியோகம்

- முத்ரா திட்டத்தின்கீழ், கடந்த 7 ஆண்டுகளில் 34.42 கோடி பயனாளிகளுக்கு ரூ.18.60 லட்சம் கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
- முத்ரா திட்டம் கடந்த 2015 ஏப்ரல் 8–இல் பிரதமர் மோடியால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் வாயிலாக பெருநிறுவனங்கள் அல்லாத தொழில் துறையினர், விவசாயம் அல்லாத சிறு குறு தொழில் நிறுவனங்களுக்கு ரூ.10 லட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டம் தொடங்கி 7 ஆண்டுகளான நிலையில், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் செய்தியாளர்களிடம் கூறியது.
- முத்ரா திட்டத்தின்கீழ் 34.42 கோடிக்கு மேற்பட்ட பயனாளிகளுக்கு ரூ.18.60 லட்சம் கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் சிறு தொழில்களுக்கு உகந்த சூழலை உருவாக்க உதவியிருப்பதுடன் அதிக அளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் உதவியுள்ளது.
- இத்திட்டத்தின்கீழ், 68 சதவீதத்துக்கும் மேற்பட்ட பயனாளிகள் பெண்களாவர். 22 சதவீத பயனாளிகள் இதுவரை வேறு எந்த வங்கியிலும் கடனுதவி பெறாத தொழில்முனைவோர் ஆவர். மொத்த கடன் தொகையில் 51 சதவீதம் எஸ்சி, எஸ்டி, ஓபிசி பிரிவினருக்கு வழங்கப்பட்டு சமூக நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது என்றார் அவர்.
- இந்த நிகழ்ச்சியையொட்டி மத்திய நிதித் துறை இணையமைச்சர் பாகவத் கராட் வெளியிட்டுள்ள அறிக்கையில், நீதி ஆயோக் அமைப்பால் அடையாளம் காணப்பட்ட பின்தங்கிய மாவட்டங்களைச் சேர்ந்த எண்ணற்ற பயனாளிகளுக்கு முத்ரா திட்டத்தின்கீழ் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 2022 நிதியாண்டில் வரி வசூல் 34% அதிகரிப்பு

- நிறுவன வரி, சுங்கவரி, ஜிஎஸ்டி வரி வசூல் அதிகரிப்பு காரணமாக கடந்த மார்ச் 31 வரையிலான நிதியாண்டு முடிவின்படி, நாட்டின் மொத்த வரி வசூல் ரூ.27.07 லட்சம் கோடியை எட்டி 34 சதவீதம் உயர்ந்திருப்பதாகவும், மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) மீதான வரி வீதம் கடந்த 23 ஆண்டுகளில் இல்லாத அளவில் உச்சத்தை எட்டியிருப்பதாகவும் மத்திய வருவாய்த் துறை செயலர் தருண் பஜாஜ் தெரிவித்தார்.

- கடந்த 1999–க்குப் பின்னர் தற்போது மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான வரி வீதம் 11.7 சதவீதம் அதிகரித்துள்ளது. இதுவே கடந்த 2020–21 நிதியாண்டில் 10.3 சதவீதமாக இருந்தது. இதுகுறித்து வருவாய்த் துறை செயலர் தருண் பஜாஜ் செய்தியாளர்களிடம் மேலும் கூறியது:
- ஒட்டுமொத்த வரி வசூலும் ஆரோக்கியமான, வலுவான நிலைமையை வெளிப்படுத்துகின்றன. 2021 ஏப்ரல் முதல் 2022 மார்ச் வரையிலான மொத்த வரி வசூல் தொகை ரூ.27.07 லட்சம் கோடியாகும். இது பட்ஜெட்டில் தீர்மானிக்கப்பட்ட ரூ.22.17 லட்சம் கோடியைக் காட்டிலும் ரூ.5 லட்சம் கோடி அதிகம்.

## கிரிப்டோ பயன்பாட்டுக்கு சர்வதேச ஒழுங்குமுறைச் சட்டம்

- சர்வதேச நிதியம் சார்பில் "அரசு, தனியார் எண்ம (டிஜிட்டல்) செலாவணி–தற்காலத்தில் தேவைப்படுவது எது?" என்ற உயர்நிலை விவாதக் கூட்டம் வாஷிங்டனில் நடைபெற்றது. அதில் பங்கேற்ற அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியதாவது:
- ஒரு நாட்டின் தொழில்நுட்பம் சார்ந்த சட்டம், மற்றொரு நாட்டுக்குப் பொருந்தாது. நாட்டின் பொருளாதாரம் உள்ளிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டும் கிரிப்டோகரன்சியின் தாக்கம் மாறுபடும். எனவே, இந்த விவகாரத்தில் அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து, சர்வதேச அளவிலான ஒழுங்குமுறைச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும்.
- **இந்தியாவுக்குப் பாராட்டு:** கடினமான சூழலிலும், உலகின் வேகமாக வளரும் பொருளாதாரமாக இந்தியா திகழ்ந்து வருவதற்கு கிறிஸ்டலினா பாராட்டு தெரிவித்தார். பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வரும் இலங்கைக்கு உதவியதற்காகவும் இந்தியாவுக்கும் அவர் பாராட்டு தெரிவித்தார். அந்த நாட்டுக்கும் ஐஎம்எஃப் சார்பில் போதிய உதவிகள் வழங்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்திய பொருளாதாரம் 8% வளர்ச்சி காணும்: சிஐஐ

- இந்தியப் பொருளாதாரம் நடப்பு நிதியாண்டில் 7.5–8 சதவீத வளர்ச்சியை எட்டும் என இந்திய தொழிலக கூட்டமைப்பு (சிஐஐ) தெரிவித்துள்ளது.
- இதுகுறித்து சிஐஐ தலைவர் டி.வி.நரேந்திரன் கூறியது.
- நாட்டின் வெற்றிக் கதையில் ஏற்றுமதி முக்கியமான பாத்திரத்தைக் கொண்டுள்ளது. அதன் பயனாக, நடப்பு நிதியாண்ல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.5 முதல் 8 சதவீதத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இருப்பினும், ரஷிய–உக்ரைன் போரின் தாக்கம் மற்றும் கரோனா பேரிடரின் அடுத்த அலையின் எந்தவொரு வீழ்ச்சிக்கும் நாம் தயாராக இருக்க வேண்டியது அவசியம்.

## 2023–க்குள் "எண்மச் செலாவணி" அறிமுகம்

- இந்தியாவில் 2023–ஆம் ஆண்டுக்குள் எண்மச் செலாவணி (டிஜிட்டல் கரன்சி) அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
- அமெரிக்கா சென்றுள்ள மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், அங்குள்ள சான் ஃபிரான்சிஸ்கோ நகரில் "இந்தியாவின் எண்ம (டிஜிட்டல்) புரட்சியில் முதலீடு" என்ற மையக்கருத்தில் நடைபெற்ற வட்டமேஜை கூட்டத்தில் பங்கேற்றார். அப்போது அவர் பேசுகையில், இந்தியாவில் முதலீடு செய்ய முதலீட்டாளர்களின் தொழில் சார்ந்த யோசனைகள் வரவேற்கப்படுகின்றன. முதலீட்டாளர்களின் முக்கியப் பிரச்னைகளைப் புரிந்துகொண்டு, முடிந்தவரை தேவையான தீர்வுகள் அளிக்கப்படும்.
- இந்தியாவில் அதிக அளவில் புதிய தொழில் (ஸ்டார்ட்–அப்) தொடங்கும் சூழலை உருவாக்க இந்திய அரசின் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக துறை (டிபிஐஐடி) சார்பில் ஸ்டார்ட்–அப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. இந்தியாவில் புதிய தொழில் தொடங்க விரும்புவோர் டிபிஐஐடியை அணுகலாம்.

# 5. அறிவியல்



## 5.1 அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்

### SFDR பூஸ்டர் ஏவுகணை அமைப்பு வெற்றிகரமாக சோதனை

- திடஎரிபொருள் நாள ரேம்ஜெட் (SFDR) பூஸ்டர் ஏவுகணை அமைப்பை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) வெற்றிகரமாகப் பரிசோதித்தது.
- இதுதொடர்பாக டிஆர்டிஓ அதிகாரிகள் கூறுகையில், "ஒடிஸா மாநிலம் பாலேசுவரம் மாவட்டம் சண்டிபூர் கடற்கரைப் பகுதியில் SFDR பூஸ்டர் அமைப்பு வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது. வானிலுள்ள இலக்கை அழிக்க வானிலிருந்தவாறு செலுத்தப்படும் ஏவுகணைகளின் திறனை அதிகரிக்க SFDR அமைப்பின் வெற்றிகரமான பரிசோதனை உதவும்.
- மிக நீண்டதொலைவிலும் ஒலியைவிட அதிக வேகத்திலும் வான்வழி அச்சுறுத்தல்களை ஏவுகணைகள் இடைமறிப்பதற்கான திறனை SFDR அமைப்பு அளிக்கும்" என்று தெரிவித்தனர்.
- இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், "சிக்கலான ஏவுகணை அமைப்பில் உள்ள அனைத்து முக்கிய பாகங்களும் நம்பகமான முறையில் செயல்படுவதை பரிசோதனை எடுத்துரைத்துள்ளது. இந்தத் திட்டத்தின் அனைத்து இலக்குகளையும் SFDR அமைப்பு பூர்த்தி செய்துள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பினாகா ராக்கெட் அமைப்பு வெற்றிகரமாக சோதனை

- மேம்படுத்தப்பட்ட பினாகா எம்கே–1 ராக்கெட் அமைப்பு வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.
- இந்திய ராணுவமும், பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பும் (டிஆர்டிஓ) DRDO அமைப்பும் இணைந்து, ராஜஸ்தானில் உள்ள பொக்ரான் தளத்தில் இந்த ராக்கெட் அமைப்பை பரிசோதித்தன.
- மேம்படுத்தப்பட்ட பினாகா எம்கே–1 ராக்கெட் அமைப்பு (EPRS), பினாகா தடுப்பு ஆயுதம் (ஏடிஎம்) ஆகியவை வெற்றிகரமான விண்ணில் ஏவி சோதித்துப் பார்க்கப்பட்டன.
- கடந்த 14 நாட்களில் பல்வேறு தூர இலக்குகளுடன் மொத்தம் 24 EPRS ராக்கெட்டுகள் ஏவப்பட்டன. அனைத்து ஏவுதலிலும் தேவையான துல்லிய தொலைவு இலக்கு எட்டப்பட்டது. இந்த சோதனையுடன் EPRS ராக்கெட்டுகளை தொழில் முறையில் தயாரிக்கத் தேவையான நடைமுறைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன. இதனைத் தயாரிக்க தொழில் நிறுவனங்கள் தயாராக உள்ளன.
- புனேயில் உள்ள ஆயுத ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு, புனேயைச் சேர்ந்த DRDOவின் உயர்நிலை ஆராய்ச்சி சோதனைக்கூடத்தின் ஒத்துழைப்புடன் பினாகா ராக்கெட்டை உருவாக்கியுள்ளது. இது கடந்த பத்தாண்டுகளாக இந்திய ராணுவ சேவையில் சேர்க்கப்பட்டுள்ளது.
- தற்போது நவீன தொழில்நுட்பங்களுடன் மேம்படுத்தப்பட்டுள்ளதுடன், தாக்கும் தூர இலக்கும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இந்தியாவிலிருந்து விண்ணுக்கு மனிதனை அனுப்பும் ராக்கெட் சோதனை

- இந்தியாவிலிருந்து விண்ணுக்கு மனிதனை அனுப்பும் ராக்கெட் சோதனை நடைபெற்று வருகிறது என்றார் இஸ்ரோ முன்னாள்

தலைவரும், விக்ரம் சாராபாய் விண்வெளி ஆராய்ச்சி மைய சிறப்பு பேராசிரியருமான சிவன்.

- நாகர்கோவில் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி: விண்ணுக்கு மனிதனை அனுப்ப 3 முக்கிய தகுதி சோதனைகள் நடத்தப்பட வேண்டும்.
- இதில் பாதுகாப்பை முக்கியமாக எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த ராக்கெட்டில் சுற்றுச்சூழல் வசதிகள் ஏற்படுத்த வேண்டும். ராக்கெட்டில் மனிதனை விண்ணுக்கு அனுப்புவதற்கு தேவையான சோதனைகள் நடைபெற்று வருகின்றன.
- சோதனைகள் அனைத்தும் நிகழாண்டுக்குள் நிறைவடையும். விரைவில் விண்ணுக்கு மனிதனை அனுப்பும் முயற்சி நடைபெறும். இதற்காக ஜி.எஸ்.எல்.வி. மாக் 3 ராக்கெட்டை பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, தரைதள சோதனை, விண்ணில் ஏவும் சோதனை உள்பட பல்வேறு சோதனைகள் நடத்தப்பட உள்ளன.
- முதல் கட்டமாக இரண்டு ரோபோக்கள் ராக்கெட்டில் வைத்து அனுப்பப்படும். அந்த சோதனைவெற்றிகரமாக முடிந்தபின் மனிதன் அனுப்பப்படுவார்.
- தூத்துக்குடி மாவட்டம், குலசேகரன் பட்டினத்தில் ராக்கெட் ஏவுதளம் அமைப்பதற்கு தமிழக அரசு மிகவும் ஆர்வமாக உள்ளது. இந்த ஏவுதளம் அமைப்பதற்கு 2,300 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது.

### 6 மாதங்களுக்குப் பின் பூமி திரும்பிய சீன விண்வெளி வீரர்கள்

- சீனா கட்டமைத்து வரும் புதிய விண்வெளி நிலையத்தில் 6 மாதங்கள் தங்கியிருந்து சாதனை படைத்த நிலையில், மூன்று விண்வெளி வீரர்கள் பூமிக்குத் திரும்பினர்.
- "தியான்காங்" என்ற விண்வெளி நிலையத்தை சீனா உருவாக்கி வருகிறது. இதன் கட்டமைப்புப் பணிக்காக அனுப்பப்பட்டிருந்த விண்வெளி வீரர்கள் ஷாய் ஷிகாங், வாங் யாபிங், யி குவாங்ஃபு ஆகியோர் சுமார் 6 மாதங்கள் விண்வெளி நிலையத்தில் தங்கியிருந்தனர். அப்போது இருமுறை விண்வெளியில் நடந்து விண்வெளி நிலையத்துக்கான தொகுதிகளை பொருத்தும் பணியில் ஈடுபட்டனர். இந்நிலையில், அவர்கள் ஷென்ஸோ–13 விண்கலம் மூலம் பூமிக்கு திரும்பினர். கோபி பாலைவனத்தில் காலை 9.56 மணிக்கு அந்த விண்கலம் வெற்றிகரமாகத் தரையிறங்கியதாக அரசு செய்தி நிறுவனமான ஜின்ஹுவா தெரிவித்துள்ளது.
- மூவரும் நல்ல உடல்நலத்துடன் இருப்பதாக மருத்துவக் குழுவினர் தெரிவித்தனர். இதற்கு முன்பு ஷென்ஸோ–12 விண்கலம் மூலம் அனுப்பப்பட்ட விண்வெளி வீரர்கள் ஒரே முறையில் 92 நாள்கள் விண்வெளி நிலையத்தில் தங்கியிருந்ததே சாதனையாக இருந்தது.

## 5.2 ஊடகம் மற்றும் தொலைதொடர்பு

### 'டாடா நியூ" சூப்பர் செயலி அறிமுகம்

- டாடா குழுமம் இந்தியாவின் முதல் சூப்பர் செயலியான 'டாடா நியூ' வை அறிமுகப்படுத்தியது.
- இதுகுறித்து டாடா சன்ஸ் தலைவர் என். சந்திரசேகரன் சமூக ஊடக பதிவில் தெரிவித்துள்ளதாவது:
- டாடா குடும்பத்தின் இளைய உறுப்பினரான டாடா டிஜிட்டல், 'டாடா நியூ' என்ற புதிய செயலியை தற்போது பயன்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளது. அற்புதமான இந்த தளத்தில், டாடாவின் பிராண்டுகள் அனைத்தும் ஒரே குடையின் கீழ் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டுள்ளன.

# 6 தினசரி தேசிய நிகழ்வு



## வன்னியர்களுக்கான 10.5% உள் ஒதுக்கீடு ரத்து: உயர்நீதிமன்ற தீர்ப்பை உறுதி செய்தது உச்சநீதிமன்றம்

- மிகவும் பிற்படுத்தப்பட்ட 115 பிரிவினரில் இருந்து வன்னியர்களை மட்டும் தனிப்பிரிவாக கருதுவதற்கு எந்தவித முகாந்திரமும் இல்லை என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.
- தமிழகத்தில் 69 சதவீத இடஒதுக்கீடு அமலில் உள்ளது. இதில், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் 20 சதவீத இடஒதுக்கீட்டில் வன்னியர்களுக்கு 10.5 சதவீத உள் ஒதுக்கீடு அளிக்க முந்தைய அதிமுக அரசு கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் சட்டம் இயற்றியது.

## 'மத்திய திரைப்பட தணிக்கை வாரியத்தால் திரைப்படங்களை தடை செய்ய இயலாது'

- மத்திய திரைப்படத் தணிக்கை வாரியத்தால் (சிபிஎ∴ப்சி) திரைப்படத்தைத் தடை செய்ய முடியாது; ஆனால் திரைப்படங்களுக்கான சான்றிதழை மறுக்க முடியும் என்று மாநிலங்களவையில் மத்திய அரசு தெரிவித்தது.
- மத்திய திரைப்பட தணிக்கை வாரியம், திரைப்படவியல் சட்டம்-1952, ஒளிப்பதிவு (சான்றிதழ் சட்டம், 1983 மற்றும் அதன் கீழ் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களைப் பின்பற்றி ஒரு திரைப்படத்தை ஆய்வு செய்து 'யு', 'யு/ஏ', 'ஏ' மற்றும் 'எஸ்' ஆகிய சான்றுகளாக வகைப்படுத்தி மக்களின் பார்வைக்கு அனுமதியளிக்கலாம்.
- ஒரு திரைப்படத்தைத் தடை செய்யும் அதிகாரம் சிபிஎ∴ப்சிக்கு இல்லை.

### இந்தியத் திரைப்படத் தணிக்கைக் குழு

- இந்தியத் திரைப்படத் தணிக்கைக் குழு இந்தியாவில் விடுதலைக்குப் பின்பு ஒழுக்கத்தையும், அறநெறிகளையும் மீறாத வகையில் திரைப்படக் காட்சிகள், வசனங்கள், பாடல்கள் இருக்க வேண்டும் என்பதற்காக இந்தியத் திரைப்படத் தணிக்கைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இதற்காக 1952 ஆம் ஆண்டில் திரைப்படத் தணிக்கைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- தோற்றம் – 1952 ஆம் ஆண்டு
- தலைமையகம் – மும்பை
- தலைவர் – லீலா சாம்சன்

## சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதத்தில் மாற்றமில்லை

- 2022-23 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில், பொது வருங்கால வைப்பு நிதி (பிபிஎ∴ப்), தேசிய சேமிப்புச் சான்றிதழ் (என்எஸ்சி) உள்ளிட்ட சிறு சேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதம் மாற்றப்படவில்லை.
- இதுகுறித்து மத்திய நிதியமைச்சகம் வெளியிட்ட அறிவிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: 2022-23-நிதியாண்டின் முதல் காலாண்டில் (2022 ஏப்ரல் 1-ஜுன் 30), பிபிஎ∴ப், என்எஸ்சி உள்ளிட்ட சிறு சேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதம் மாற்றப்படவில்லை.
- கடந்த 2021-22-ஆம் நிதியாண்டின் நான்காவது காலாண்டில் (2022 ஜனவரி 1 மார்ச் 31) இருந்த வட்டி விகிதமே நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- கடந்த 2020-21-ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் இருந்து சிறு சேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதம் மாற்றப்படவில்லை. பிபிஎ∴ப் திட்டத்துக்கு 7.1 சதவீதமும், என்எஸ்சி திட்டத்துக்கு 6.8 சதவீதமும் வட்டி அளிக்கப்படுகிறது.
- ஓராண்டுக்கு டெபாசிட் செய்யும் திட்டத்துக்கு 5.5 சதவீதம் வட்டி வழங்குவது தொடரும். செல்வமகள் சேமிப்புத் திட்டத்துக்கான வட்டி விகிதம் 7.6 சதவீதமாக இருக்கும்.
- மூத்த குடிமக்களுக்கான 5 ஆண்டு சேமிப்புத் திட்டத்துக்கு வட்டி விகிதம் 7.4 சதவீதமாகத் தொடரும். காலாண்டுக்கு ஒரு முறை

அவர்களுக்கு வட்டி வழங்கப்படும். ஒரு ஆண்டு முதல் 5 ஆண்டுகள் வரையிலான வைப்புத் தொகைத் திட்டங்களுக்கு 5.5 சதவீதம் முதல் 6.7 சதவீதம் வரை வட்டி வழங்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

## 800 அத்தியாவசிய மருந்துகளின் விலை உயர்வு

- கரோனா, நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்காகப் பயன்படுத்தப்படும் 800–க்கும் மேற்பட்ட மருந்துகளின் விலை (ஏப்ரல் 1) முதல் 10.7 வரை சதவீதம் உயருகிறது.
- இதய அறுவை சிகிச்சையில் வைக்கப்படும் "ஸ்டென்ட்", மூட்டுமாற்று அறுவை சிகிச்சையில் வைக்கப்படும் உலோகப் பொருள்களின் விலையும் உயருகிறது.

## செஸ் ஒலிம்பியாட்: அமைச்சர் தலைமையில் ஆலோசனை

- சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் வரும் ஜூலை 27 முதல் ஆகஸ்ட் 10 வரையில் சதுரங்க (செஸ்) ஒலிம்பியாட் போட்டி நடத்துவது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் அமைச்சர் மெய்யநாதன் தலைமையில் நடத்தப்பட்டது.
- 44–ஆவது சதுரங்க ஒலிம்பியாட் போட்டி சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.
- சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் ஜூலை 27–ம் தேதி முதல் ஆகேஸ்ட் 10–ம் தேதி வரை செஸ் ஒலிம்பியாட் நடைபெறும்.

## தேர்வுகளைக் கொண்டாட வேண்டும்

- பொதுத் தேர்வை எழுதவுள்ள மாணவர்களிடம் "தேர்வுக் குறித்த விவாதம்" என்ற தலைப்பில் பிரதமர் மோடி கலந்துரையாடினார். தொடர்ந்து 5–ஆவது ஆண்டாக மாணவர்களிடம் அவர் கலந்துரையாடினார்.
- தொழில்நுட்பமானது மாணவர்களுக்கு என்றும் பலனளிக்கக் கூடியதே. அதை மாணவர்கள் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தற்போதைய சூழலில் இணைவழிக் கல்வியானது பெருமளவில் அதிகரித்துள்ளது. அதன் வாயிலாக மாணவர்கள் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

## குடியரசுத் தலைவர் கோவிந்த் துர்க்மெனிஸ்தான் பயணம்

- குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் 3 நாள் பயணமாக துர்க்மெனிஸ்தான் சென்றார்.
- துர்க்மெனிஸ்தான் அதிபராக சர்தர் பர்திமுகமெதோவ் அண்மையில் பதவியேற்றார். இந்நிலையில், அந்நாட்டுக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் சென்றுள்ளார். சுதந்திர துர்க்மெனிஸ்தானுக்கு இந்திய குடியரசுத் தலைவர் செல்வது இதுவே முதல் முறை.

## மசோதாக்கள் மீது ஆளுநர்கள் 2 மாதங்களில் முடிவெடுக்க வேண்டும் திமுக எம்.பி. தனிநபர் மசோதா

- மசோதாக்கள் மீது மாநில ஆளுநர்கள் 2 மாதங்களில் முடிவெடுக்க கால வரம்பு நிர்ணயிக்க வலியுறுத்தி திமுக எம்.பி.பி.வில்சன் மாநிலங்களவையில் தனிநபர் மசோதா தாக்கல் செய்துள்ளார்.
- தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்ட முதல் நீட் விலக்கு மசோதாவை ஆளுநர் ஆர்.என்.ரவி திருப்பி அனுப்பினார். இதையடுத்து, அந்த மசோதா எந்த மாற்றமும் இல்லாமல் சட்டப்பேரவையில் பிப்பரவரி 8 ஆம் தேதி மீண்டும் நிறைவேற்றப்பட்டு ஆளுநர் ஆர். என்.ரவிக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது. அந்த மசோதாவை அவர் இதுவரை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கவில்லை.

## 6,000 இந்திய பொருள்களுக்கு வரி ரத்து ஆஸ்திரேலியாவுடன் வர்த்தக ஒப்பந்தம்

- இந்தியா–ஆஸ்திரேலியா இடையேயான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தம் கையொப்பமானது.
- இந்த ஒப்பந்தத்தின் மூலமாக இந்தியாவின் ஆயத்த ஆடைகள், தோல் பொருள்கள், ஆபரணங்கள் உள்ளிட்ட 6000 பொருள்கள் ஆஸ்திரேலியாவின் சந்தைகளுக்கு வரியின்றி சென்றடையவுள்ளன.
- இந்தியா–ஆஸ்திரேலியா இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பாக இருநாட்டு அதிகாரிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தது.
- இந்நிலையில், இந்தியா–ஆஸ்திரேலியா பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையொப்பமிட்டன.

- பிரதமர் நரேந்திர மோடி, ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிஸன் ஆகியோர் காணொலி வாயிலாக இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். ஒப்பந்தத்தில் மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல், ஆஸ்திரேலிய வர்த்தகத்துறை அமைச்சர் டேன் டெஹான் ஆகியோர் கையொப்பமிட்டனர். அப்போது அமைச்சர் பியூஷ் கோயல் கூறியதாவது:
- இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே தற்போது 27.5 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புக்கு வர்த்தகம் நடைபெற்று வருகிறது. இது அடுத்த 5 ஆண்டுகளில் 45 முதல் 50 பில்லியன் டாலராக அதிகரிக்கும்.
- இந்த ஒப்பந்தத்தின் வாயிலாக 6000–க்கும் மேற்பட்ட துறைகளைச் சேர்ந்த இந்திய பொருள்கள் ஆஸ்திரேலிய சந்தைகளுக்கு எந்தவித வரியுமின்றி சென்றடையும். முன்பு 4 முதல் 5 சதவீத வரி விதிக்கப்பட்ட பெரும்பாலான பொருள்களுக்கு தற்போது வரி விலக்கு வழங்கப்பட்டுள்ளது.
- தொழிலாளர்களின் பங்களிப்பு அதிகம் தேவைப்படும் துறைகளில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், அடுத்த 5 முதல் 7 ஆண்டுகளில் சுமார் 10 லட்சம் வேலைவாய்ப்புகள் இந்த ஒப்பந்தத்தின் வாயிலாக உருவாகும்.
- சர்வதேசப் போட்டி: ஆஸ்திரேலியாவில் இருந்து தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்களையும், இதர உற்பத்திப் பொருள்களையும் இந்தியா இறக்குமதி செய்து வருகிறது. தற்போது அவை குறைந்த விலைக்குக் கிடைக்கும் என்பதால், எஃகு, அலுமினியம் உள்ளிட்ட துறைகள் சர்வதேச அளவில் போட்டியிடும் சூழல் உருவாகும்.
- அதேவேளையில், பால் பொருள்கள், பொம்மைகள், சூரியகாந்தி எண்ணெய், எண்ணெய் வித்துகள், கோதுமை, அரிசி, ஆப்பிள், சர்க்கரை, தங்கம், வெள்ளி ,ஆபரணம், இரும்புத் தாது உள்ளிட்ட சில பொருள்களின் இறக்குமதிக்கு வர்த்தக ஒப்பந்தத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## நல்லுறவை மேம்படுத்த இந்தியா–நேபாளம் உறுதி

- இந்தியா–நேபாளம் இடையேயான நல்லுறவை மேம்படுத்த இருநாட்டுப் பிரதமர்களும் உறுதியேற்றனர்.
- இந்தியாவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள நேபாள பிரதமர் ஷேர் பகதூர் தேவுபா, பிரதமர் நரேந்திர மோடியை தில்லியில் சந்தித்துப் பேசினார். அப்போது, இரு நாடுகளுக்கிடையே ஜெயநகர் (பிகார்)–குர்தா (நேபாளம்) ரயில் சேவை, மின் விநியோகத்திட்டம் ஆகியவை தொடக்கி வைக்கப்பட்டன.
- இந்தியாவின் ரூபே அட்டையை நேபாளத்தில் பயன்படுத்துவதற்கான வசதியும் தொடக்கி வைக்கப்பட்டது. ரயில்வே, எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான 4 ஒப்பந்தங்களும் கையொப்பமாகின.

## இந்தியாவில் வேலையின்மை குறைந்து வருகிறது

- பொருளாதாரம் படிப்படியாக இயல்புநிலைக் குத்திரும்புவதால் நாட்டில் வேலையின்மை விகிதம் குறைந்து வருவதாக இந்திய பொருளாதார கண்காணிப்புமையம் (சிஎம்ஐஇ தெரிவித்துள்ளது.
- மேலும் கடந்த பிப்ரவரியில் 8.10 சதவீதமாக இருந்த ஒட்டுமொத்த வேலையின்மை விகிதம், மார்ச் மாதத்தில் 7.6 சதவீதமாக குறைந்ததாகவும் சிஎம்ஐஇ கூறியுள்ளது.
- இதுகுறித்து இந்திய புள்ளியியல் நிறுவனத்தின் ஓய்வுபெற்ற பேராசிரியர் அபிருப் சர்கார் கூறுகையில், "ஒட்டுமொத்த வேலையின்மை விகிதம் குறைந்தாலும் இந்தியாவை போன்ற ஏழை நாடுகளுடன் ஒப்பிடும்போது இது அதிகம்தான். ஏழை மக்கள் குறிப்பாக ஊரகப் பகுதிகளில் வசிப்பவர்கள், வேலையின்றி இருக்க முடியாது. எனவே தங்களுக்கு கிடைக்கும் வேலைகளில் அவர்கள் தங்களை ஈடுபடுத்திக்கொள்கின்றனர்" என்றார்.
- சிஎம்இஐ வெளியிட்ட புள்ளிவிவரப்படி, கடந்த மார்ச் மாதம் ஹரியாணாவில் அதிகபட்சமாக 26.7 சதவீதமும், ராஜஸ்தான், ஜம்மு–காஷ்மீரில் தலா 25 சதவீதமும், பிகாரில் 14.4 சதவீதமும், திரிபுராவில் 14.1 சதவீதமும், மேற்கு வங்கத்தில் 5.6 சதவீதமும் வேலையின்மை விகிதம் பதிவாகியுள்ளது. குறைந்தபட்சமாக கர்நாடகம், குஜராத்தில் தலா 1.8 சதவீதமாக வேலையின்மை பதிவாகியுள்ளது.

## ஃபீல்டு மார்ஷல் சாம் மானெக்ஷா பிறந்த தினம் உதகையில் கடைப்பிடிப்பு

- மறைந்த ஃபீல்டு மார்ஷல் சாம் மானெக்ஷாவின் 108 – ஆவது பிறந்த தினம் உதகையில் கடைப்பிடிக்கப்பட்டது. இதையொட்டி உதகையிலுள்ள அவரது கல்லறையில்

ராணுவத்தின் அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த அதிகாரிகள் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

- 1971 ஆம் ஆண்டு இந்தியா பாகிஸ்தான் போரில் இந்திய இராணுவத்தின் தலைமை பொறுப்பை வகித்து வெற்றி தேடி தந்தவர்.

## வேளாண் பொருள்களுக்கு 53 விமான நிலையங்களில் கட்டணச் சலுகை

- வேளாண் பொருள்களின் மதிப்புகளை உணர்த்தி எளிதில் அழுகக் கூடிய பொருள்களைக் அனுப்பும் வசதிகளை ஏற்படுத்தும் கிரிஷி உதான் திட்டத்தில் நாட்டில் கோவை, திருச்சி உள்ளிட்ட 53 விமான நிலையங்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் வி.கே. சிங் மாநிலங்களவையில் தெரிவித்தார்.
- வேளாண் பொருள்களை விமான மூலம் கொண்டு செல்லப்படும் கிரிஷி உதான் திட்டத்தில் பயனடைந்தவர்கள், நிதி ஒதுக்கீடு போன்றவை குறித்து கர்நாடகத்தைச் சேர்ந்த பாஜக உறுப்பினர் இரன்னா காடாடிமாநிலங்களவையில் கேள்வி எழுப்பினார்.
- இதற்கு மத்திய சிவில் விமானப் போக்குவரத் துறை அமைச்சர் வி.கே. சிங் எழுத்துபூர்வமாக அளித்துள்ள பதில்: கிரிஷி உதான் திட்டம் கடந்த 2020-ஆம் ஆண்டில் சர்வதேச, தேசிய வழித்தடங்களில், வேளாண் பொருள்களைக் கொண்டு செல்வதற்கு அறிவிக்கப்பட்டது.

## குற்றவியல் அடையாள விதிமுறை மசோதாவுக்கு மக்களவை ஒப்புதல்

- குறிப்பிட்ட வழக்கில் விரைவில் தீர்வு காண்பதற்காக, குற்றஞ்சாட்டப்படுவோரின் உயிரியல் மாதிரிகளைச் சேகரிக்க காவல்துறையினருக்கு சட்டபூர்வ அனுமதி வழங்கும் நோக்கில் குற்றவியல் அடையாள விதிமுறை மசோதாவை மத்திய அரசு மக்களவையில் தாக்கல் செய்தது. அந்த மசோதா மீதான விவாதம் நடைபெற்றது.
- வழக்கில் குற்றஞ்சாட்டப்படுவோரின் அடையாளங்களை உறுதி செய்ய வழிவகுக்கும் தற்போதைய சட்டம் 1920-இல் இயற்றப்பட்டது. தற்போதைய சூழலில் அச்சட்டத்தின் விதிகளானது குற்றத்தை நிரூபிக்கவும், விசாரணை அமைப்புகளின் செயல்பாடுகளை வலுப்படுத்தவும் போதுமானதாக இல்லை.
- குற்றவியல்அடையாளவிதிமுறைமசோதாவானது தற்போதைய சட்டத்தின் குறைபாடுகளைப் போக்குவதோடு மட்டுமல்லாமல், ஆதாரங்களை சேகரிப்பதற்கும் கூடுதல் வலுசேர்க்கும். நீதிமன்றங்களில் குற்றங்களை நிரூபிப்பதற்கான வழிமுறைகளை ஏற்படுத்துவது கட்டாயமாகும். இல்லையெனில், நாட்டின் சட்டம்-ஒழுங்கு சூழல் பாதிக்கப்பட்டு, உள்நாட்டுப் பாதுகாப்பு கேள்விக்குறியாகும்.

## ஜம்மு-காஷ்மீர்: தொகுதி மறுசீரமைப்பு குழு

- ஜம்மு-காஷ்மீர் கடந்த 2019-ஆம் ஆண்டு யூனியன் பிரதேசமாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து அங்குள்ள நாடாளுமன்ற, சட்டப் பேரவைத் தொகுதிகளை மறுசீரமைப்பு செய்ய 2020-ஆம் ஆண்டு மே 6-ஆம் தேதி உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு ஜம்மு-காஷ்மீரில் கள ஆய்வு மேற்கொண்டு வெளியிட்டுள்ளது.
- ஜம்முவில் 6, காஷ்மீரில் ஒன்று என சட்டப்பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கை 83-இல் இருந்து 90-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டத்தில் 1.34 லட்சம் தொழில் முனைவோர்

- ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டத்தின் கீழை கடந்த 6 ஆண்டுகளில் 1,33,995 (கணக்குகளுக்கு) பேருக்கு மொத்தம் ரூ.30,160 கோடி வரை கடன் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்தத் திட்டத்தால் லட்சக்கணக்கான பேர் தொழில்முனைவோர்களானது மட்டுமல்லாமல், வேலை வாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளனர் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.
- பட்டியலினத்தவர்கள், பழங்குடியினர், பெண் தொழில்முனைவோர்கள் எதிர்நோக்கும் சவால்களைக் கருத்தில் கொண்டும், கீழ்நிலையில் உள்ளவர்களை தொழில்முனைவோராக்கி, பொருளாதார அதிகாரப்படுத்துதல், வேலை உருவாக்கத்தை நோக்கமாகக் கொண்டும், ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் 2016, ஏப்ரல் 5-ஆம் தேதி தொடங்கப்பட்டது. இந்த 6-ஆவது ஆண்டு நிகழ்வையொட்டி, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

- அதில், 'ஸ்டாண்ட்–அப் இந்தியா திட்டத்தின் கீழ் இதுவரை 1.34 லட்சத்துக்கும் மேற்பட்ட தொழில்முனைவோருக்கும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியவர்களுக்கும் அரசு வசதிகள் செய்யப்பட்டிருப்பதைக் காணும் போது மகிழ்ச்சியளிக்கிறது.
- அவர்கள் செல்வத்தை உருவாக்குப்வர்களாக மட்டுமின்றி, வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திறன் பெற்றவர்களாகவும் இருப்பதை அரசு உணர்ந்துள்ளது' என்று தெரிவித்துள்ளார்.
- ரூ.1 கோடி வரை கடன்: ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டத்தில் உற்பத்தி, சேவைகள், வர்த்தகத் துறை, வேளாண் சார்ந்த நடவடிக்கைகள், பசுமை தொழில் தொடங்க கடன் வழங்கப்படுகிறது. ஒரு வணிக வங்கிக் கிளையில், குறைந்தபட்சம் ஒரு பட்டியலினத்தவர் அல்லது பழங்குடியினத்தவர், குறைந்தபட்சம் ஒரு பெண்ணுக்கும் ரூ.10 லட்சம் முதல் ரூ.1 கோடி வரை கடன் வழங்கப்படுகிறது.
- இந்தத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து கடந்த மார்ச் 21–ஆம் தேதி வரை 1,33,995 பேருக்கு ரூ.30,160 கோடிக்கும் மேல் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

## நாடாளுமன்றத்தில் கணக்கு தணிக்கையாளர் சட்டத் திருத்த மசோதா நிறைவேற்றம்

- கணக்குத் தணிக்கையாளர் சட்டம்–1949, செலவு மற்றும் பணிகள் கணக்காளர் சட்டம்–1959 மற்றும் கம்பெனி செயலர்கள் சட்டம்–1980 ஆகியவற்றில் சில திருத்தங்களை மேற்கொள்ளும் வகையில் இந்த மசோதா அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- இந்திய கணக்கு தணிக்கையாளர் நிறுவனம் (ஐசிஏஐ), இந்திய செலவு மற்றும் பணிகள் கணக்காளர் நிறுவனம் (ஐசிடபிள்யூஏஐ) மற்றும் இந்திய கம்பெனி செயலாளர்கள் நிறுவனம் (ஐசிஎஸ்ஐ) ஆகியவற்றின் ஒழுங்கு நடவடிக்கை குழுக்களின் தலைமை அதிகாரியாக முறையே கணக்குத் தணிக்கையாளர் அல்லாத, செலவுக் கணக்காளர் அல்லாத மற்றும் கம்பெனி செயலர் அல்லாத நபர்களை நியமனம் செய்யும் வகையில் மசோதாவில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

## இந்தியாவில்தான் சாலை விபத்துகளால் அதிக உயிரிழப்பு

- ஜெனீவாவில் அமைந்துள்ள சர்வதேச சாலைக் கூட்டமைப்பு வெளியிட்ட உலக சாலை விபத்துகள் புள்ளிவிவரங்கள்– 2018–இன்படி, சாலை விபத்துகளின் எண்ணிக்கையில் இந்தியா 3–ஆம் இடம் வகிக்கிறது. சாலை விபத்தில் பலியானோர்களின் எண்ணிக்கையில் இந்தியா முதலிடமும், காயமடைந்தவர்களின் எண்ணிக்கையில் 3–ஆம் இடமும் வகிக்கிறது. மேலும் கடந்த 2020–இல் சாலை விபத்தில் பலியானவர்களில் 69.8 சதவீதத்தினர் 18–45 வயதுக்கு உள்பட்டோர் ஆவர்.
- நாட்டில் 22 பசுமைவழி நெடுஞ்சாலைகளை (ரூ.1,63,350 கோடி மதிப்பில் 2,485 கி.மீ. தூர ஐந்து விரைவுச் சாலைகள், ரூ.1,92,876 கோடி மதிப்பில் 5,816 கி.மீ தூர அணுகு நெடுஞ்சாலைகள்) மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- தில்லி– மும்பை விரைவுச் சாலை திட்டத்தில், தில்லி டௌசா– ஜல்சோட் (ஜெய்பூர்– 214 கிமீ), வதோதரா– அங்க்லேஷ்வர் (100 கிமீ), கோட்டா–ரத்லம் ஜாப்வா (245 கிமீ) ஆகிய பிரிவுகளை வரும் மார்ச் 23–ஆம் தேதிக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று அதில் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

## பேரழிவு ஆயுதங்களுக்கு நிதியுதவி செய்வதைத் தடுக்கும் மசோதா

- பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களைத் தயாரிப்பதற்கு நிதியுதவி வழங்குவதைத் தடை செய்யும் சட்டத்திருத்தமசோதா, மக்களவையில் ஒருமனதாக புதன்கிழமை நிறைவேறியது.
- பேரழிவு ஆயுதங்கள் (சட்ட விரோதச் செயல்கள்) சட்டம், கடந்த 2005–ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. அந்த சட்டத்தில், பேரழிவு ஆயுதங்களைத் தயாரிப்பதற்கு மட்டுமே தடை விதிக்கப்பட்டுள்ளது. அதில், சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, மக்களவையில் அந்த மசோதா அறிமுகம் செய்யப்பட்டது.
- மசோதா மீது புதன்கிழமை நடைபெற்ற விவாதத்தின்போது, இந்த மசோதா நிறைவேறுவது காலத்தின் அவசியம் என்று கூறி கட்சி வேறுபாடின்றி அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்தனர். அதைத் தொடர்ந்து குரல் வாக்கெடுப்புடன் மசோதா நிறைவேற்றப்பட்டது.
- இந்த மசோதாவின் மூலம், பேரழிவு ஆயுதங்களைத் தயாரிப்பதற்கு நிதியுதவி செய்பவர்களின் சொத்துகளை முடக்கவும் பறிமுதல் செய்யவும் மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.
- முன்னதாக, நடைபெற்ற விவாதத்தின்போது வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் பதிலளித்துப் பேசியதாவது:

- இந்த சட்ட திருத்த மசோதா நிறைவேறுவதால், இந்தியாவின் தேசப்பாதுகாப்பு மேலும் வலுவடையும்; சர்வதேச அளவில் இந்தியாவின் அந்தஸ்தும் உயரும்.

## 101 ராணுவத் தளவாடங்கள் இறக்குமதிக்குத் தடை

- ராணுவாத் தளவாடங்கள் உள்நாட்டில் தயாரிக்கப்படுவதை ஊக்குவிப்பதற்காக 101 தளவாடங்களின் இறக்குமதிக்குத் தடை விதித்து 3-ஆவது பட்டியலை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட்டார்.
- ஆயுதங்கள், வெடிபொருள்கள், கடற்படை, ஹெலிகாப்டர்கள், ரோந்து கப்பல்கள், கப்பல் மற்றும் படகுகளைத் தாக்கி அழிக்கும் ஏவுகணைகள் உள்ளிட்ட முக்கியத் தளவாடங்கள் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.
- பாதுகாப்புத் துறையில் சுயசார்பை நோக்கி நாம் வேகமாக செல்வதை இது பிரதிபலிக்கிறது. பாதுகாப்புத் துறையில் சுயசார்புடன் இருக்க வேண்டும்; ராணுவத் தளவாடங்களை ஏற்றுமதி செய்ய வே்ணடும் என்ற இரு நோக்கங்களுக்காக தளவாடங்கள் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்படுகிறது. இது, அரசு, தனியார் பங்களிப்புடன் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கச் செய்யும் என்றார்.

## மக்கள் மருந்தகம் மூலம் குறைவான விலையில் தரமான மருந்துகள்

- மக்கள் மருந்தகம் மூலம் குறைவான விலையில் தரமான மருந்துகள் விநியோகிக்கப்படுவதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.
- உலகசுகாதாரதினத்தையொட்டி மக்கள் மருந்தகம் (ஜன் ஔஷதி) மூலம் தரமான மற்றும் குறைந்த செலவில் மருத்துவ வசதி பொதுமக்களுக்கு அளிக்கப்படுகிறது.
- இதனால் ஏழைகள் மற்றும் நடுத்தர வகுப்பினரின் பணம் சேமிக்கப்படுகிறது.

## என்எல்சி இந்தியா: மின் உற்பத்தியில் புதிய சாதனை

- மின்சக்தி விநியோகம், நிலக்கரி உற்பத்தியிலும் புதிய சாதனைகளை அந்நிறுவனம் நிகழ்த்தியுள்ளது.
- என்எல்சி இந்தியா நிறுவனம் 2021-22ஆம் நிதியாண்டில் மின் உற்பத்தியில் பல புதிய சிகரங்களை தொட்டது. அதன்படி, என்எல்சி மின் நிலையங்கள், அதன் துணை நிறுவனமான தூத்துக்குடி என்எல்சி, தமிழ்நாடு மின் நிறுவனத்தின் மின் நிலையம் ஆகியவை கடந்த நிதியாண்டில் 2,920 கோடி யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்தன. இது, இந்த நிறுவனத்தின் 65 ஆண்டுகால வரலாற்றில் புதிய சாதனையாகும். மேலும், முந்தைய 2020-21ஆம் நிதியாண்டின் மொத்த மின் உற்பத்தி அளவான 2,461.30கோடி யூனிட்டை விட இது 18.64% அதிகம்.

## செறிவூட்டப்பட்ட அரிசியை விநியோகிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல்

- அரசின்பல்வேறு திட்டங்களின்கீழ்செறிவூட்டப்பட்ட அரிசியை 3 கட்டங்களாக மக்களுக்கு விநியோகிப்பதற்கு மத்திய அமைச்சரவை வெள்ளிக்கிழமை ஒப்புதல் அளித்தது.
- தில்லியில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த மத்திய செய்தி, ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் தாக்குர் கூறியதாவது:
- முதல் கட்டமாக, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் (ஐசிடிஎஸ்), பிரதமரின் ஊட்டச்சத்துத் திட்டம் ஆகியவற்றின் கீழ் குழந்தைகளுக்கு செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கப்படும்.
- இரண்டாவது கட்டமாக, பொது விநியோகம் மற்றும் இதர நலத்திட்டத்தின் கீழ் ஊட்டச்சத்து குறைபாடு உடையவர்கள் அதிகம் வசிக்கும் மாவட்டங்களுக்கு அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கப்படும்.
- மூன்றாவது கட்டமாக, மற்ற அனைத்து மாவட்டங்களுக்கும் 2024-ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் அந்த அரிசி வழங்கப்படும்.
- இந்தத் திட்டங்களை செயல்படுத்த ஆண்டுக்கு ரூ.2,700 கோடி செலவாகும். இந்த செலவை மத்திய அரசே முழுமையாக ஏற்றுக் கொள்கிறது. இந்த திட்டங்களுக்காக, இந்திய உணவுக் கழகமும் மாநில அமைப்புகளும் ஏற்கெனவே 88.65 மெட்ரிக் டன் அரிசியைக் கொள்முதல் செய்துள்ளன என்றார் அவர். இந்த அரிசியில் நுண்ணூட்டச்சத்துகள் சேர்க்கப்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## முல்லைப் பெரியாறு: மேற்பார்வைக் குழுவுக்கு

- அணைகள் பாதுகாப்புச் சட்டம்-2021 நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டு, கடந்த ஆண்டு டிசம்பர் 13-இல் குடியரசுத் தலைவரின்

ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. உச்சநீதிமன்ற விசாரணையில் உள்ள முல்லைப் பெரியாறு அணை போன்றவற்றின் கண்காணிப்பு, ஆய்வு, செயல்பாடு, பராமரிப்பு நோக்கங்களுக்காக அணைகள் பாதுகாப்பு (2021) சட்டத்தின் 8–ஆவது பிரிவின் கீழ், தேசிய அணைப் பாதுகாப்பு ஆணையத்திடம் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது.

- முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தைப் பொருத்தமட்டில், மத்திய நீர் ஆணையத்தின் பிரதிநிதி, தமிழ்நாடு, கேரளம் ஆகிய மாநிலங்களில் இருந்து தலா ஒரு பிரதிநிதி என 3 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு மேற்பார்வைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு திருப்திகரமாகச் செயல்பட்டு வருகிறது. இருப்பினும், அணைகள் பாதுகாப்பு சட்டம் (2021) நடைமுறைக்கு வந்த பிறகு, ஒரு சட்டப்பூர்வ அமைப்பு நிறுவப்பட வேண்டும். மத்திய அரசின் ஜல் சக்தி அமைச்சகத்தின் கீழ் உள்ள மத்திய நீர் ஆணையம் மூலம் தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையம் (என்டிஎஸ்ஏ) உருவாக்கப்பட்டிருப்பதாக எங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- அணைகள் பாதுகாப்புச் சட்டம்–2021–இன் கீழ் அளிக்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களை செயல்படுத்தவும், அணையின் கண்காணிப்பு, ஆய்வு, செயல்பாடு மற்றும் பராமரிப்புப் பணி ஆகியவற்றை உடனடியாக மேற்கொள்ளும் வகையில், வழக்கமான என்டிஎஸ்ஏ இருப்பது விரும்பத்தக்கதாக இருக்கும்.

## இந்திய வாழைப்பழம், இளஞ்சோளம் கனடாவுக்கு ஏற்றுமதி: இரு தரப்பு தொழில்நுட்ப பகிர்வுக்கு பின்னர் அறிவிப்பு

- இந்திய வாழைப்பழம், இளம் மக்காச்சோளம் (பேபி கார்ன்) ஆகியவை கனடா நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்கான தேவையான தகவல்களை இரு நாடுகளும் பகிர்ந்து கொள்ளப்பட்டு ஏற்றுமதிக்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாக மத்திய வேளாண், விவசாயிகள் நலத்துறை தெரிவித்துள்ளது.
- இந்திய வாழைப்பழம், இளம் மக்காச்சோளம் ஆகியவை ஏற்றுமதி செய்யப்பட்டு கனடா நாட்டு சந்தைகளில் விற்பது குறித்து இந்தியா – கனடா ஆகிய இருநாட்டு தேசிய தாவர பாதுகாப்பு அமைப்புகளுக்கிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதன் மூலம் பகிர்ந்து கொள்ளப்பட்ட தகவல்கள் அடிப்படையில் இந்தப் பொருள்களுக்கான கனடா நாட்டு சந்தைகளுக்கு அணுகல் கிடைத்துள்ளது. கனடாவின் தானியங்கி இறக்குமதி குறித்த அமைப்பு முறைகளின்படி மக்காச் சோளத்துக்கு தாவர பாதுகாப்பு இறக்குமதி மற்றும் உள்நாட்டு இயக்கத்திற்கான அனுமதி தேவை.

## வேளாண் திட்டங்களால் வலிமை பெறும் விவசாயிகள்: பிரதமர்

- பிரதமர் உழவர் நல நிதி மற்றும் வேளாண் சார்ந்த இதர திட்டங்கள் நாட்டின் கோடிக்கணக்கான விவசாயிகளுக்கு புதிய பலத்தைக் கொடுத்து வருகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
- இதுகுறித்து அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: நாடு நமது விவசாய சகோதர, சகோதரிகளால் பெருமை கொள்கிறது. அவர்கள் வலிமையாக இருந்தால், புதிய இந்தியா வளமானதாக இருக்கும். பிரதமரின் விவசாயிகள் நல நிதி மற்றும் விவசாயம் தொடர்பான பல திட்டங்கள் கோடிக்கணக்கான விவசாயிகளுக்கு புதிய பலத்தை வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன் என்று அந்தப் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வர்த்தகப் பயணத்தை தொடங்குகிறது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட முதல் விமானம்!

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதல் விமானமானது வணிக ரீதியிலான பயணத்தைத் தொடங்கவுள்ளதாக விமானப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- பொதுத்துறையைச் சேர்ந்த அல்லையன்ஸ் ஏர் விமான நிறுவனமானது, மற்றொரு பொதுத் துறை நிறுவனமான ஹிந்துஸ்தான் ஏரோநாடிக்ஸ் நிறுவனத்திடமிருந்து இரு டோர்னியர்–228 ரக விமானங்களைப் பெற கடந்த பிப்ரவரியில் ஒப்பந்தம் மேற்கொண்டது.
- அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் முதலாவது மோர்னியர் ரக விமானமானது அல்லையன்ஸ் ஏர் நிறுவனத்திடம் கடந்த 7–ஆம் தேதி ஒப்படைக்கப்பட்டது.
- அந்த விமானமானது முதல் முறையாகப் பயணிகளின் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படவுள்ளது.
- அஸ்ஸாமின் திப்ரூகர், அருணாசல பிரதேசத்தின் பாசிகாட் பகுதிகளுக்கு இடையே (ஏப்ரல் 12) முதல் அந்த விமானம் இயக்கப்படவுள்ளது.

## எரிசக்தி, பருவநிலை தரவரிசையில் குஜராத், கேரளம், தில்லி முன்னிலை

- எரிசக்தி, பருவநிலை குறியீடுகளில் மாநிலங்களின் செயல்பாடுகளில் ஒட்டுமொத்த தரவரிசையில் குஜராத், கேரளம், பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் முன்னிலையில் உள்ளதாக நீதி ஆயோக் அறிவித்துள்ளது. இதில், எரிசக்தி சேமிப்பு பிரிவில் தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது.
- நீதி ஆயோக்கின் மாநில எரிசக்தி ஆற்றல், பருவநிலை குறியீடு தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டது. இதை இந்த அமைப்பின் துணைத் தலைவர் டாக்டர் ராஜீவ் குமார் வெளியிட்டார். இந்தத் தரவரிசைப் பட்டியல் குறித்து நீதி ஆயோக்கின் கூடுதல் செயலாளர் டாக்டர் ராகேஷ் சர்வால் கூறியதாவது:
- இது, மாநில எரிசக்தி, பருவநிலை குறியீடுகளின் முதல் சுற்று. இதில் மாநிலங்களின் செயல்பாடுகள் ஆறு அளவுகோல்கள், குறிகாட்டிகளைக் கொண்டு தரவரிசை செய்யப்பட்டுள்ளது. இவை பெரிய மாநிலங்கள், சிறிய மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் என மூன்றாக பிரிக்கப்பட்டு தரவரிசை வழங்கப்பட்டுள்ளது.
- 6 அளவுகோல்களில் ஒட்டுமொத்தமாக அதிகப் புள்ளிகள் பெற்ற தரவரிசையில் பெரிய மாநிலங்களில் குஜராத் (50.1 புள்ளிகள்) முதலிடத்தில் உள்ளது. 2-ஆவது இடத்தில் கேரளம் (49.1 புள்ளிகள்), 3-ஆவதாக பஞ்சாப் (48.6 புள்ளிகள்) இடம் பெற்றுள்ளன. சிறிய மாநிலங்கள் வரிசையில் கோவா (51.4 புள்ளிகள்), திரிபுரா (45 புள்ளிகள்) ஆகிய மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களில் சண்டீகர் (55.7 புள்ளிகள்), தில்லி (55.6 புள்ளிகள்), டாமன் – டையூ (53.2 புள்ளிகள்), புதுச்சேரி (48.5 புள்ளிகள்) ஆகியவையும் முன்னிலையில் உள்ளன. இந்த ஒட்டுமொத்த தரவரிசையில் தமிழகம் 43.4 புள்ளிகளுடன் 9-ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. அதே சமயத்தில் எரிசக்தி ஆற்றல் சேமிப்புப் பிரிவில் தமிழகம் 85.4 புள்ளிகள் பெற்று முதல் இடம் பெற்றுள்ளது என்றார் அவர்.
- இந்த நிகழ்ச்சியில் பேசிய நீதி ஆயோக் துணைத் தலைவர் டாக்டர் ராஜீவ் குமார், "கச்சா எண்ணெய் இறக்குமதியில் 3-ஆவது இடத்தில் இருக்கும் நாம், மரபு சாரா எரிசக்தியிலும் குறைந்த செலவிலான மின் உற்பத்திக்கும் மாறவேண்டிய நிலை வந்துள்ளது" என்றார்.
- நீதி ஆயோக் உறுப்பினர் டாக்டர் வி.கே.சரஸ்வத், எரிசக்தி துறையில் நாட்டை தன்னிறைவு பெறச் செய்வதற்கும் மத்திய – மாநிலங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு முக்கியம்" என்றார்.
- நீதி ஆயோக் தலைமை நிர்வாக அதிகாரி அமிதாப் காந்த் மற்றும் பலர் இந்த நிகழ்ச்சியில் பேசினர்.

## ஊராட்சிகளில் 9 இலக்குகளை அடைய மாவட்டந்தோறும் சிறப்பு ஆலோசகர்கள்

- ஊராட்சிகள் அளவில் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை (எஸ்டிஜி) செயல்படுத்த வேண்டிய 9 முக்கிய ஆய்வுக் கருப்பொருளுக்கும் தனித்தனி சிறப்பு ஆலோசர்களை ஒவ்வொரு மாவட்டம், வட்ட அளவில் நியமிக்க தில்லியில் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் கூட்டிய மாநாட்டில் தமிழக அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கேட்டுக்கொண்டார்.
- இந்திய சுதந்திர அமுதப் பெருவிழாவின் ஒரு பகுதியாக மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் தில்லியில் ஏப்ரல் மாதம் 11 முதல் ஏப்ரல் 17 வரை பல்வேறு மாநிலங்களின் ஊரகத் துறை அமைச்சர்கள், ஊராட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளும் தேசிய அளவிலான கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை ஊராட்சிகள் அளவில் செயல்படுத்துவதற்காக எடுக்க வேண்டிய பல்வேறு நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்படுகிறது. பஞ்சாயத்துகளில் நிறைவேற்றிட 9 முக்கிய ஆய்வுக் கருப்பொருள்கள் வைக்கப்பட்டுள்ளன.
- வாழ்வாதாரம் நிறைந்த மற்றம் வறுமையற்ற கிராமங்கள், நோயற்ற ஊராட்சி, குழந்தைகள் நட்பு கிராமங்கள், நீர் நிறைந்தவை, தூய்மையான பசுமை கிராமங்கள், அடிப்படை கட்டமைப்பில் தன்னிறைவு, சமூக பாதுகாப்பு, சிறந்த ஆளுமை மற்றும் பெண்கள் பாதுகாப்பு போன்றவற்றைக் கொண்ட ஊராட்சிகளை உருவாக்குவது குறித்து விவாதிக்கப்படுகிறது.
- காந்தியின் கனவுகளை நிறைவேற்றும் விதமாக பல்வேறு கிராம தன்னிறைவு திட்டங்கள் மாநில முதல்வரால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்த முயற்சிக்கு நாங்கள் "திராவிடன் மாடல்" என்கின்றோம்.
- 2011-ஆம் ஆண்டு முதலே இது போன்ற திட்டங்கள் தமிழகத்தில் தொடங்கப்பட்டது. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், சமுத்துவபுரம், நமக்கு நாமே திட்டம் போன்றவை

நிறைவேற்றப்பட்டு அனைத்து தரப்பினரும் பாராட்டினர். தமிழகத்தில் 7.46 லட்சம் சுய உதவிக் குழுக்களில் 1.7 கோடி பெண்கள் பங்கேற்று வருகின்றனர்.

- தற்போது முதல்வர், "மக்களைத் தேடி மருத்துவம்" மற்றும் "இல்லம் தேடி கல்வி" போன்ற மகத்தான திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்.

## இந்தியாவில் எரிபொருள் விற்பனை 3 ஆண்டுகள் காணாத அளவில் அதிகரிப்பு

- இந்தியாவில் எரிபொருள் விற்பனை கடந்த மார்ச் மாதத்தில் 3–ஆண்டுகள் காணாத அளவுக்கு உயர்ந்துள்ளது.
- இதுகுறித்து பெட்ரோலிய அமைச்சகத்தின் திட்டமிடல் மற்றும் பகுப்பாய்வு பிரிவு வெளியிட்ட புள்ளிவிவரத்தில் கூறியுள்ளதாவது:
- பெட்ரோலியப் பொருள்களின் ஒட்டுமொத்த நுகர்வு மார்ச் மாதத்தில் 194.10 லட்சம் டன்னாக இருந்தது. இது, கடந்த 2019–ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல் முறையாக காணப்படும் அதிகபட்ச அளவாகும்.
- அனைத்து பெட்ரோலிய தயாரிப்பு நுகர்விலும் ஏறத்தாழ 40 சதவீத பங்களிப்பை வழங்கும் டீசலுக்கான தேவை மார்ச் மாதத்தில் 6.7 சதவீதம் உயர்ந்து 77 லட்சம் டன்னாக காணப்பட்டது. அதேபோன்று, பெட்ரோல் விற்பனையும் 6.1 சதவீதம் உயர்ந்து 29.10 லட்சம் டன்னை எட்டியது.
- வேளாண் துறையில் டீசல் பயன்பாடு வெகுவாக அதிகரித்துள்ளது.

## தேசிய கிராம சுயராஸ்ய திட்டத்துக்கு ரூ.5,911 கோடி

- புதுப்பிக்கப்பட்ட தேசிய கிராம சுயராஜ்ய திட்டத்தை நிகழாண்டு ஏப்ரல் 1–ஆம் தேதியில் இருந்து 2026–ஆம் ஆண்டு மார்ச் 31–ஆம் தேதி வரை நீட்டித்து மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- நாடு முழுவதும் உள்ள 2.78 லட்சம் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில், நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான நிர்வாகத் திறன்களை மேம்படுத்துவதற்கு இத்திட்டம் உதவும். இந்தத் திட்டம், ரூ.5,911 கோடியில் செயல்படுத்தப்படும். இதில், மத்திய அரசின் பங்களிப்பு ரூ.3,700 கோடியாகவும், மாநில அரசின் பங்களிப்பு ரூ.2,211 கோடியாகவும் இருக்கும். இத்திட்டத்தின் மூலம் உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள 1.36 கோடி பேருக்கு பயிற்சி அளிக்கப்படும்.
- **கழிவுநீர் மேலாண்மையில் ஜப்பானுடன் ஒப்பந்தம்:** கழிவுநீர் சுத்திகரிப்புக்கு அதிநவீன தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் ஜப்பானுடன் இந்தியா இணைந்து ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

## ஜாலியன்வாலா பாக் நினைவு தினம்: பிரதமர் மரியாதை

- பஞ்சாப் மாநிலத்தில் உள்ள ஜாலியன்வாலா பாக்கில் கடந்த 1919–ஆம் ஆண்டு ஏப்ரல் 13–ஆம் தேதி ஆங்கிலேய அரசின் ரௌலட் சட்டத்தை எதிர்த்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஆங்கிலேயப் படையினர் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதில், நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

## 20 சிறந்த கைவினைஞர்களுக்கு மாநில அரசு விருதுகள் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

- கைவினை, கைத்திறத் தொழில்களில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய கலைஞர்களுக்கு விருதுகளைமுதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இதற்கான நிகழ்ச்சி தலைமைச்செயலகத்தில் நடைபெற்றது. இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:–
- கைவினைத் தொழில்களுக்காகவே தங்களது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட 10 சிறந்த கைவினைஞர்களுக்கு வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருதானது 8 கிராம் தங்கப் பதக்கம், தாமிர பத்திரம், சான்றிதழ், ரூ.1 லட்சம் காசோலை அடங்கியது.
- 2021–22–ஆம் ஆண்டுக்கான வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதானது ஜி.மாரிமுத்து, என்.மாரியப்பன், ஜி.தங்கராஜு, பொன் விசுவநாதன், எம்.ராமலிங்கம், எம். முத்துசிவம், வி.கமலம், டி.விஜயவேலு, எஸ். பிரணவம், கே.வடிவேல் ஆகியோருக்கு வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்தார்.
- இதேபோன்று, சிறந்த கைவினைஞர்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில், பூம்புகார் மாநில விருது அளிக்கப்பட்டு வருகிறது. இந்த விருதானது ரூ.50,000 பரிசுத் தொகை, 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிர பதக்கம், தகுதிச்சான்று கொண்டது. அதன்படி, டி.கதிரவன், ஏ.தென்னரசு, எஸ்.சகாயராஜ், ஆர்.கோபு, எஸ்.யுவராஜ், எஸ்.ராதா,

டி.நாகப்பன், டி.மகேஸ்வரி, என்.ராஜேந்திரன், டி.செல்லம்மை ஆகியோருக்கு முதல்வர் அளித்தார். மேலும், காஞ்சிபுரம் மாவட்டம் கலியனூர், திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம், பெரம்பலூர் அரும்பாவூர், ஈரோடு மாவட்டம் ஆசனூர், சேலம் மாவட்டம் தம்மம்பட்டி, விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி, திருநெல்வேலி மாவட்டம் பத்தமடை ஆகிய இடங்களில் பொது பயன்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்த மையங்களில் கைவினை குழுமங்களைச் சேர்ந்த கைவினைஞர்கள் ஒன்றுகூடி இங்கு பொருத்தப்பட்டுள்ள நவீன இயந்திரங்கள், கருவிகளைப் பயன்படுத்தலாம் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

- தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## மெரீனாவில் உயிர் காக்கும் பிரிவு ஒத்திகை

- சென்னை மெரீனாவில் பொதுமக்கள் கடலில் மூழ்கி உயிரிழக்கும் நிகழ்வுகள் அவ்வப்போது நிகழ்ந்து வருகிறது. இவற்றை தடுக்கும் வகையில் "மெரீனா உயிர் காக்கும் பிரிவு" கடந்த ஆண்டு தொடங்கப்பட்டது.
- இந்நிலையில் மெரீனாவில் உயிர் காக்கும் பிரிவில் சிறப்பு பயிற்சி பெற்ற போலீஸார் பாதுகாப்பு மற்றும் மீட்பு ஒத்திகை நடத்தினர்.
- இதில் கடல் அலையில் சிக்கிக்கொண்டு தத்தளிப்பவர்களை சிறப்பு பயிற்சி பெற்ற போலீஸார் "ரப்பர் படகு" மூலம் மீட்பது போன்று ஒத்திகை செய்து காண்பிக்கப்பட்டது.

## நாட்டின் வளர்ச்சியில் அனைத்துப் பிரதமர்களுக்கும் பங்கு

- நாட்டின் 75–ஆவது சுதந்திர ஆண்டு கொண்டாடப்பட்டு வரும் நிலையில், பிரதமர்களாகப் பதவி வகித்தவர்களின் அருங்காட்சியகத்தை தில்லியில் பிரதமர் மோடி வியாழக்கிழமை திறந்துவைத்தார். தீன்மூர்த்தி வளாகத்தில் ரூ.271 கோடி செலவில் இந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.
- சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட அமைச்சரும், அரசமைப்புச் சட்டத்தின் தந்தை எனப் போற்றப்படுபவருமான பி.ஆர்.அம்பேத்கரின் பிறந்த தினத்தில் அருங்காட்சியகம் திறக்கப்பட்டது கூடுதல் சிறப்பாக அமைந்தது.
- நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது: அரசமைப்புச் சட்டம் வகுத்துள்ள ஜனநாயகத்தின் இலக்குகளை அடைவதற்கு ஒவ்வொரு பிரதமரும் தங்கள் பங்களிப்பை வழங்கினர். அவர்களை நினைவுகூர்வதன் மூலமாக சுதந்திர இந்தியாவின் பயணம் குறித்து அறிந்துகொள்ள முடியும். நாட்டில் சுதந்திரத்துக்குப்பிறகு பொறுப்பேற்ற ஒவ்வோர் அரசும், தற்போது அடைந்துள்ள வளர்ச்சிக்கு முக்கியப் பங்கு வகித்தது.
- சுதந்திரத்துக்குப் பிறகு நாட்டின் பிரதமராகப் பதவிவகித்த அனைவரையும் பெருமைப்படுத்தும் வகையில் இந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. சுதந்திரத்துக்குப் பிறகான நாட்டின் கதையை பிரதமர்களின் பங்களிப்புகள் மூலமாக அருங்காட்சியகம் விளக்குகிறது.

## ஐ.நா. பொதுச் செயலருடன் ஜெய்சங்கர் சந்திப்பு

- இந்தியா, அமெரிக்கா இடையே அமைச்சர்கள் அளவிலான 2+2 பேச்சுவார்த்தை அண்மையில் வாஷிங்டனில் நடைபெற்றது. இதில் பங்கேற்க அமைச்சர் ஜெய்சங்கர் அமெரிக்கா சென்றிருந்தார். இதையடுத்து நியூயார்க் நகரில் ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ்ஸை அவர் நேரில் சந்தித்தார்.

## அரசுக்கு உத்வேகம் அளிக்கும் அம்பேத்கரின் சிந்தனைகள்

- நாடாளுமன்ற வளாகத்தில் அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு அவரது உருவப்படத்துக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், குடியரசு துணைத் தலைவர் எம்.வெங்கையா நாயுடு, பிரதமர் மோடி, மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அம்பேத்கரின் உருவப் படத்துக்கு தலைவர்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

## 'பஞ்சாயத்துகள் சொந்த வருவாய் ஆதாரத்தைப் பெருக்க வேண்டும்"

- சுதந்திரத்தின் அமுதப் பெருவிழாவை முன்னிட்டு நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை ஊராட்சிகள் அளவில் செயல்படுத்த எடுக்க வேண்டிய பல்வேறு நடவடிக்கைகள் தேசிய மாநாடு தில்லியில் நடைபெற்று வருகிறது. இதில் பஞ்சாயத்துகளில் நிறைவேற்றிட 9 முக்கிய ஆய்வுக் கருப்பொருள்கள் குறித்து

விவாதிக்கப்படுகிறது. இந்தத் தொடர் கூட்டத்தில் கிராமப் பஞ்சாயத்துகளில் சொந்த மூல வருவாயைப் பெருக்குதல் குறித்து மத்திய பஞ்சாயத்துராஜ் துறைச் செயலர் சுனில் குமார் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது.

- அப்போது சுனில் குமார் பேசுகையில், 'கிராம பஞ்சாயத்துகள் தங்கள் சொந்த வருவாய் ஆதாரத்தை மேம்படுத்த வேண்டும். இது அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப பயன்படுத்த உதவும். நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்படி, மத்திய, மாநில அரசுகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்கிறது. இருப்பினும், நீடித்த நிலையான வளர்ச்சியை அடைய இந்த ஆதாரங்களை அதிகரிப்பது அந்த இலக்குகளை அடைய பெரிதும் உதவும். வேலை வாய்ப்புகள் கொண்டு வறுமையைப் போக்குதல், தன்னிறைவு, உள்கட்டமைப்பு, நல்லாட்சி போன்ற இலக்குகளை அடைய முடியும்' என்றார்.

## சவால்களை வாய்ப்புகளாக மாற்றிய ஹிமாசல பிரதேசம்: பிரதமர் மோடி

- ஹிமாசல பிரதேச மாநிலம் உருவாக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் அந்த மாநில மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். தனது வாழ்த்துச் செய்தியில் அவர் கூறியிருப்பது: சுதந்திரத்தின் 75வது ஆண்டும், ஹிமாசல பிரதேசத்தின் 75–ஆவது ஆண்டும் ஒரே நேரத்தில் வந்திருப்பது மகிழ்ச்சி. உறுதியான துடிப்புமிக்க மக்களைக் கொண்ட இந்த அழகான மாநிலத்துடன் எனக்கு நீண்டகால தொடர்பு உண்டு. ஹிமாசல பிரதேச மக்கள் சவால்களை வாய்ப்புகளாக மாற்றியுள்ளனர்.

## ஏர் இந்தியா நிறுவனத்தின் உயர்நிலை நிர்வாக குழு மாற்றியமைப்பு

- ஏர் இந்தியாவின் உயர்நிலை நிர்வாக குழுவை அந்த நிறுவனத்தின் தலைவர் என்.சந்திரசேகரன் மாற்றியமைத்தார்.
- நஷ்டத்தில் இயங்கி வந்த ஏர் இந்தியா நிறுவனத்தை டாடா சன்ஸ் நிறுவனம் அண்மையில்கையகப்படுத்தியது.இந்த நிலையில், டாடா சன்ஸ் தலைவர் என்.சந்திரசேகரன் ஏர் இந்தியாவின் உயர்மட்ட நிர்வாக குழுவில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார்.

## தற்சார்புக்கு இதுதான் தருணம்

- ஹனுமன் ஜெயந்தியையொட்டி குஜராத்தின் சௌராஷ்டிரா பகுதியில் உள்ள பரம் பூஜ்ய கேசவானந்த் ஆசிரமத்தில், 108 அடி உயரமுள்ள ஹனுமன் சிலையை பிரதமர் மோடி காணொலி வாயிலாக திறந்துவைத்தார்.
- நம் நாட்டு மக்களால் தயாரிக்கப்பட்ட பொருள்களை மட்டுமே வீடுகளில் பயன்படுத்த வேண்டும். அதன் காரணமாக, நாட்டில் ஏராளமானோருக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும். வெளிநாட்டுப் பொருள்களை நாம் விரும்பலாம். ஆனால், உள்ளூர் மக்கள் உழைப்புக்கு அந்தப் பொருள்கள் என்றும் ஈடாகாது. மக்கள் அடுத்த 25 ஆண்டுகளுக்கு உள்ளூர் பொருள்களை மட்டுமே பன்படுத்தினால், நாட்டில் வேலையின்மை பிரச்னை இருக்காது.

## தொலை மருத்துவ சேவைக்கு மக்களிடம் வரவேற்பு

- நாடு முழுவதும் 1,17,400 ஆயுஷ்மான் பாரத்–சுகாதார, நலவாழ்வு மையங்கள் இயங்கி வருகின்றன. அதை வரும் 2022–ஆம் ஆண்டு டிசம்பருக்குள் 1,50,000–ஆக அதிகரிக்கும் நோக்கத்துடன் மத்திய அரசு உள்ளது.
- ஆயுஷ்மான் பாரத்–சுகாதார, நலவாழ்வு மையங்களின் மூலம், மார்ச் 31–ஆம் தேதி வரை 17.93 கோடி பேருக்கு உயர் ரத்த அழுத்த பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. 30 வயதுக்கு மேற்பட்ட 15 கோடி பேருக்கு நீரிழிவு பரிசோதனை செய்யப்பட்டது.
- இ–சஞ்சீவனி என்ற வலைத்தளம் மூலம் தொலை மருத்துவ சேவையும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த வலைத்தளம் மூலமாக, கடந்த 4 ஆண்டுகளில் 2.48 கோடி பேர் தொலை மருத்துவ ஆலோசனை பெற்றுள்ளனர்.

## பொது நிர்வாகத்துக்கான பிரதமர் விருதுக்கு "உடான்" திட்டம் தேர்வு

- தலைசிறந்த பொது நிர்வாகத்துக்கான பிரதமரின் விருதுக்கு விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் உடான் திட்டம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- நகரங்களுக்கு இடையே விமானப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்த உடான் திட்டத்தை சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் அறிமுகம் செய்தது. 2020–ஆம் ஆண்டுக்கான பொது நிர்வாகப் பிரிவில் சிறந்த திட்டத்திற்கான பிரதமரின் விருதுக்கு இந்தத் திட்டம், தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- மத்திய அரசின் புதுமைக் கண்டுபிடிப்புப் பிரிவின்கீழ் இந்த விருது வழங்கப்பட உள்ளது. குடிமைப்பணியாளர் தினமான ஏப்ரல் 21–ஆம் தேதி, தில்லி விஞ்ஞான் பவனில் நடைபெறும் விழாவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்துக்கு இந்த விருது வழங்கப்படும்.
- மத்திய, மாநில அரசு நிறுவனங்களிலும் மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படும் புதுமையான திட்டங்களை அங்கீகரித்து, பெருமைப்படுத்தும் விதமாக, தலைசிறந்த பொது நிர்வாகத்துக்கான விருதை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

## இந்தியாவில் உருவாகிவரும் குளிர்பதன வசதி தேவையில்லாத கரோனா தடுப்பூசி

- குளிர்சாதன பெட்டி அல்லது குளிர்பதன வசதி தேவையில்லாத வகையில், இந்தியாவில் உருவாக்கப்பட்டு வரும் கரோனா தடுப்பூசி டெல்டா, ஒமைக்ரான் உள்பட பல்வேறு வகையான கரோனா தீநுண்மிகளுக்கு எதிராக திறம்பட செயல்வடுவது ஆய்வில் தெரியவந்துள்ளது.
- கர்நாடக மாநிலம் பெங்களூரில் உள்ள மைன்வாக்ஸ் ஆய்வகம் குளிர்சாதன பெட்டி அல்லது குளிர்பதன வசதி மூலம் சேமித்து வைக்க வேண்டிய அவசியமில்லாத வகையில், புதிதாகக் கரோனா தடுப்பூசி ஒன்றை உருவாக்கி வருகிறது.
- பிற தடுப்பூசிகளுடன் ஒப்பிடுகையில், இந்தத் தடுப்பூசி தனித்துவம் வாய்ந்தது. இந்தத் தடுப்பூசியை 37 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் 4 வாரங்களுக்கு, 100 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் ஒன்றரை மணி நேரம் வரையும் வைத்திருக்க முடியும்.
- இந்தத் தடுப்பூசியடன் ஒப்பிடும்போது, ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள இதர தடுப்பூசிகளில் பெரும்பாலானவற்றை கட்டாயம் குளிர்பதன வசதி மூலம் சேமித்தாக வேண்டும். குறிப்பாக ஃபைஸர் தடுப்பூசியை மைனஸ் 70 டிகிரி செல்சியஸில் வைத்திருக்க வேண்டும்.
- மைன்வாக்ஸ் ஆய்வகம், காமன்வெல்த் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி அமைப்பு என்ற ஆஸ்திரேலிய அரசு அமைப்பின் விஞ்ஞானிகள் இணைந்து புதிய தடுப்பூசியை ஆய்வுக்குள்படுத்தினர்.

## எல்ஐசியில் 20% அந்நிய நேரடி முதலீட்டுக்கு சட்டத் திருத்தம்

- ஆயுள் காப்பீடு நிறுவனத்தின் (எல்ஐசி) பொதுப் பங்குகளை வாங்குவதில் 20 சதவீதம் அந்நிய நேரடி முதலீட்டுக்கு வழி வகுக்கும் வகையில் அந்நிய செலாவணி மேலாண்மைச் சட்டத்தில் (எஃப்இஎம்ஏ) மத்திய அரசு திருத்தங்களை மேற்கொண்டுள்ளது.

## பன்னாட்டு நிதியம், உலக வங்கிக் கூட்டம்: நிர்மலா சீதாராமன் அமெரிக்கா பயணம்

- பன்னாட்டு நிதியம் மற்றும் உலக வங்கியின் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார்.
- அவர் ஏப்ரல் 18–ஆம் தேதி முதல் அமெரிக்காவில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். இதையொட்டி, அவர் அரசுமுறைப் பயணமாக தில்லியிலிருந்து அமெரிக்கா புறப்பட்டுச்சென்றார். பன்னாட்டு நிதியம், உலக வங்கியின் கூட்டங்களில் அவர் பங்கேற்கிறார். மேலும், ஜி–20 உறுப்பு நாடுகளின் நிதியமைச்சர்கள் பங்கேற்கும் கூட்டங்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் கூட்டங்கள் ஆகியவற்றிலும் அவர் கலந்து கொண்டு பேசுகிறார். இந்தக் கூட்டங்களில் பங்கேற்கும் போது, இந்தோனேசியா, தென் கொரியா, இலங்கை, தென்னாப்பிரிக்கா உள்பட பல்வேறு நாடுகளின் அமைச்சர்களுன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளிலும் அவர் ஈடுபடுகிறார்.

## இந்தியா வந்தார் மோரீஷஸ் பிரதமர் பிரவிந்த் குமார் ஜக்நாத்

- மோரீஷஸ் பிரதமர் பிரவிந்த் குமார் ஜக்நாத் 8 நாள் பயணமாக இந்தியா வந்துள்ளார்.
- மோரீஷஸ் பிரதமர் பிரவிந்த் குமார் ஜக்நாத், தனது மனைவி கோபிதா ஜக்நாத்துடன் மும்பை வந்தடைந்தார். அவர் குஜராத் செல்லவுள்ளார். அங்கு ஜாம்நகரில் உலகளாவிய பாரம்பரிய மருத்துவ மைய அடிக்கல் நாட்டு விழாவில், அவர் பங்கேற்கவுள்ளார். ஏப்.20–ஆம் தேதி காந்திநகரில் நடைபெறும் உலகளாவிய ஆயுஷ் முதலீடு மற்றும் புதுமையான கண்டுபிடிப்புகள் மாநாட்டில் கலந்து கொள்வுள்ளார்.

## தற்சார்பு இந்தியா திட்டத்துக்கு வலுசேர்க்கும் கைவினைப்பொருள் கண்காட்சிகள்

- நாட்டில் கைவினைப் பொருட்கள் கண்காட்சி போன்ற முன்முயற்சிகள், தற்சார்பு இந்தியா இயக்கத்துக்கு வலுசேர்க்கின்றன என்று மத்திய தகவல், ஒளிபரப்புத்துறை அமைச்சர் அனுராக் தாக்குர் கூறினார்.
- மும்பையில்பாந்த்ரா–குர்லாவளாகம் பகுதியில் உள்ள எம்எம்ஆர்டிஏ மைதானத்தில் 40–ஆவது கைவினைப் பொருள்கள் கண்காட்சியை மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் முக்தார் அப்பாஸ் நக்வி முன்னிலையில் அனுராக் தாக்குர் தொடக்கிவைத்தார்.
- இந்த கைவினைப் பொருள் கண்காட்சில் 31 மாநிலங்களில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட கலைஞர்கள், கைவினைஞர்கள் 400 அரங்குகளை அமைத்துள்ளனர்.
- நாட்டில் திறமைக்கு குறைவில்லை. கரோனா நெருக்கடி காலத்தில் தற்சார்பு இந்தியா இயக்கத்தை உருவாக்கவதற்காக பிரதமர் விடுத்த அழைப்புக்கு வியக்கத்தக்க அளவில் வரவேற்பு கிடைத்தது.

## ராணுவ தலைமைத் தளபதியாகிறார் மனோஜ் பாண்டே

- இந்திய ராணுவப் படையின் தலைமைத் தளபதியாக லெப்டினென்ட் ஜெனரல் மனோஜ் பாண்டே நியமிக்கப்பட்டுள்ளார். மே 1–ஆம் தேதி அப்பதவியை அவர் ஏற்கவுள்ளார்.
- ராணுவத் தலைமைத் தளபதியாக எம்.எம். நரவணே பதவி வகித்து வருகிறார். அவரது பதவிக்காலம் ஏப்ரல் 30–ஆம் தேதியுடன் நிறைவடைகிறது. இந்நிலையில், ராணுவத்தின் 29–ஆவது தலைமைத் தளபதியாக மனோஜ் பாண்டே நியமிக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்தது.
- ராணுவத்தின் பொறியாளர்கள் படைப்பிரிவில் இருந்து தலைமைத் தளபதியாகப் பதவி வகிக்கவுள்ள முதல் நபர் என்ற சிறப்பையும் மனோஜ் பாண்டே பெற்றுள்ளார். தேசிய பாதுகாப்பு அகாதெமியில் பயிற்சி பெற்ற மனோஜ் பாண்டே, ராணுவத்தின் பொறியாளர்கள் படைப்பிரிவில் 1982–ஆம் ஆண்டு இணைந்தார்.
- நாடாளுமன்றத்தின் மீது 2001–ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு பாகிஸ்தான் எல்லையில் படைகளும் போர்த் தளவாடங்களும் அதிக எண்ணிக்கையில் குவிக்கப்பட்டன. "ஆபரேஷன் பராக்ரம்" என்ற பெயரிலான அந்நடவடிக்கையின் போது பொறியாளர்கள் படைப்பிரிவுக்கு மனோஜ் பாண்டே தலைமை வகித்தார்.

## பாரம்பரிய மருத்துவத்துக்கு சர்வதேச முக்கியத்துவம்

- குஜராத்தின் ஜாம்நகரில் உலக சுகாதார நிறுவனத்தின் சர்வதேச பாரம்பரிய மருத்துவ மையத்துக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் உலக சுகாதார நிறுவனத்தின் இயக்குநர் டெட்ரோஸ் அதனோம், மோரீஷஸ் பிரதமர் பிரவிந்த் ஜக்நாத், குஜராத் முதல்வர் பூபேந்திர படேல், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா, மத்திய ஆயுஷ் அமைச்சர் சர்வானந்த சோனோவால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அப்போது, பிரதமர் மோடி பேசினார்.
- நாட்டின் 75–ஆவது சுதந்திர ஆண்டு கொண்டாடப்பட்டு வரும் நிலையில் நிறுவப்பட்டுள்ள அந்த மையமானது, பாரம்பரிய மருத்துவத்தை அடுத்த 25 ஆண்டுகளுக்குள் சர்வதேச அளவில் வளர்ச்சி அடையவைக்கும். உலக முழுவதையும் ஒரே குடும்பமெனக் கருதுவதே இந்தியர்களின் பாரம்பரியம். அக்குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் உடல்நலனுடன் இருக்கு வேண்டும்.
- 2023–ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டாக அறிவிக்க வேண்டுமென இந்தியா விடுத்த கோரிக்கையை ஐ.நா. ஏற்றுக் கொண்டுள்ளது. அதற்காக நன்றி தெரிவிக்கிறேன்.

## பால் உற்பத்தியில் இந்தியா முதலிடம்

- ஆண்டுக்கு ரூ.8.5 லட்சம் கோடி மதிப்புக்கு பால் உற்பத்தி செய்து, உலகிலேயே இந்தியா முதலிடத்தில் உள்ளதாகப் பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.
- பால் உற்பத்தி மதிப்பானது கோதுமை, அரிசி உற்பத்தி மதிப்பைவிட அதிகமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
- குஜராத்தின் பனாஸ்காந்தா மாவட்டத்தில் உள்ள தியோதர் என்ற இடத்தில் பால் பொருள்கள் வளாகத்தையும் உருளைக்கிழங்கு பதப்படுத்தும் ஆலையையும் பிரதமர் மோடி திறந்துவைத்தார்.
- பனாஸ் சமூக வானொலியின் செயல்பாட்டையும் பிரதமர் மோடி தொடக்கிவைத்தார். 100 டன் உற்பத்தித் திறன் கொண்ட 4 இயற்கை எரிவாயு ஆலைகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

- கூட்டுறவுபால்சங்கங்களானதுசிறுவிவசாயிகளை, முக்கியமாகப் பெண்களை வலுப்படுத்தி கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துகிறது. தற்போது பால் உற்பத்தியில் உலகிலேயே இந்தியா முதன்மை நாடாக விளங்குகிறது. ஆண்டுக்கு ரூ.8.5 லட்சம் கோடி மதிப்பிலான பாலை இந்தியா உற்பத்தி செய்து வருகிறது. கோடிக்கணக்கான விவசாயிகள் பால் உற்பத்தியை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர்.
- கோதுமை, அரிசி மூலமாகக் கிடைக்கும் வருவாய் கூட ரூ.8.5 லட்சத்தைத் தாண்டவில்லை. போதிய மழைப்பொழிவின்மை, நீர்ப்பாசன வசதியின்மை உள்ளிட்டவற்றால் பாதிக்கப்பட்டு வரும் சிறு விவசாயிகளே பால் துறையில் பெரும் பலனை அடைந்துள்ளனர். கால்நடைகளை வளர்த்து தங்கள் குடும்பத்தை அவர்கள் நிர்வகித்து வருகின்றனர்.

## ஏப்ரல் 24–இல் இந்தியா வருகிறார் ஐரோப்பிய ஆணையத் தலைவர்

- ஐரோப்பியஆணையத்தலைவர்உர்சுலாவாண்டர் லெயன் வரும் 24–ஆம் தேதி இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவிருக்கிறார். குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்களை அவர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்.

## பாரம்பரிய மருந்துகளுக்கு விரைவில் ஆயுஷ் குறியீடு

- "இந்தியாவில் பாரம்பரிய மருந்து உற்பத்தி நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில், உள்நாட்டில் தயாரிக்கப்படும் ஆயுஷ் பொருள்களின் தரம் மற்றும் நம்பகத்தன்மைக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் அவற்றின் மீது ஆயுஷ் குறியீடு பதிவிடும் நடைமுறை விரைவில் அறிமுகப்படுத்தப்படும்" என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
- மேலும், இந்தியாவில் ஆயுஷ் (ஆயுர்வேதம், யோகா, யுனானி, ஹோமியோபதி உள்ளிட்ட பாரம்பரிய சிகிச்சை) மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக வர விரும்பும் வெளிநாட்டினருக்கு "ஆயுஷ் விசா" (ஆயுஷ் நுழைவு அனுமதி) என்ற புதிய விசா நடைமுறையும் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்றும் பிரதமர் கூறினார்.
- குஜராத் மாநிலம், காந்திநகரில் உள்ள மகாத்மா மந்திரில் நடைபெற்ற "சர்வதேச ஆயுஷ் முதலீடு மற்றும் புதிய கண்டுபிடிப்புகள்" என்ற தலைப்பிலான 3 நாள் மாநாட்டை தொடக்கி வைத்து பிரதமர் மோடி பேசியதாவது:
- இந்தியாவின் தரமான நம்பகத்தன்மையுடைய ஆயுஷ் மருந்து பொருள்களை ஊக்குவிக்கும் வகையில் விரைவில் "ஆயுஷ் குறியீடு" அறிமுகப்படுத்தப்படும். நவீன தொழில்நுட்பங்கள் மூலம் பரிசோதிக்கப்பட்ட பிறகே பாரம்பரிய மருந்துப் பொருள்கள் மீது இந்த ஆயுஷ் குறியீடு பதிவிடப்படும். அதன்மூலம் உலக மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்த முடியும் என்பதோடு, தரமான ஆயுஷ் பொருள்களை அவர்கள் வாங்குவதையும் உத்தரவாதப்படுத்த முடியும்.
- பாரம்பரிய மருத்துவ முறை கேரள மாநிலத்தில் சுற்றுலாவை ஊக்குவிக்க உதவியிருக்கிறது. இந்த சக்தி இந்தியா முழுமையும், நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் உள்ளது. "இந்தியாவில் குணப்படுத்துதல்" என்பது இந்தத் தசாப்தத்தின் மிகப்பெரிய அடையாளமாக (பிராண்ட்) மாறியுள்ளது. ஆயுர்வேதம், யுனானி, சித்தா உள்ளிட்ட பாரம்பரிய சிகிச்சை மையங்கள் மிகுந்த பிரபலமடைந்து வருகின்றன. இதனை மேலும் ஊக்குவிக்கும் வகையில், இந்தியாவில் இந்தப் பாரம்பரிய சிகிச்சை பெறுவதற்காக வர விரும்பும் வெளிநாட்டினருக்கு "ஆயுஷ் விசா" என்ற சிறப்பு விசா நடைமுறையும் அறிமுகப்படுத்தப்படும்.
- முதலீடு அதிகரிப்பு: ஆயுஷ் மருந்துகள், அழகு சாதன பொருள்கள் உற்பத்தி எதிர்பாரத வகையில் வளர்ந்து வரும் சூழலில், இந்தத் துறையில் முதலீடுகளுக்கும் புதிய கண்டுபிடிப்புகளுக்கும் வாய்ப்புகள் பன்மடங்காக அதிகரித்து வருகின்றன. 2014–ஆம் ஆண்டுக்கு முன்பாக ஆயுஷ் துறையில் முதலீடு ரூ.22,800 கோடிக்கும் குறைவாக இருந்தது. ஆனால், இன்றைக்கு முதலீடானது ரூ.1,36,80 கோடியைக் கடந்துள்ளது.
- "பாரம்பரிய மருந்துகள் துறையில் புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஊக்குவிக்க நீண்டகால திட்டமிட்ட முதலீடுகள் அவசியம் என்பதோடு அரசின் ஆதரவும் அவசியம்" என்று உலக சுகாதார நிறுவனத்தின் இயக்குநர் டெட்ரோஸ் அதனோம் கேப்ரியேசஸ் வலியுறுத்தினார்.
- குஜராத் மாநிலம், காந்திநகரில் நடைபெற்ற மாநாட்டில் அவர் பேசும்போது, "பாரம்பரிய மருந்துகள் மற்றும் மருத்துவ முறைகளை நீடித்த வகையிலும், சுற்றுச்சூழலைப் பாதிக்காத வகையிலும், அனைவருக்கும் சமமான பலன் கிடைக்கக்கூடிய வகையிலும் மேம்படுத்த முதலீட்டாளர்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் அரசின் ஆதரவு மிக அவசியம். இந்தப் பாரம்பரிய மருந்துப் பொருள்களை சந்தைக்கு கொண்டுவரும்போது, அதன் உற்பத்தியில் அங்கம் வகித்து, அறிவைப் பகிர்ந்த சமூகத்தினரும் பயனடைவதை நாம் உறுதிப்படுத்த வேண்டும்" என்றார் அவர்.

- உலக சுகாதார நிறுவனத்தின் இயக்குநர் டெட்ரோஸ் அதனோம் கேப்ரியேசஸீக்கு "துளசிபாய்" என்ற பெயரிட்டு பிரதமர் நரேந்திர மோடி அழைத்தார்.
- குஜராத் மாநிலம் காந்திநகரில் நடைபெற்ற சர்வதேச ஆயுஷ் முதலீடு மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் தொடர்பான மாநாட்டில் பங்கேற்ற டெட்ரோஸ் அதனோம் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டதன் பெயரில், இந்த குஜராத்தி பெயரை பிரதமர் அவருக்கு சூட்டினார்.

## பிஎல்ஐ திட்டத்தின் கீழ் ட்ரோன் உற்பத்தி: தமிழகத்தைச் சேர்ந்த 2 நிறுவனங்கள் தேர்வு

- இந்தியாவில் ட்ரோன் (ஆளில்லா சிறிய விமானம்) மற்றும் அதன் உதிரிபாகங்களின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக, உற்பத்தி சார்ந்த ஊக்குவிப்புத் திட்டத்தின் (பி.எல்.ஐ) கீழ் 14 நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் இரு நிறுவனங்கள் தமிழகத்தைச் சேர்ந்தவை.
- இதுதொடர்பாக, விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:
- ட்ரோன்கள் உற்பத்திக்காக தமிழகத்தைச் சேர்ந்த 'தக்ஷா அன் மேன்டு சிஸ்டம்ஸ்' உள்பட 5 நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. ட்ரோன் உதிரிபாகங்கள் உற்பத்திக்காக, தமிழகத்தைச் சேர்ந்த 'ஜுப்பா ஜியோ நேவிகேஷன் டெக்னாலஜிஸ்' உள்பட 9 நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

## 2047–க்குள் இந்தியா அதிக வருமானம் பெறும் நாடாக மாற வேண்டும்: நீதி ஆயோக்

- 2047–ஆம் ஆண்டுக்குள் இந்தியா அதிக வருவாய் கொண்ட நாடாக மாற வேண்டும் என நீதி ஆயோக் தலைமைச் செயல் அதிகாரி அமிதாப் காந்த் தெரிவித்தார்.
- இதுகுறித்து அவர் மேலும் கூறியது: இந்தியாவின் தனிநபர் வருமானம் சுமார் 2,000 டாலராகும் (இந்திய மதிப்பில் ரூ.1.50 லட்சம்). தனியார் துறையின் அதிகாரத்தை பயன்படுத்திக் கொள்ளப்படும் பட்சத்தில் இந்தியா அதிக வருவாய் கொண்ட நாடாக உருவெடுக்கும்.
- 1947–இல் தென்கொரியா, சீனா, இந்தியா ஆகியவற்றின் தனிநபர் வருவாய் என்பது ஏறக்குறைய சமமாகவே இருந்தது. ஆனால், 75 ஆண்டுகளுக்குப் பிறகு தென்கொரியாவின் தனிநபர் வருமானம் இந்தியாவைக் காட்டிலும் 7 மடங்கு அதிகம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இதற்கு, அந்த நாடுகள் 10 சதவீத வளர்ச்சியை பதிவு செய்ததே முக்கிய காரணம்.
- இந்தியா அதிக விகிதத்தில் வளர்ச்சி அடையாவிட்டால் குறைந்த வருமான வளர்ச்சி சுழலில் சிக்க வேண்டியிருக்கும் என்றார்.

## உலகுக்கு வழிகாட்டும் இந்தியா–பிரிட்டன்

- குஜராத்தின் ஹலோல் பகுதியில் புதிய ஜேசிபி தயாரிப்பு ஆலையை பிரதமர் போரிஸ் ஜான்சன் திறந்து வைத்தார்.
- குஜராத்உயிரிதொழில்நுட்பப்பல்கலைக்கழகத்தில் கட்டப்பட்டுள்ள புதிய வளாகத்தை பிரதமர் போரிஸ் ஜான்சன் நேரில் பார்வையிட்டார். தலைநகர் காந்திநகரில் உள்ள அக்ஷர்தாம் கோயிலிலும் அவர் வழிபாடு நடத்தினார்.
- 'பருவநிலை மாற்ற விளைவுகளை எதிர்கொள்வது, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாடு, பசுமை ஹைட்ரஜன், நீடித்த வளர்ச்சி ஆகியவற்றில் இந்தியா–பிரிட்டன் நிறுவனங்கள் ஒருங்கிணைந்து பணியாற்றும். பாதுகாப்பு, விமானத் தொழில்நுட்பங்களை உருவாக்க பிரிட்டன் நிறுவனங்களுடன் இணைந்து அதானி குழுமம் பணியாற்றும்" என்று குறிப்பிட்டுள்ளார்.
- குஜராத்தின் சபர்மதி ஆசிரமத்துக்கு வருகை தந்த முதல் பிரிட்டன் பிரதமர் என்ற சிறப்பை போரிஸ் ஜான்சன் பெற்றார். அங்கு தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகள் சிலைக்கு மாலை அணிவித்து அவர் மரியாதை செலுத்தினார்.

## நாட்டுக்கு முன்னுரிமை அளித்து¬ பணியாற்ற வேண்டும்

- ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 21–ஆம் தேதியானது தேசிய குடிமைப் பணிகள் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. நாட்டின் முதல் உள்துறை அமைச்சரான வல்லபாய் படேல், 1947–ஆம் ஆண்டு அதே நாளில் பயிற்சியை முடித்த ஐஏஎஸ் அதிகாரிகளிடம் உரையாற்றினார். அந்த தினத்தை நினைவுகூரும் வகையில் குடிமைப் பணிகள் தினம் கொண்டாடப்படுகிறது.
- குடிமைப் பணி அதிகாரிகள் மக்களுக்காக சேவையாற்ற வேண்டிய தங்கள் உறுதியை வலுப்படுத்திக் கொள்ளவும், மக்கள் சேவையில் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் நோக்கிலும் இந்த தினம் கொண்டாடப்படுகிறது. நடப்பாண்டுக்கான குடிமைப் பணிகள் தின விழா தில்லியில் கொண்டாடப்பட்டது.

- தில்லியில் நடைபெற்ற குடிமைப் பணிகள் தின விழாவில், பொது நிர்வாகத்தில் சிறப்பாக பணியாற்றியமைக்காக "பிரதமர் விருதை" உத்தரகாண்ட் மாநிலம், சமோலி மாவட்ட ஆட்சியர் ஸ்வாதி பதௌரியாவுக்கு வழங்கினார் பிரதமர் நரேந்திர மோடி.

## மின்சார வாகனங்களில் மின்னூட்டலுக்கு பதிலாக மாற்று மின்கலங்கள்

- மின்சார வாகனங்களுக்கான மின்கலங்கள், வரைவுக் கொள்கையை நிதி ஆயோக் வெளியிட்டுள்ளது. மின்சார வாகனங்கள் மின்னூட்டல் செய்யப்படுவதற்குப் பதிலாக எந்தவொரு தனிநபரும் அல்லது நிறுவனமும் எந்த இடத்திலும் மின்கலத்தை மாற்றும் வசதிகளுக்கான மின்கல நிலையங்களை அமைப்பதே இந்தக் கொள்கையின் நோக்கமாகும்.
- இதற்கான குறிப்பிட்ட தொழில்நுட்பம், பாதுகாப்பு, செயல்திறன் தரநிலைகள் கடைப்பிடிக்கப்படும் என வெளியிடப்பட்டுள்ள இந்த வரைவு மின்கல மாற்றும் கொள்கையில் நிதி ஆயோக் தெரிவித்துள்ளது.
- மின்சார வாகனங்களுக்கு நகர்ப்புறங்களில் மின்னூட்டல் நிலையங்கள் (சார்ஜிங் ஸ்டேஷன்) அல்லது தனியார் குடியிருப்புப் பகுதிகளில் மின்னூட்டல் வசதி செய்யப்படுகிறது. இதில் சில நேரங்களில் தொழில்நுட்பப் பிரச்னைகள் ஏற்பட்டு, மின்னூட்டலின்போது விபத்துகள் நிகழ்கின்றன. மேலும், எதிர்காலத்தில் வாகனங்கள் அதிகரிக்கும் போது இதற்கான நிலையங்கள் அமைப்பதற்கான இட நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, வாகனங்களில் நேரடியாக மின்னூட்டல் செய்வதற்குப் பதிலாக ஏற்கெனவே மின்னூட்டல் செய்யப்பட்ட மின்கலங்களை வாகனங்களில் மாற்றிக் கொள்ளும் நடைமுறைகளுக்கு இந்தப் புதிய வரைவுக் கொள்கையை நிதி ஆயோக் வெளியிட்டுள்ளது. அதன்படி, எந்த இடத்திலும் மின்கலங்களை மாற்றும் நிலையத்தை அமைக்க அனுமதிப்பதாகும்.

## பாதுகாப்புத் துறையில் தற்சார்பு: இந்தியாவுக்கு ஆதரவு

- பாதுகாப்புத் துறையில் தற்சார்பு அடைவதற்கான இலக்கை இந்தியா அடைவதற்கு பிரிட்டன் போதுமான ஆதரவை வழங்கும் என்று பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் உறுதி அளித்தார்.
- நவீன போர் விமானங்களைத் தயாரிப்பதற்கான தொழில்நுட்பத்தை உருவாக்குவதில் இந்தியாவும் பிரிட்டனும் இணைந்து செயல்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
- இந்தியாவில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன், தில்லியில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேச்சு நடத்தினார். உக்ரைன் மீதான ரஷியாவின் போர், இந்தோ–பசிபிக் பிராந்தியம், சர்வதேச, பிராந்திய விவகாரங்கள் உள்ளிட்டவை குறித்து இருவரும் விவாதித்தனர்.
- இந்தியாவில் தயாரிக்க ஆதரவு: நவீன போர் விமானங்களைத் தயாரிப்பதற்கான தொழில்நுட்பத்தை உருவாக்குவதிலும், கடல்சார் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதிலும் இந்தியாவுடன் இணைந்து பிரிட்டன் பணியாற்றும். பாதுகாப்புத் துறையில் தற்சார்பு அடைய இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது. அதை அடைவதற்கு பிரிட்டன் ஆதரவளிக்கும்.

## வலுப்படுத்திக் கொள்வதைத் தவிர இந்தியாவுக்கு வேறு வழியில்லை

- அமைதி, பாதுகாப்பு, ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்குத் தன்னை வலுப்படுத்திக் கொள்வதைத் தவிர, இந்தியாவுக்கு வேறு வழியில்லை என்று பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
- பாதுகாப்புத் துறையில் உள்நாட்டு கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் நோக்கில், புதியதொழில் நிறுவனங்கள், பெரிய நிறுவனங்கள் மற்றும் ஆயுதப் படையைச் சேர்ந்தவர்களை ஒன்றிணைக்கும் டி.ஃப்கனெக்ட் 2.0 நிகழ்ச்சி தில்லியில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் ராஜ்நாத் சிங் கலந்துகொண்டு பேசினார்.

## காப்புரிமை பெற்ற மருந்துகள் உற்பத்தியை ஊக்குவிக்க அரசு திட்டம்

- இந்தியாவில் காப்புரிமை பெற்ற மருந்துகள் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் கொள்கை வகுப்பது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருகிறது என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா கூறினார்.
- மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உற்பத்தித் துறையின் 7–ஆவது சர்வதேச மாநாடு, தில்லியில் வரும் 25–ஆம் தேதி முதல் 27–ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதுதொடர்பான

அறிவிப்பை தில்லியில் மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது:

- பொதுப் பெயர் மருந்துகள் உற்பத்தியில் இந்தியா சர்வதேச மையமாகத் திகழ்கிறது. அதுபோலவே, காப்புரிமை பெற்ற மருந்துகள் தயாரிப்பிலும் இந்தியா முத்திரை பதிக்க வேண்டும்.
- இந்தியாவில் பொதுப் பெயர் மருந்துகளைத் தயாரிப்பதற்காக, அதிகபட்ச அளவாக 3500 நிறுவனங்களும் 10,500 தொழிற்சாலைகளும் உள்ளன.
- அமெரிக்காவில் பயன்படுத்தப்படும் 4 மாத்திரைகளில் ஒரு மாத்திரை இந்தியாவில் தயாரிக்கப்பட்டதாகும். உலக அளவில் பயன்படுத்தப்படும் 5 மாத்திரைகளில் ஒன்று இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.
- இந்தச் சூழலில், இந்தியாவில் காப்புரிமை பெற்ற மருந்துகள் தயாரிப்பை ஊக்குவிக்கவும், அதுதொடர்பாக கொள்கை வகுக்கவும் மத்திய அரசு திட்டமிட்டு வருகிறது.

## நீதி ஆயோக் துணைத் தலைவர் ராஜீவ் குமார் ராஜிநாமா

- நீதி ஆயோக் துணைத் தலைவர் ராஜீவ்குமார் ராஜீவ் குமார் ராஜிநாமா செய்தார். இதையடுத்து, புதிய துணைத் தலைவராக சுமன் கே. பெரியை மத்திய அரசு நியமித்துள்ளது.
- பொருளாதார நிபுணரான ராஜீவ் குமார், நீதி ஆயோக் துணைத் தலைவராக 2017, ஆகஸ்டில் பொறுப்பேற்றார்.
- வேளாண்மை, சொத்துகளைப் பணமாக்குதல், பங்கு விலக்கல், மின்சார வாகனங்கள் தொடர்பாக முக்கியப் பங்காற்றிய அவர், தனது பதவியை ராஜிநாமா செய்தார். அவரது ராஜிநாமா ஏற்கப்பட்டு, ஏப்ரல் 30–ஆம் தேதி விடுவிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய ஹஜ் கமிட்டி தலைவராக ஏ.பி. அப்துல்லா குட்டி தேர்வு

- இந்திய ஹஜ் கமிட்டி தலைவராக ஏ.பி. அப்துல்லா குட்டி தேர்வு செய்யப்பட்டுள்ளார். முதல் முறையாக இருபெண்கள் ஹஜ் கமிட்டி துணைத் தலைவர்களாகத் தேர்வாகியுள்ளனர்.

## புவி தினம்: விடியோ பதிவிட்ட பிரதமர்

- புவி தினத்தையொட்டி பூமித்தாய்க்கு நன்றி கூறும் விடியோ காட்சி ஒன்றை பிரதமர் நரேந்திர மோடிட்விட்டரில் பகிர்ந்துள்ளார்.
- 'பூமித்தாயின் அன்புக்கு நன்றி கூறும் விதமாகவும், பூமியை பாதுகாப்பதற்கான நமது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையிலும், புவி தினம் கொண்டாடப்படுகிறது' என்றும் அந்த பதிவில் பிரதமர் கூறியுள்ளார். நாம் வாழும் உலகில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்திலும், ஏற்கெனவே ஏற்பட்டுள்ள பாதிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா–செஷல்ஸ் உறுதி

- இந்திய பெருங்கடலின் தீவு நாடுகளில் ஒன்றான செஷல்ஸுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்ட இந்திய கடற்படைத் தலைமைத் தளபதி ஆர். ஹரிகுமார், அந்நாட்டுத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு உறுதியேற்கப்பட்டது.
- செஷல்ஸில் கடற்படைத் தலைமைத் தளபதி ஆர். ஹரிகுமார் கடந்த 21–ஆம் தேதி முதல் 23–ஆம் தேி வரை 3 நாள்கள் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டார்.

## ஜனநாயகத்தை வலுப்படுத்தும் உள்ளாட்சி அமைப்புகள்

- தேசிய ஊராட்சிகள் தினத்தையொட்டி ஜம்மு–காஷ்மீரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசியபோது, பிரதமர் நரேந்திர மோடி இவ்வாறு கூறினார்.
- ஊராட்சி அமைப்புகளுக்கு 73, 74–ஆவது சட்டத் திருத்தங்கள் வாயிலாக அரசமைப்புச் சட்ட அங்கீகாரம் 1992–ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. அந்தச் சட்டங்கள் 1993–ஆம் ஆண்டு ஏப்ரல் 24–ஆம் தேதி நடைமுறைக்கு வந்தன. அந்த நாளானது ஆண்டுதோறும் தேசிய ஊராட்சிகள் தினமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.
- நடப்பாண்டுக்கான தேசிய ஊராட்சிகள் தினம் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. ஜம்மு–காஷ்மீரின் சாம்பா மாவட்டத்தில் உள்ள பாலி கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பங்கேற்றார். அந்த நிகழ்ச்சியில் பனிஹால்–காஸிகுண்ட் இடையேயான 8.45 கி.மீ. நீள சுரங்கச் சாலை, பாலி கிராமத்தில் 500 கிலோ வாட் திறன் கொண்ட சூரியசக்தி மின்சார உற்பத்தி மையம் ஆகியவற்றையும் அவர் தொடக்கிவைத்தார்.

- ஜம்மு–காஷ்மீரின் பல்வேறு பகுதிகளில் 108 மக்கள் மருந்தகங்களைத் திறந்துவைத்த பிரதமர் மோடி, "ஸ்வாமித்வ" திட்டம் மூலமாகப் பலனடைந்தோருக்கான சான்றிதழ்களையும் வழங்கினார். மேலும், ராட்லே நீர் மின் திட்டம், குவார் நீர் மின் திட்டம், தில்லி–அமிருதசரஸ்–கத்ரா விரைவுச் சாலைத் திட்டம் ஆகியவற்றுக்கும் அடிக்கல் நாட்டினார். அந்நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது:
- ஜம்மு–காஷ்மீரில் தேசிய ஊராட்சிகள் தினம் கொண்டாடப்படுவதும், பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அங்கு ஜனநாயக கொள்கைகளும் வளர்ச்சியும் அதிகரித்து வருகின்றன. ஜம்மு–காஷ்மீரில் சுமார் ரூ.20,000 கோடி மதிப்பிலான திட்டங்கள் தொடக்கிவைக்கப்படும் அடிக்கல் நாட்டப்பட்டும் உள்ளன. இந்த திட்டங்கள் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும்.

## நாள்தோறும் ரூ.20,000 கோடி இணையவழி பணப் பரிவர்த்தனை

- பாபாசாஹேப் அம்பேத்கரின் பிறந்த தினமான ஏப்ரல் 14–ஆம் தேதி முன்னாள் பிரதமர்களுக்கான அருங்காட்சியகம் தில்லியில் திறந்து வைக்கப்பட்டது.
- மகாத்மா காந்தியடிகள், சர்தார் வல்லபாய் படேல், அம்பேத்கர், ஜெய்பிரகாஷ் நாராயண், நாட்டின் முதல் பிரதமர் ஜவாஹர்லால் நேரு ஆகியோர் குறித்த தகவல்களும் அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ளன.
- நாட்டின் 75–ஆவது சுதந்திர ஆண்டு கொண்டாட்டங்கள் மக்கள் இயக்கமாக மாறியுள்ளது.
- உலக அருங்காட்சியக தினம் மே 18–ஆம் தேதி கடைப்பிடிக்கப்படவுள்ளது.
- தற்போதைய சூழலில் நாட்டில் நாள்தோறும் சுமார் ரூ.20,000 கோடி அளவுக்கு இணையவழி பணப் பரிவர்த்தனை நடைபெறுகிறது. கடந்த மார்ச்சில் மட்டும் யுபிஐ வாயிலாக சுமார் ரூ.10 லட்சம் கோடி பரிவர்த்தனை செய்யப்பட்டது. நாட்டில் நிதிசார் தொழில்முனைவு நிறுவனங்களும் அதிகரித்து வருகின்றன.
- நாட்டின் 75–ஆவது சுதந்திர ஆண்டு கொண்டாடப்பட்டு வரும் நிலையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் 75 நீர்நிலைகள் உருவாக்கப்பட வேண்டும். அந்தந்த ஊரில் உள்ள இளைஞர்கள் இத்திட்டத்தை முன்னெடுத்துச் செயல்படுத்த வேண்டும்.

## 10 ஆண்டுகளில் 17 லட்சம் இந்தியர்களுக்கு ஹெச்ஐவி பாதிப்பு

- கடந்த 10 ஆண்டுகளில் 17 லட்சத்துக்கும் அதிகமான இந்தியர்கள் ஹெச்ஐவி நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.
- தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (ஆர்டிஐ) கீழ் கேட்கப்பட்ட கேள்விக்கு தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு அளித்த பதிலில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இருந்தபோதும், ஹெச்ஐவி நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கடந்த
- 10 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது. கடந்த 2011–12 –ஆம் ஆண்டில் பாதுகாப்பற்ற உடலுறவு முறை காரணமாக ஹெச்ஐவியால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2.4 லட்சமாக இருந்த நிலையில், 2020–21–ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 85,268–ஆக குறைந்திருப்பதும் தெரியவந்துள்ளது.
- இந்தியாவில் 2011 முதல் 2021–ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் 17,08,777 பேர் ஹெச்ஐவி தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தக் காலகட்டத்தில் ஹெச்ஐவியால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் ஆந்திர மாநிலம் முதலிடத்தில் உள்ளது. இந்த மாநிலத்தில் 3,18,814 பேர் பாதிக்கப்பட்டனர்.
- அதற்கு அடுத்தபடியாக மகாராஷ்டிரத்தில் 2,84,577 பேரும், கர்நாடகத்தில் 2,12,982 பேரும், தமிழகத்தில் 1,16,536 பேரும், உத்தர பிரதேசத்தில் 1,10,911 பேரும், குஜராத் மாநிலத்தில் 87,440 பேரும் ஹெச்ஐவி தொற்றால் பாதிக்கப்பட்டனர்.

## சுதந்திரத்துக்கு முன்பும் இந்தியாவுக்கு குரல் கொடுத்தவர் லதா மங்கேஷ்கர்

- பிரபல பின்னணி பாடகியான லதா மங்கேஷ்கர் கடந்த பிப்ரவரி மாதம் தனது 92–ஆவது வயதில் காலமானார். பாரத ரத்னா விருது பெற்ற அவருடைய நினைவாக, தேசக் கட்டுமானத்தில் தலைசிறந்து விளங்கும் தனி நபர்களை ஒவ்வொரு ஆண்டும் தேர்வு செய்து கௌரவிக்கும் வகையில் 'லதா தீனாநாத் மங்கேஷ்கர் விருது நிறுவப்பட்டது. தீனாநாத் மங்கேஷ்கர் லதாவின் தந்தையாவார்.
- மும்பையில் நடைபெற்ற அந்த விருது வழங்கும் விழாவில் பிரதமர் மோடிக்கு நாட்டின் முதல் 'லதா தீனாநாத் மங்கேஷ்கர் விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## ராணுவ செலவினத்தை 0.9% அதிகரித்துள்ள இந்தியா: சர்வதேச ஆய்வறிக்கையில் தகவல்

- ராணுவத்துக்கான செலவினத்தை 2021–ஆம் ஆண்டில் ரூ.5.86 லட்சம் கோடியாக இந்தியா அதிகரித்துள்ளது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 0.9 சதவீதம் கூடுதலாகும்.
- போர் மற்றும் ஆயுத கட்டுப்பாடு தொடர்பாக சர்வதேச அளவில் ஆய்வுகளை மேற்கொள்ளும் அமைப்பான "ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதிக்கான ஆராய்ச்சி நிறுவனம் (எஸ்ஐபிஆர்ஐ)" வெளியிட்ட ஆய்வறிக்கை மூலம் இந்தத் தகவல் தெரியவந்துள்ளது. அந்த ஆய்வறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:
- ராணுவத்துக்கு அதிக நிதி ஒதுக்குவதில் உலகிலேயே இரண்டாவது நாடான சீனா, 2021–ஆம் ஆண்டில் அந்நாட்டு பாதுகாப்புத் துறைக்கு ரூ.22.43 லட்சம் கோடி நிதியை ஒதுக்கியுள்ளது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 0.9 சதவீதம் கூடுதலாகும். 2012–ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 33 சதவீதம் கூடுதலாகும்.
- ராணுவத்துக்கு அதிக நிதி ஒதுக்கும் உலக நாடுகளில் இந்தியா மூன்றாமிடத்தில் உள்ளது.

## ஜாதிப் பாகுபாடுகளுக்கு எதிரானவர் நாராயண குரு

- கேரளத்திலுள்ள சிவகிரி மடத்தின் 90–ஆவது ஆண்டுவிழா மற்றும் பிரம்ம வித்யாலயத்தின் பொன்விழா, ஸ்ரீநாராயண தர்ம சங்கம் அறக்கட்டளை சார்பில் புதுதில்லியில் நடைபெற்றது. இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றுப் பேசியதாவது:
- நாராயண குருவின் உபதேசமான "ஒரு ஜாதி, ஒரு மதம், ஒரு தெய்வம்" கொள்கையை நாம் பின்பற்றினார் உலகில் எந்த சக்தியாலும் நம்மைப் பிரிக்க முடியாது. இந்தியர்கள் நாம் அனைவரும் இந்தியன் என்ற ஒரே ஜாதியையும், கடமை எனும் ஒரே ஜாதியையும், கடமை எனும் ஒரே மதத்தையும், பாரதத் தாய் என்ற ஒரே கடவுளையும் கொண்டவர்கள், ஒன்றுபட்ட இந்தியர்களுக்கு உலகில் சாத்தியமாகாத இலக்கு என்று எதுவும் இல்லை.

## டிஏபி உர மானியம் ரூ.2,501–ஆக அதிகரிப்பு

- ஒரு மூட்டை டிஏபி உரத்துக்கான மானியத்தை ரூ.2,501–ஆக அதிகரித்து மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- நடப்பாண்டில் கரீஃப் பருவமான ஏப்ரல் 1 முதல் செப்டம்பர் 30 வரை பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் உரங்களுக்கு ரூ.60,939 கோடி மானியம் அளிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இதில் உள்நாட்டு உரமான சிங்கிள் சூப்பர் பாஸ்பேட் (எஸ்எஸ்பி) உரத்துக்கு ஆதரவு, டை–அமோனியம் பாஸ்பேட் (டிஏபி) உரத்தின் உள்நாட்டு உற்பத்தி மற்றும் இறக்குமதிக்கு கூடுதல் உதவி ஆகியவையும் அடங்கும். கடந்த நிதியாண்டு முழுவதுமாக சுமார் ரூ.57,150 கோடி உர மானியம் அளிக்கப்பட்ட நிலையில், இந்த நிதியாண்டில் மானியம் உயர்த்தப்பட்டுள்ளது.
- ஒரு மூட்டை டிஏபி உரத்துக்கான மானியம் தற்போது ரூ.1,650–ஆக உள்ளது. இதனை ரூ.2,501–ஆக அதிகரித்து மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. உழவர்களுக்கு ஒரு மூட்டை டிஏபி உரம் தொடர்ந்து ரூ.1,350–க்கு விற்பனை செய்யப்படும்.
- **சாலையோர வியாபாரிகளுக்கு ரூ.8,100 கோடி:** பிரதமரின் சாலையோர வியாபாரிகள் தற்சார்பு திட்டம் 2024–ஆம் ஆண்டு டிசம்பர் வரை நீட்டிக்கப்பட்டள்ளது. அவர்களுக்கு வழங்குவதற்கான கடன் தொகை ரூ.8,100 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், இதுவரை 16.7 லட்சம் வியாபாரிகள் பயனடைந்துள்ளனர். 2024–ஆம் ஆண்டுக்குள் 40 லட்சம் வியாபாரிகள் பலனடைய வேண்டும் என்பதை மத்திய அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- **நகசல் பாதிப்புப் பகுதிகளில் 4ஜி சேவை:** நக்சல் பாதிப்புப் பகுதிகளில் 2ஜி கைப்பேசி சேவைதான் உள்ளன.
- அந்தப் பகுதிகளில் உள்ள 2,542 கைப்பேசி கோபுரங்களை 2ஜி சேவையிலிருந்து 4ஜி சேவைக்கு ரூ.2,426 கோடி செலவில் மேம்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த 2,542 கோபுரங்கள் ஆந்திரம், பிகார், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம், ஒடிஸா, மேற்கு வங்கம், உத்தர பிரதேசம், தெலங்கானா ஆகிய 10 மாநிலங்களில் உள்ளன. அந்தக் கோபுரங்களை பிஎஸ்என்எல் மேம்படுத்தி நிர்வகிக்கும்.

- **ஐபிபி வங்கிக்கு ரூ.820 கோடி கூடுதல் நிதி:** மத்திய அரசு கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் இந்தியா போஸ்ட் பேமென்ட்ஸ் வங்கி (ஐபிபிபி), நாட்டில் உள்ள 1.3 லட்சம் அஞ்சல் அலுவலகங்கள் வாயிலாக செயல்பட்டு வருகின்றன.
- **செனாப் நதியில் ரூ.4,526 கோடியில் நீர்மின் திட்டம்:** ஜம்மு–காஷ்மீரின் கிஷ்த்வார் மாவட்டத்தில் பாயும் செனாப் நதியில் ரூ.4,526 கோடி செலவில் குவார் நீர்மின் நிலையம் அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நிலையம் நான்கரை ஆண்டுகளில் கட்டமைக்கப்படும். இதன்மூலம் 1,975.54 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். இந்த நிலையம் வாயிலாக நேரடியாகவும், மறைமுகமாகவும் 2,500 பேர் வேலைவாய்ப்பு பெறுவர் என்று தெரிவித்தார்.
- கடந்த ஏப்ரல் 24–ஆம் தேதி ஜம்மு–காஷ்மீர் சென்றிருந்த பிரதமர் மோடி, அங்கு செனாப் நதியில் 850 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ரத்லே நீர்மின் திட்டம், 540 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட குவார் நீர்மின் திட்டம் ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டினார்.

## சிட்டாகாங் துறைமுகத்தை இந்தியா பயன்படுத்திக் கொள்ளலாம்

- இந்திய வெளியுறவுத் தறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் வங்கதேசத்துக்குப் பயணம் மேற்கொண்டார். தலைநகர் டாக்காவில் வங்தேச பிரதமர் ஷேக் ஹசீனாவை அவர் சந்தித்துப் பேசினார்.
- வங்கதேசத்தின் சிட்டாகாங் துறைமுகத்தை இந்தியா பயன்படுத்திக் கொள்ளலாம் என அவர் தெரிவித்தார். இதன் மூலம் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான அஸ்ஸாம், திரிபுராவுக்கும் வங்கதேசத்துக்கும் இடையிலான பிணைப்பு வலுப்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த 30 நிமிட சந்திப்பில் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

## சீர்திருத்தங்கள் குறித்து ஆலோசனைகள் வழங்க குழு

- வங்கிகள் மற்றும் இதர துறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து ஆலோசனைகளை வழங்குவதற்கு ஒரு குழுவை அமைக்குமாறு தொழில் துறையினரிடம் பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.
- குஜராத் மாநிலம், சூரத்தில் சர்வதேச பட்டிதார் சமூக தொழிலதிபர்களின் மாநாடு தொடங்கியது. 3 நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டை பிரதமர் மோடி காணொலி முறையில் தொடக்கி வைத்துப் பேசியதாவது:
- ஏழை குடும்பத்தைச் சேர்ந்த எவரும் தொழில் முனைவோராக உருவாவதற்கு உகந்த சூழலை ஏற்படுத்தித் தருவதற்கு மத்திய அரசு பாடுபட்டு வருகிறது.
- உற்பத்தி சார்ந்த ஊக்குவிப்புத் திட்டத்தையும் மத்திய அரசு அறிமுகம் செய்தது. அது, வழக்கமான துறைகளில் "இந்தியாவில் தயாரிப்போம்" திட்டத்தை உக்குவித்தது மட்டுமின்றி செமி கண்டக்டர் உற்பத்தி போன்ற புதிய தொழில்களுக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.
- முத்ரா கடனுதவி திட்டம், ஸ்டார்ட் அப் இந்தியா போன்ற திட்டங்கள் விரைவான தொழில் வளர்ச்சிக்கு உதவிகரமாக இருந்தன. கரோனா பெருந்தொற்று காலத்தில் முடங்கியிருந்த சிறு, குறு, தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்ததுடன் அந்தத் துறையை அரசு காப்பாற்றியது. அத்துடன் பலருக்கு மீண்டும் வேலைவாய்ப்புகளை அளித்தது.
- வங்கி மற்றும் இதர துறைகளில் கொண்டுவர வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து அரசுக்கு ஆலோசனைகளை வழங்குவதற்கு தொழில் முனைவோர் மற்றும் நிபுணர்களைக் கொண்ட ஒரு குழுவை நீங்கள் நியமிக்க வேண்டும்.

## 'ஸ்டார்ட்–அப் தொழிலுக்கு உகந்த சூழல்"

- உலக அளவில் வேகமாக வளர்ந்து வரும் ஸ்டார்ட்–அப் தொழிலுக்கு உகந்த சூழல் இந்தியாவில் உள்ளது என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.
- பெங்களூரில் தொடங்கிய செமிகான் இந்தியா–2022" மாநாட்டில் காணொலி வழியாகப் பங்கேற்று அவர் பேசியது: அடுத்த தொழில்நுட்பப் புரட்சிக்கு இந்தியா தலைமையேற்பதற்கான வழிவகைகளை வகுத்திருக்கிறோம். அகண்ட அலைவரிசையின் வழியாக 6 லட்சம் கிராமங்களை இணைப்பதற்கான பணிகள் நடந்து வருகின்றன. 5ஜி அகண்ட அலைவரிசை, இன்டர்நெட் ஆஃப் திங்க்ஸ், கிளீன் எனர்ஜி டெக்னாலஜிஸ் திறன்களை மேம்படுத்துவதற்காக முதலீடு செய்து வருகிறோம்.

- இந்தியாவின் உள்நாட்டு செமிகண்டக்டர்களின் நுகர்வு 2026–ஆம் ஆண்டுக்குள் 80 பில்லியன் டாலராக வளரும். மேலும், 2030–ஆம் ஆண்டுக்குள் 110 பில்லியன் டாலராக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உலக அளவில் வேகமாக வளர்ந்து வரும் ஸ்டார்ட்–அப் சூழல் இந்தியாவில் உள்ளதால், வலுவானபொருளாதார வளர்ச்சியை நோக்கி நாடு முன்னேறி வருகிறது. இதன்காரணமாக, ஒவ்வொரு வாரமும் புதிய 'யூனிகார்ன்' கள் உருவாகி வருகிறார்கள். உலக அளவிலான செமிகண்டக்டர் தொழில்நுட்ப விநியோக சங்கிலியின் முக்கியப் பங்குதாரராக இந்தியா உருவெடுக்க தொழில் துறையினர் முயற்சிமேற்கொள்ளவேண்டும். உயர்தொழில்நுட்பம், உயர்தரம், உயர் நம்பகத்தன்மை என்ற அடித்தளக் கொள்கைகளுடன் இந்தத் திசையை நோக்கி பயணிக்கத் தொடங்கியிருக்கிறோம்.

## பூடான் பிரதமருடன் ஜெய்சங்கர் சந்திப்பு

- பூடான் பிரதமர் லோட்டே ஷெரிங்கை இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் சந்தித்தார்.
- பூடான் தலைநகர் திம்பூவில் நடைபெற்ற இந்தச் சந்திப்பு தொடர்பாக ஜெய்சங்கர் ட்விட்டரில் வெளியிட்டார்.

# 7 சர்வதேச நிகழ்வு



## ரஷிய வெளியுறவு அமைச்சர் இந்தியா வருகை: பிரதமர் மோடியுடன் சந்திப்பு

- ரஷியவெளி வெளியுறவுத் துறை அமைச்சர் செர் கெய் லாவ் ரோவ் இருநாள் பயணமாக இந்தியாவுக்கு வந்தார்.

## உக்ரைன் போருக்கு விரைவில் முடிவு

- உக்ரைன் போருக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்தியா வந்துள்ள ரஷிய வெளியுறவுத் துறை அமைச்சர் செர்கேய் லாவ்ரோவிடம் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

## நேபாள பிரதமர் இந்தியா வருகை

- மூன்று நாள் அரசு முறைப் பயணமாக நேபாள பிரதமர் ஷேர் பகதூர் தேவுபா தில்லி வந்தார். அவருடன் அந்நாட்டு உயர் அதிகாரிகள் அடங்கிய குழுவும் வந்துள்ளது. பிரதமர் மோடியை பிரதமர் ஷேர் பகதூர் தேவுபா சந்தித்து ஆலோசனை நடத்துகிறார்.

## இந்தியா–துர்க்மெனிஸ்தான்நான்கு ஒப்பந்தங்களில் கையொப்பம்

- இந்தியாவும் துர்க்மெனிஸ்தானும் நிதி புலனாய்வு, பேரிடர் மேலாண்மை உள்பட 4 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டன.
- இந்திய குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த், துர்க்மெனிஸ்தான் அதிபர் பெர்திமுகமதோவை சந்தித்தார். அப்போது வர்த்தகம், எரிசக்தித் துறையில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதன் மூலம் இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்த இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர்.
- துர்க்மெனிஸ்தான் நாட்டுக்கு இந்திய குடியரசுத் தலைவர் சென்றிருப்பது இதுவே முதல்முறையாகும்.
- இருவரும் சந்தித்தபோது இருநாடுகளின் நல்லுறவு, பொருளாதார நலன்கள் குறித்து ஆலோசனை நடத்தினர். அத்துடன் பிற நாடுகள் குறித்தும், சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னைகள் குறித்தும் அவர்கள் கலந்துரையாடினர்.
- இந்தச் சந்திப்பு தொடர்பாக வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:
- இந்தியாவும் துர்க்மெனிஸ்தானும் தங்கள் பன்முக நல்லுறவை மேலும் வலுவாக்குவதில் தீவிர முயற்சிகள் மேற்கொள்ள ஒப்புக்கொண்டன. பொருளாதார உறவுகளே இரு தரப்பையும் வலுவானதாக்கும். இரு நாட்டு வர்த்தக உறவை விரிவுபடுத்துவதற்கு தொடர் நடவடிக்கைகள் எடுக்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

## பாகிஸ்தான் நாடாளுமன்றம் கலைப்பு

- பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் பரிந்துரையை ஏற்று நாடாளுமன்றத்தைக் கலைத்து அதிபர் அறிப் அல்வி உத்தரவிட்டார். நாடாளுமன்றத்துக்குப் புதிதாக தேர்தல் நடத்தவும் இம்ரான் கான் பரிந்துரை செய்துள்ளார்.
- முன்னதாக, இம்ரான் கானுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரானது எனக் கூறி நாடாளுமன்றத்தில் அவையின் துணைத் தலைவர் நிராகரித்தார்.

## சிங்கப்பூர் இரண்டாம் உலகப் போர் நினைவிடத்தில் இந்திய ராணுவ தலைமைத் தளபதி அஞ்சலி

- சிங்கப்பூரில் உள்ள கிரஞ்சி போர் நினைவிடத்தில் இரண்டாம் உலகப் போரின்போது உயிர் தியாகம் செய்த ராணுவ வீரர், வீராங்கனைகளுக்கு இந்திய ராணுவ தலைமைத் தளபதி எம்.எம். நரவணே அஞ்சலி செலுத்தினார்.

- இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானிய படையெடுப்பை எதிர்த்து சிங்கப்பூர், மலேசியாவுக்கு ஆதரவாக இந்தியா, இலங்கை, பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா உள்ளிட்ட நாடுகளின் ராணுவ வீரர், வீராங்கனைகள் போர்புரிந்து உயிர்நீத்தனர்.

## நெதர்லாந்தில் குடியரசுத் தலைவர்

- குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், அவரது மனைவி சவிதா கோவிந்தை நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாமில் தேசிய நினைவிடத்துக்கு அணிவகுப்பு மரியாதையுடன் அழைத்துச் சென்ற அந்நாட்டு பிரதமர் மார்க் ருட்டே. நெதர்லாந்துக்கு குடியரசுத் தலைவர் கோவிந்த் மூன்று நாள் பயணம் மேற்கொண்டுள்ளார்.

## ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலிலிருந்து ரஷியா நீக்கம்: பொதுச் சபை வாக்கெடுப்பை புறக்கணித்தது இந்தியா

- உக்ரைனில் ரஷிய படையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக புகார் எழுந்த நிலையில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரஷியாவுக்கு எதிராக ஐ.நா. பொதுச் சபையில் கொண்டுவரப்பட்ட இந்த தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை இந்தியா புறக்கணித்து நடுநிலை வகித்துள்ளது. கடந்த 2006–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலிலிருந்து நீக்கப்படும் இரண்டாவது நாடு ரஷியாவாகும். முன்னதாக, கடந்த 2011–ஆம் ஆண்டு இந்த அமைப்பிலிருந்து லிபியா நீக்கப்பட்டது.
- புச்சா நகர் படுகொலைகளைத் தொடர்ந்து, ஜெனீவாவை தலைமையிடமாக கொண்டு செயல்படும் 47 உறுப்பினர்கள் கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் இருந்து ரஷியாவை நீக்குவதற்கான தீர்மானத்தை,193 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. பொதுச்சபையில் அமெரிக்கா கொண்டு வந்தது.
- அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வாக்கெடுப்பில் 93 நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. 24 நாடுகள் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தன. இந்தியா உள்பட 58 நாடுகள் வாக்களிப்பைப் புறக்கணித்தன. தீர்மானத்துக்குப் பெரும்பான்மை ஆதரவு கிடைத்ததையடுத்து, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலிலிருந்து ரஷியா நீக்கம் செய்யப்பட்டுள்ளது. முன்னதாக, வாக்கெடுப்பை புறக்கணித்தற்கான காரணம் குறித்து ஐ.நா.வுக்கான இந்திய தூதர் டி.எஸ். திருமூர்த்தி கூறுகையில், 'இந்த விவகாரத்தில் நடுநிலை வகிக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே வாக்கெடுப்பை இந்தியா புறக்கணித்துள்ளது' என்றார்.

## அமெரிக்க உச்சநீதிமன்றத்துக்கு முதல் கருப்பின பெண் நீதிபதி நியமனம்

- அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் நீதிபதியாக கருப்பினத்தைச் சேர்ந்த கேதன்ஜி பிரௌன் ஜாக்சனைநியமிக்க அந்நாட்டு நாடாளுமன்ற மேலவை ஒப்புதல் அளித்தது. அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் முதல் கருப்பின பெண் நீதிபதி என்ற பெருமையை இவர் பெறுகிறார்.
- வயோதிகம் காரணமாக நீதிபதி ஸ்டீபன் பிரெயர் ஓய்வு பெறுவதாக கடந்த ஜனவரியில் அறிவித்தார்.

## அஸ்ஸாம் பலாப்பழம் துபைக்கு ஏற்றுமதி

- அஸ்ஸாம் மாநிலம் பலாப்பழ ஏற்றுமதியை துபைக்கு தொடங்கியுள்ளது. இதுகுறித்த அதிகாரிகள் தெரிவித்துள்ளதாவது:
- அஸ்ஸாம் மாநிலத்தில் விளைவிக்கப்படும் பலாப்பழம் மற்றும் பச்சை மிளகாய் ஆகியவற்றுக்கு துபையில் வரவேற்பு அதிகமாக உள்ளது.
- இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளம் விதமாக, 1.5 டன் பலாப்பழம், 0.5 டன் பச்சை மிளகாய் ஆகியவை துபைக்கு முதல் கட்டமாக ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

## ஐ.நா. பொருளாதாரம்–சமூக கவுன்சிலின் 4 முக்கிய அமைப்புகளுக்கு இந்தியா தேர்வு

- ஐ.நா. பொருளாதாரம் மற்றும் சமூக கவுன்சிலின் 4 முக்கிய அமைப்புகளுக்கு இந்தியா தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- கடந்த 1945–ஆம் ஆண்டு ஐ.நா.பொருளாதாரம் மற்றும் சமூக கவுன்சில் நிறுவப்பட்டது. இது ஐ.நா. அமைப்பின் 6 முக்கிய உறுப்புகளில் ஒன்றாகும். ஐ.நா.வின் 54 உறுப்பு நாடுகளை இந்த கவுன்சில் உள்ளடக்கியுள்ளது.
- இந்நிலையில், ஐ.நா.வுக்கான இந்திய தூதரகம் ட்விட்டரில் வெளியிட்ட பதிவில், 'ஐ.நா. பொருளாதாரம் மற்றும் சமூக கவுன்சிலின் சமூக மேம்பாட்டு ஆணையம், தன்னார்வ

அமைப்புகளுக்கான குழு, அறிவியல் & தொழில்நுட்ப வளர்ச்சி ஆணையம் ஆகியவற்றுக்கு இந்தியா தேர்வாகியுள்ளது. இதுதவிர, பொருளாதாரம்–சமூகம்–பண்பாட்டு உரிமைகள் குழுவில் இடம்பெற இந்திய தூதர் ப்ரீத்தி சரண் மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஐ.நா. பொருளாதாரம் மற்றும் சமூக கவுன்சில்**

- தொடக்கம் – 1945
- தலைமையிடம் – நியூயார்க், USA
- உறுப்பு நாடுகள் – 54

## பாகிஸ்தான் புதிய பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப்

- பாகிஸ்தானின் 23–ஆவது பிரதமராக பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியின் தலைவர் ஷாபாஸ் ஷெரீஃப் தேர்வு செய்யப்பட்டார்.
- அதிபர் ஆரிஃப் ஆல்விக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதையடுத்து, பிரதமராக ஷாபாஸ் ஷெரீஃபுக்கு நாடாளுமன்ற மேலவை (செனட்) தலைவர் சாதிக் சஞ்ச்ரானி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

## ட்விட்டர் நிறுவனத்தை ரூ.3 லட்சம் கோடிக்கு வாங்கத் தயார்

- ட்விட்டர் நிறுவனத்தின் மொத்த பங்குகளையும் 41 பில்லியன் டாலருக்கு (சுமார் ரூ.3.12 லட்சம் கோடி வாங்குவதற்குத் தயாராக இருப்பதாக டெஸ்லாநிறுவனத்தின் தலைவர் எலான்மஸ்க் தெரிவித்துள்ளார்.

## சுதந்திரமான இந்தோ–பசிபிக் பிராந்தியத்துக்கு இந்தியா–அமெரிக்கா உறுதி

- இந்தியா–அமெரிக்கா இடையே பாதுகாப்புத் துறையில் நிலவி வரும் ஒத்துழைப்பை அனைத்து நிலைகளிலும் வலுப்படுத்துவது தொடர்பாக விவாதிக்கப்பட்டது. சுதந்திரமான, ஒருங்கிணைந்த இந்தோ–பசிபிக் பிராந்தியத்தை ஏற்படுத்துவதற்கு ஒத்துழைப்புடன் செயல்பட இருநாடுகளும் உறுதியேற்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- ஒயாஹு தீவில் அமைந்துள்ள அமெரிக்க ராணுவப் படைத்தளத்தையும் அமைச்சர் ராஜ்நாத் சிங் பார்வையிட்டார். அதையடுத்து ட்விட்டரில் அவர் வெளியிட்ட பதிவில், 'பாதுகாப்புத் துறையில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான நல்லுறவு கடந்தசில ஆண்டுகளாக வலுவடைந்து வருகிறது' என்று குறிப்பிட்டிருந்தார்.

## பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் ஏப்ரல் 21 இல் இந்தியா வருகை

- பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் ஏப்ரல் 21–ஆம் தேதி இந்தியா வருகிறார். பிரதமர் மோடியை சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து அவர் ஆலோசிக்கவுள்ளார்.

## எரிசக்தி பாதுகாப்புக்கு கூட்டு முயற்சி மூலம் தீர்வு: ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா வலியுறுத்தல்

- உக்ரைன் மீதான ரஷியாவின் ராணுவ நடவடிக்கை காரணமாக பல நாடுகளில் உணவு மற்றும் எரிபொருள்களின் விலை பன்மடங்காக உயர்ந்து வரும் சூழலில், 'தீவிர கவலைக்குரிய விஷயமாக மாறிவரும் எரிசக்தி பாதுகாப்புக்கு கூட்டு முயற்சி மூலமாக தீர்வு காணப்பட வேண்டும்' என்று ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்திய முதல்முறையாக வலியுறுத்தலை முன்வைத்துள்ளது.

## மீண்டும் அதிபராகிறார் இமானுவல் மேக்ரான்

- பிரான்ஸ் அதிபராக இமானுவல் மேக்ரான் மீண்டும் தேர்வு செய்யப்படுகிறார். நடைபெற்ற இறுதிக்கட்ட அதிபர் தேர்தலில் அவரது வெற்றி உறுதி செய்யப்பட்டது.
- பிரான்ஸ் அதிபர் தேர்தலின் முதல் சுற்று கடந்த 10–ஆம் தேதி நடைபெற்றது. அதில் யாருக்கும் 50 சதவீதத்துக்கும் மேலான பெரும்பான்மை கிடைக்காத நிலையில், முதல் இரு இடங்களைப் பிடித்த தற்போதைய அதிபர் மேக்ரானுக்கும், தீவிர வலதுசாரி கொள்கையைக் கொண்ட மரீன் லெபென்னுக்கும் இடையே இறுதிக்கட்ட தேர்தல் நடைபெற்றது.

## வர்த்தக, தொழில்நுட்ப மையம்: இந்தியா–ஐரோப்பிய யூனியன் முடிவு

- மாறிவரும் சர்வதேச சூழலை எதிர்கொள்ளும் நோக்கில் வர்த்தக, தொழில்நுட்ப மையத்தை அமைப்பதற்கு இந்தியாவும் ஐரோப்பிய யூனியனும் முடிவு செய்துள்ளன.
- குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தை சந்தித்துப் பேசிய ஐரோப்பிய யூனியன் தலைவர் உர்சுலா வான்டெர் லியென்.

## லௌரியஸ் விருது வென்றனர் வெர்ஸ்டாபென், எலெய்ன்

- விளையாட்டு உலகில் கௌரவமிக்கதாகக் கருதப்படும் லௌரியஸ் விருதுகள் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு அறிவிக்கப்பட்டன. ஸ்பெயினின் செவில்லே நகரில் இருந்து காணொலிக் காட்சி வழியே இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.
- சிறந்த வீரர் – மேக்ஸ் வெர்ஸ்டாபென்
- சிறந்த வீராங்கனை – எலெய்ன் தாம்சன் ஹெரா
- சிறந்த அணி – இத்தாலி கால்பந்து அணி
- சிறந்த திருப்புமுனை – எம்மா ரடுகானு
- சிறந்த மீண்டு வந்த போட்டியாளர் – ஸ்கை பிரவுன்
- சிறந்த மாற்றுத் திறனாளி போட்டியாளர் – மார்செல் ஹக்
- சிறந்த அதிரடி போட்டியாளர் – பெத்தானி ஷ்ரீவர்
- வாழ்நாள் சாதனையாளர் விருது – டாம் பிராடி
- தனித்துவ சாதனையாளர் விருது – ராபர்ட் லெவாண் டோவ்ஸ்கி
- சிறந்த அடையாள போட்டியாளர் – வாலென்டினோ ரோசி
- விளையாட்டு மூலம் நன்மை விருது – லாஸ்ட் பாய்ஸ் இன்க்
- சமூகப் பங்களிப்பு விருது – ரியல் மாட்ரிட் அறக்கட்டளை
- சிறந்த ஆதரவுக்கான விருது – ஜெரால்டு அசாமோவா மற்றும் "பிளாக் ஈகிள்ஸ்"

## உலகிலேயே அதிக வயதான ஜப்பான் பெண் மறைவு

- உலகின் அதிக வயதான நபராக கருதப்படும் ஜப்பானைச் சேர்ந்த பெண் தனது 119–ஆவது வயதில் உயிரிழந்தார்.
- ஜப்பானின் தென்மேற்கு நகரமான ஃபுகோடாவை சேர்ந்தவர் கேன் டனாக்கா. 1903, ஜனவரி 2–ஆம் தேதி பிறந்த இவர்தான் உலகிலேயே அதிக வயதான நபராக அறியப்பட்டவர். இதற்காக கின்னஸ் உலக சாதனை புத்தகத்திலும் 2019–ஆம் ஆண்டு இடம்பெற்றார்.
- தனது குடும்பத்தில் 9 பேரில் ஏழாவதாகப் பிறந்த டனாக்கா, தனது 19–ஆவது வயதில் திருமணம் செய்து கொண்டார். சாக்லெட் உள்ளிட்ட ருசியான உணவுகளை உண்பது, புதிய விஷயங்களை கற்றுக் கொள்வதுதான் தனது நீண்ட ஆயுளுக்கு காரணம் எனத் தெரிவித்தவர்.

## பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சராக பிலாவல் புட்டோ பதவியேற்பு

- பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் தலைமையிலான அமைச்சரவையில் வெளியுறவு அமைச்சராக பிலாவல் புட்டோ ஜர்தாரி பதவியேற்றுக் கொண்டார்.

வாய்மையே வெல்லும்

# 8 தமிழ்நாடு



## இந்திய புவியியல் ஆய்வுத்துறை புதிய தலைமை இயக்குநர் பொறுப்பேற்பு

- சென்னை, மாநிலக் கல்லூரியில் புவியியலில் முதுநிலைப் பட்டமும், லக்னௌ பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றுள்ளார். 1988–இல் இந்திய புவியியல் ஆய்வுத்துறையில் பணியில் சேர்ந்து, 30 ஆண்டுகளுக்கும் மேலாக இத்துறையில் பல்வேறு பொறுப்புகளை வகித்து திறம்பட செயலாற்றி வருகிறார்.

## மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டம்: ரூ.949.11 கோடி ஒதுக்கீடு

- 2021–22–ஆம் நிதியாண்டில் தமிழகத்துக்கான மனிதசக்தி நாள்கள் என்பது 27.20 கோடியில் இருந்து 31.14 கோடியாக அதிகரித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. ஊரக வேலை உ உறுதித் திட்டத்தில் நிர்வாகச் செலவுகளை மத்திய அரசானது முற்றிலும் ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும், பணியாளர்களுக்கான ஊதியத் தொகையில் மத்திய அரசானது 75 சதவீதத்தையும், மாநில அரசு 25 சதவீதத்தையும் பகிர்ந்து கொள்கின்றன.

### மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்திரவாத திட்டம்

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்திரவாத திட்டம் (Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme – MNREGS) என்றறியப்படும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்திரவாதச் சட்டம் (Mahatma Gandhi National Rural Employment Guarantee Act–MGNREGA) எனும் இந்தியச் சட்டமானது 2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 அன்று இயற்றப்பட்டது.
- 2009 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி எனும் சொல் இச்சட்டத்தின் முன்னொட்டாக இணைக்கப்பட்டது.
- இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள அரசு நெறிமுறைக் கொள்கைகளின் 41வது சரத்தின் கீழ் வரும் வேலைக்கான உரிமையை ஆதாரமாகக் கொண்டது.
- இச்சட்டமானது கிராமப்புற குடும்பங்களில் உள்ள திறன் சாரா உடல் உழைப்பில் ஈடுபட விருப்பமுள்ள அனைத்து வயது வந்த உறுப்பினர்களுக்கும் வருடத்திற்கு அதிகபட்சமாக 100 நாட்கள் ஊதிய வேலை வாய்ப்பிற்கு உத்திரவாதம் அளிக்கின்றது.
- இது ஊதியம் தேடுபவர்களால் வைக்கப்படும் வேலைக்கான கோரிக்கையால் உருவாகும் தேவையால் வழிநடத்தப்படும் ஒரு திட்டமாகும்.
- இச்சட்டமானதுப் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும் தன்னிச்சையான இலக்கு முறையின் மூலம் பயனாளிகளை தேர்ந்தெடுப்பதில் உள்ள பிரச்சினைகளை எதிர்கொள்கின்றது.
- இந்திய அரசின் ஊரக மேம்பாட்டு அமைச்சகமானது மாநில அரசுகளுடன் இணைந்து இச்சட்டத்தின் செயல்பாடுகளை கண்காணித்து வருகின்றது.
- உலக வங்கியானது அதன் 2014 ஆம் ஆண்டிற்கான "உலக மேம்பாட்டு அறிக்கையில்" இத்திட்டத்தினை "கிராமப்புற வளர்ச்சியின் மிகச்சிறந்த உதாரணம்" எனக் குறிப்பிட்டுள்ளது.

## தமிழகத்தில் சொத்து வரி உயர்வு

- மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளில் சொத்து வரியை உயர்த்தி தமிழக அரசு அறிவித்துள்ளது. இந்த உயர்வானது (2022–2023) உடனடியாக அமலுக்கு வருகிறது. குறைந்தபட்சம் 25 சதவீதம் முதல் அதிகபட்சம் 150 சதவீதம் வரை சொத்து வரி உயர்த்தப்பட்டுள்ளது.
- நகராட்சி, பேரூராட்சிகளில் உயர்வு விவரம்: நகராட்சிகள், பேரூராட்சிகளில் 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்புகளுக்கு 25 சதவீதமும், 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்புகளுக்கு 50 சதவீதமும், 1201 முதல் 1800 சதுர அடி வரை

பரப்பளவுள்ள குடியிருப்புகளுக்கு 75 சதவீதமும், 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்புகளுக்கு 100 சதவீதமும் சொத்து வரி உயர்த்தப்படுகிறது.

## 8.7 கோடி டன் சரக்குகளை கையாண்டு சென்னை, எண்ணூர் துறைமுகங்கள் சாதனை

- சென்னை மற்றும் எண்ணூர் காமராஜர் துறைமுகங்கள் இணைந்து கடந்த நிதியாண்டில் ஒட்டு மொத்தமாக சுமார் 8.7 கோடி மெட்ரிக் டன் சரக்குகளை கையாண்டு சாதனை படைத்துள்ளதாக துறைமுகத் தலைவர் சுனில் பாலிவால் சென்னையில் தெரிவித்தார்.
- சென்னை, எண்ணூர் காமராஜர் துறைமுகங்களின் கடந்த நிதியாண்டின் செயல்பாடுகள் குறித்து இருதுறைமுகங்களையும் நிர்வகித்து வரும் துறைமுகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் சுனில் பாலிவால் கூறினார்.

## 'சொத்து வரி உயர்வால் அரசுக்கு ரூ.1,750 கோடி கூடுதல் வருவாய்'

- தமிழகம் முழுவதும் சொத்து வரி உயர்வை அமல்படுத்துவதன் மூலம், ரூ.1,750 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும் என்று அரசுத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.
- தமிழகம் முழுவதும் 77 லட்சத்து 87 ஆயிரம் வீடுகளுக்கு சொத்து வரி உயர்வு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. குடியிருப்புகள் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டு, சொத்து வரி அமல்படுத்தப்பட்டுள்ளது.அதன்படி,சென்னையைத் தவிர்த்து மாநிலத்தின் பிற மாவட்டங்களுக்கு ஒரு வகையாகவும், சென்னையில் வேறு வகையிலும் சொத்து வரிகளை உயர்த்தி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
- சென்னை தவிர்த்த பிற பகுதிகளுக்கு, 600 சதுரஅடி வரையிலான வீடுகளுக்கு 25 சதவீதம் உள்ளது.

## சென்னையில் 'நெசவு 2022' கைத்தறி கண்காட்சி

- 'நெசவு 2022' கைத்தறி கண்காட்சியை சென்னையில் மத்திய ஜவுளித் துறை இணை அமைச்சர் தர்ஷனா விக்ரம் ஜர்தோஷ் தொடக்கிவைத்தார்.
- சென்னை நந்தனம் அண்ணாசாலையில் அமைந்துள்ள டெம்பிள் டவர் கட்டடத்தில் 13,000 சதுர அடியில் முழு குளிரூட்டப்பட்ட விற்பனையகத்தை மத்திய குடிசைத் தொழில் கழகம் கொண்டுள்ளது.
- இங்கு இந்திய கைத்தறித் தயாரிப்புகள், கைவினைத் திறனை ஊக்குவிக்கும் முயற்சியில், நெசவாளர்களின் கைவினைப் பொருள்களைக் கொண்ட 'நெசவு 2022' கைத்தறி கண்காட்சிக்கு மத்திய குடிசைத் தொழில்கழகம் ஏற்பாடு செய்துள்ளது.
- டெம்பிள் டவர் கட்டடத்தில் உள்ள ஷோரூமில் ஏப்ரல் 12–ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சியை மத்திய இணை அமைச்சர் தர்ஷனா விக்ரம் ஜர்தோஷ் தொடக்கிவைத்து பார்வையிட்டார். காலை 10.30 முதல் இரவு 8 மணி வரை கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிடலாம்.

## 3,101 ரயில் பெட்டிகள் தயாரிப்பு

- சென்னை பெரம்பூரில் உள்ள இணைப்புப் பெட்டி தொழிற்சாலை (ஐ.சி.எஃப்) கடந்த நிதியாண்டில் 3 ஆயிரத்து 101 ரயில் பெட்டிகள் தயாரித்து சாதனை படைத்துள்ளது.
- இந்த ரயில் பெட்டி தயாரிப்புத் தொழிற்சாலையில் 1955–ஆம் ஆண்டு முதல் 2021–ஆம் ஆண்டு வரை 500–க்கும் மேற்பட்ட வடிவமைப்புகளில் 60 ஆயிரத்துக்கும் அதிகமான ரயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
- இதுதவிர, ரயில் – 18 திட்டத்தில் 'வந்தேபாரத்' அதிவேக ரயிலுக்கு உலகத் தரத்தில் பெட்டிகள் தயாரித்து வழங்கப்பட்டுள்ளன.
- ஐ.சி.எஃப்–இல், 2021–22–ஆம் நிதியாண்டில் 3,101 பெட்டிகள் தயாரித்து சாதனை படைக்கப்பட்டுள்ளது. 31 நெடுந்தொலைவு மின் ரயில் தொடர்களுக்கான 248 பெட்டிகள், கொல்கத்தா மெட்ரோ ரயில்வேயின் 4 ரயில் தொடர்களுக்கான 32 பெட்டிகள், விபத்து நிவாரண ரயில்களுக்கான 6 தொடர்கள் (18 பெட்டிகள்), 50 டீசல் ரயில் தடப் பரிசோதனை ரயில்பெட்டிகள், ஆய்வு பெட்டிகள், 2,639 எல்.எச்.பி என்னும் நவீன ரயில் பெட்டிகள், இலங்கை ரயில்வேக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள 83 பயணிகள் ரயில் பெட்டிகள், இலங்கை ரயில்வேக்கு தயாரிக்கப்பட்ட 2 குளிர்வசதி செய்யப்பட்ட டீசல் மின்தொடர்களுக்கான 26 பெட்டிகள் என்று மொத்தம் 3,101 பெட்டிகள் தயாரித்து வழங்கப்பட்டுள்ளன.

## தடகள வீராங்கனை சமீஹா பர்வீனுக்கு ரூ.2 லட்சம் அரசு ஊக்கத் தொகை

- தடகள வீராங்கனை சமீஹா பர்வீனுக்கு ரூ.2 லட்சம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது என தமிழக சுற்றுச்சூழல், காலநிலை மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.
- கன்னியாகுமரிமாவட்டம், கடையாலுமூடு பகுதியைச் சேர்ந்த சமீஹா பர்வீன், மாற்றுத்திறனாளிகளுக்கான தடகளப் போட்டிகளில் கலந்து கொண்டு சாதனைகளைப் படைத்து வருகிறார். 2019–ஆம் ஆண்டு கேரளத்தில் நடைபெற்ற தேசிய தடகளப் போட்டியில் 100 மீட்டர் ஓட்டம், உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல் போன்றவற்றில் முதலிடம் பெற்றார்.

## நம் மருத்துவமனை மகத்தான மருத்துவமனை திட்டம் ஒரே நாளில் 91,538 கிலோ மருத்துவக் கழிவுகள் அகற்றம்

- நம் மருத்துவமனை மகத்தான மருத்துவமனை திட்டத்தின் கீழ், தமிழகத்தில் ஒரே நாளில் 91,538 கிலோ மருத்துவக்கழிவுகள் அகற்றப்பட்டன.
- தமிழகத்தில் மொத்தம் 2,672 அரசு மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த மருத்துவமனைகளில் நாளொன்றுக்கு சராசரியாக 5 லட்சம் நபர்கள் புற நோயாளிகளாகவும், 46,000 நபர்கள் உள் நோயாளிகளாகவும் சிகிச்சை பெறுகின்றனர். மேலும், 1,500 குழந்தைப் பிறப்புகளும் நிகழ்கின்றன.
- அரசு மருத்துவமனைகள், நாள்தோறும் சுத்தமுடனும், சுகாதாரத்துடனும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணியை மேலும் வலுப்படுத்த, பிற துறைகளின் உதவியுடன் மருத்துவமனை வளாகங்களை தூய்மைப்படுத்தவும், பராமரிக்கவும் தமிழக அரசின் தலைமைச் செயலாளர், மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிட்டார்.

## இந்திய ஏற்றுமதி ரூ.32 லட்சம் கோடி

- நாட்டின் சரக்கு ஏற்றுமதி கடந்த 2021–22 நிதியாண்டில் சுமார் ரூ.32 லட்சம் கோடியை (418 பில்லியன் டாலர்) தாண்டி சாதனை படைத்துள்ளதாக மத்திய வர்த்தக, தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.
- நாட்டின் சரக்கு ஏற்றுமதி 2021–22 நிதியாண்டில் சுமார் ரூ.32 லட்சம் கோடியை (418 பில்லியன் டாலர்) கடந்து சாதனை படைத்துள்ளது. கடந்த மார்ச் 21–ஆம் தேதியே நமது இலக்கான 400 பில்லியன் டாலரை (ரூ.30.4 லட்சம் கோடி) சரக்கு ஏற்றுமதி கடந்தது. இதுவரை எந்தவொரு மாதத்திலும் இல்லாத வகையில், கடந்த மார்ச் மாதம் மட்டுமே ரூ.3.06 லட்சம் கோடி (40.38 பில்லியன்) மதிப்பில் ஏற்றுமதி நடைபெற்றது.
- பெரும்பாலும் அமெரிக்கா, ஐக்கிய அரபு அமீரகம், வங்கதேசம், நெதர்லாந்து, சிங்கப்பூர், ஹாங்காங், பிரிட்டன், பெல்ஜியம், ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு பெட்ரோலியம், கட்டுமானப் பொருள்கள், ஆபரணங்கள், ரசாயனம் ஆகியன ஏற்றுமதி செய்யப்பட்டன.
- நாடுகள் அதன் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய கோதுமை முக்கியப் பங்கு வகிக்கிறது. மிகப்பெரிய அளவில் நாம் கோதுமையை ஏற்றுமதி செய்து, சச்சரவுமிக்க பிராந்தியங்களிடமிருந்து கோதுமையை இறக்குமதி செய்யாத நாடுகளுக்கு உதவுவோம். சர்வதேச சந்தையில் தேவை அதிகரிப்பால் நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் கோதுமை ஏற்றுமதி ஒரு கோடி டன்னை தாண்டும் என நம்புகிறேன்.
- சர்வதேச கோதுமை விநியோகத்தில் ரஷியாவும், உக்ரைனும் ஏறத்தாழ கால் பங்கு வகிக்கின்றன. அவர்களின் கோதுமைப் பயிர்வரும் ஆகஸ்ட் செப்டம்பரில் முதிர்ச்சியடையும். இந்தியாவை பொருத்தமட்டில் கோதுமை உற்பத்தியை அதிகரிப்பதில் விவசாயிகள் கவனம் செலுத்தி வருகின்றனர். கடந்த ஆண்டிலிருந்து குஜராத், மத்திய பிரதேசம் போன்ற பிராந்தியங்கள் பெரிய அளவில் கோதுமை ஏற்றுமதி செய்து வருகின்றன.
- கோதுமை ஏற்றுமதி தொடர்பாக எகிப்துடன் இறுதிக்கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இதேபோல சீனா, துருக்கி, ஈரான் போன்ற நாடுகளிடமும் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறோம் என்றார் பியூஷ் கோயல்.
- வெளிநாட்டு வர்த்தக இயக்குநர்– ஜெனரல் (டிஜிஎஃப்டி) சந்தோஷ் குமார் சாரங்கி கூறுகையில், "இந்தியாவிலிருந்து பெரும்பாலும் காண்ட்லா துறைமுகம் (குஜராத்) வாயிலாகத் தான் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி நடைபெறுகிறது. இந்த நிலையில் விசாகப்பட்டினம், காக்கிநாடா, நவா ஷேவா துறைமுகங்கள் மூலமாகவும் கோதுமதி ஏற்றுமதி செய்யும் வகையில், ரயில்வேயுடன் ஆலோசனை நடத்தி வருகிறோம்" என்றார்.

- அதிகரிப்பு: கடந்த 2019–20 நிதியாண்டில் வெறும் 2 லட்சம் டன்னாக (ரூ.500 கோடி இருந்த கோதுமை ஏற்றுமதி, 2020–21–இல் 21.55 லட்சம் டன்னாகவும் (ரூ.4,000 கோடி), 2021–22 நிதியாண்டில் 70 லட்சம் டன்னாகவும் (ரூ.15,000 கோடி) அதிகரித்தது.
- இந்தியாவில் விளையும் கோதுமை பெரும்பாலும் அண்டை நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகிறது. குறிப்பாக வங்கதேசத்துக்கு மட்டுமே கடந்த நிதியாண்டில் 30.50 லட்சம் டன் கோதுமை (54 சதவீதம்) ஏற்றுமதி செய்யப்பட்டது. யேமன், ஆப்கானிஸ்தான், கத்தார், இந்தோனேசியா போன்ற நாடுகளுக்கும் இந்தியா தற்போது கோதுமை ஏற்றுமதி செய்கிறது.
- சர்வதேச அளவில் கோதுமை உற்பத்தியில் இந்தியா 14.14 சதவீதத்துடன் 2–ஆம் இடம் வகித்தாலும் ஏற்றுமதியில் ஒரு சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளது. நாட்டில் ஆண்டுக்கு 10.76 கோடி டன் கோதுமை உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் பெரும்பாலானவை உள்நாட்டு நுகர்வுக்கே பயன்படுத்தப்படுகிறது.

## முதியோர் நல மையமாகிறது கிண்டி கரோனா மருத்துவமனை

- பெருந்தொற்றுக் காலத்தில் லட்சக்கணக்கான மக்களுக்கு மறுவாழ்வளித்த கிண்டி அரசு கரோனா சிறப்பு மருத்துவமனை விரைவில் முதியோர் நல மையமாக மாற்றப்பட உள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.
- கிண்டி கிங் ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில், முதியோர் தேசிய மையத்துக்காக கட்டப்பட்ட கட்டடம் கிண்டி சிறப்பு கரோனா மருத்துவமனையாக 2020 ஆம் ஆண்டு ஜூலை 7–இல் திறக்கப்பட்டது.
- அங்கு, ஆக்சிஜன் வசதியுடன் 750 படுக்கைள் ஏற்படுத்தப்பட்டு, கரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. சென்னை, ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனை மருத்துவர்கள், செவிலியர்கள், கிண்டி கரோனா மருத்துவமனையில் சிகிச்சை அளித்தனர்.

## ஏஎன்பிஆர் கேமராக்கள்

- சென்னை பெருநகர காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவு நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, போக்குவரத்து விதிமீறலில் ஈடுபடுவோரைக் கண்டறியும் வகையில், 5 இடங்களில் 2019–ஆம் ஆண்டு சாதாரண கண்காணிப்பு கேமராக்களை விட அதிக திறன் கொண்ட 61 ஏஎன்பிஆர் (Automatic number plate recognition Camera) கேமராக்கள் நிறுவப்பட்டன.
- இந்த கேமராக்கள் விதிமீறலில் ஈடுபடும் வாகனங்களின் பதிவெண்களை துல்லியமாக படம் பிடித்து, கட்டுப்பாட்டு அறையிலிருந்து இ–செலான் சம்பந்தப்பட்ட வாகன ஓட்டுநர்களின் வீடுகளுக்கு அனுப்பப்பட்டது.
- இந்தத் திட்டம், தேசிய தகவல் தொழில்நுட்பம் மையம் உதவியுடன் கடந்தாண்டு ஜூலை மாதம் மேலும் நவீனமாக்கப்பட்டது. அதன்படி, இந்த கேமராக்களில் போக்குவரத்து விதிமுறை மீறலில் ஈடுபடும் வாகனங்களின் பதிவெண், பதிவு செய்யப்பட்டதும், அந்தத் தகவல் கட்டுப்பாட்டு அறையில் உள்ள கணினிக்குச் செல்லும். கட்டுப்பாட்டு அறையில் உள்ள தானியங்கி கணினி, சம்பந்தப்பட்ட வாகன உரிமையாளர் அல்லது வாகன ஓட்டிகளின் கைப்பேசிக்கு இ–செலான் ரசீதை உடனே அனுப்பும்.

## காவல் துறை உதவிகளை உடனடியாகப் பெற தனிச் செயலி

- பொதுமக்கள் குறிப்பாக பெண்கள், அவசர காலங்களில் காவல் துறையின் உதவிகளை உடனடியாகப் பெற 60–க்கும் மேற்பட்ட சிறப்பம்சங்களுடன் காவல் உதவி செயலி உருவாக்கப்பட்டுள்ளது.
- **'அவசரம்' உதவி பொத்தான்:** பொது மக்கள் குறிப்பாக பெண்கள், அவசர காலங்களில் இந்த செயலியில் உள்ள சிவப்பு நிற 'அவசரம்' என்ற பொத்தானை அழுத்துவதன் மூலமாக, பயனாளர் விவரம், இப்போதைய இருப்பிட விவரம், விடியோ ஆகியன கட்டுப்பாட்டு அறையில் பெறப்பட்டு காவல் துறையின் அவசர சேவை அளிக்கப்படும்.
- கைப்பேசியில் நேரடி புகார்களைத் தெரிவிக்க டயல் 100' என்ற செயலி, காவல் உதவி செயலி மூலமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்துக்கு விரைவில் தோல், காலணி கொள்கை

- விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தை அடுத்த பெலாகுப்பத்தில் உள்ள சிப்காட் தொழில் பூங்காவில் ரூ.500 கோடியில் செய்யாறு எஸ் இ இஸட் டெவலப்பர்ஸ் நிறுவனத்தின் காலணி தயாரிக்கும் தொழில்சாலைக்கு அடிக்கல் நாட்டி முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

- அனைத்துத் துறைகளும் சமவிகிதத்தில் வளர வேண்டுமென்று நினைக்கக்கூடிய வகையில் திமுக அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம், தொழில் வளர்ச்சி, சமூகத்திறன் ஆகியவற்றில் நாம் எந்த மாநிலத்தவர்க்கும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபிக்கக்கூடிய வகையில், தமிழக அரசு எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.
- காலணி தயாரிக்கும் தொழில்சாலை மூலம் திண்டிவனம் மிகப்பெரிய வளர்ச்சியைப் பெறும். அதேபோல, தமிழ்நாட்டில் மேலும் பல இடங்கில், குறிப்பாக தென் மாவட்டங்களிலும் புதிய திட்டங்களை அமைக்க இந்த காலணி உற்பத்தி நிறுவனம் முன்வர வேண்டும்.
- காலணி உற்பத்தியில் தேசிய, உலக அளவில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது. தமிழ்நாட்டின் பங்களிப்பு, தேசிய காலணி உற்பத்தயில் 26 சதவீதமாகவும், ஏற்றுமதியில் 45 சதவீதமாகவும் இருக்கிறது.

## தமிழகத்துக்கு தனி கல்விக் கொள்கையை வடிவமைக்க குழு

- கடந்த 2021–22–ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், மாநிலக்கல்விக் கொள்கை குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது. தமிழ்நாட்டின் வரலாற்று மரபு, இப்போதைய நிலைமை, எதிர்காலக் குறிக்கோள்களுக்கு ஏற்ப, மாநிலத்துக்கென தனித்துவமான கல்விக் கொள்கை ஒன்றை வகுப்பதற்கு, கல்வியாளர்கள், வல்லுநர்களைக் கொண்ட உயர்நிலைக் குழு அமைக்கப்படும் என அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.
- இந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் விதமாக, தமிழகத்தில் புதிய கல்விக் கொள்கையை வடிவமைப்பது குறித்து ஆய்வு செய்ய குழு அமைக்கப்படுகிறது. இந்தக் குழுவின் தலைவராக தில்லி உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி த.முருகேசன் செயல்படுவார்.
- **குழு உறுப்பினர்கள் யார்?** குழுவில் 12 பேர் உறுப்பினர்க நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, சவீதா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் எல்.ஜவஹர்நேசன், தேசிய கணித அறிவியல் நிறுவனத்தின் முன்னாள் பேராசிரியர் ராமானுஜம், மாநிலத் திட்டக்குழு உறுப்பினர்கள் சுல்தான் இஸ்மாயில், ராம சீனுவாசன், யுனிசெப் அமைப்பின் முன்னாள் சிறப்புக் கல்வி அலுவலர் அருணா ரத்னம், எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன், உலக சதுரங்க வீரர் விஸ்வநாதன் ஆனந்த், இசைக் கலைஞர் டி.எம்.கிருஷ்ணா, கல்வியாளர் துளசிதாசன், கல்வியியல் எழுத்தளார் ச.மாடசாமி, நாகப்பட்டினம் மாவட்டம் கீச்சாங்குப்பம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர் இரா.பாலு, அகரம் அறக்கட்டளையில் ஜெயஸ்ரீ தாமோதரன் ஆகியோர் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- **ஓராண்டு காலம்:** மாநில கல்விக் கொள்கையை வடிவமைக்க உருவாக்கப்பட்டுள்ள குழுவானது தனது பரிந்துரையை அரசுக்கு ஓராண்டு காலத்துக்குள் வழங்கும் என்று தனது அறிவிப்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## முத்துஸ்வாமி தீட்சிதர் 247– ஆவது ஜெயந்தி விழா

- சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துஸ்வாமி தீட்சிதர் பங்குனி மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் திருவாரூரில் பிறந்தார். இதையொட்டி ஆண்டுதோறும் பங்குனி மாத கார்த்திகை நட்சத்திரத்தில் அவரது ஜெயந்தி விழா நடைபெறுகிறது.
- திருவாரூரில் உள்ள முத்துஸ்வாமி தீட்சிதரின் இல்லம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட கர்நாடக சங்கீத சேவா டிரஸ்ட் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## சென்னை, 2 மாவட்டங்களில் ரூ.250 கோடியில் வெள்ளத் தடுப்புப் பணிகள்

- சென்னை மற்றும் புறநகர்ப்பகுதிகளில் ரூ.250 கோடியில் வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் துரைமுருகன் அறிவித்தார்.
- நீர்வளத் துறை மானியக் கோரிக்கை மீது நடந்த விவாதங்களுக்குப் பதிலளித்த அவர் வெளியிட்ட புதிய அறிவிப்புகள்:–
- சென்னை மாவட்டம் போரூர் ஏரியில் புதிய மதகும், போரூர் ஏரியில் இருந்து ராமாபுரம் ஏரிவரையிலும், பள்ளிக்கரணை ஏரி முதல் சதுப்பு நிலம் வரையிலும் மூடிய நிலை கால்வாய் அமைக்கப்படும். கொளத்தூர் ஏரி ஆழப்படுத்தப்படுவதுடன், குன்றத்தூர் பகுதியில் அனகாபுத்தூர் பாலம் வரை அடையாறு ஆறு அகலப்படுத்தப்படும். காஞ்சிபுரம் மாவட்டம் தேசிய நெடுஞ்சாலையின் புறவழிச்சாலையில் கூடுதலாக பெட்டி வடிவிலான சிறு பாலமும், குன்றத்தூர் தந்திக்கால்வாயில் இருந்து போரூர் ஏரியின் உபரி நீர்க்கால்வாய்வரை மூடிய நிலையிலான கால்வாயும் அமைக்கப்படும்.

## தொலைதூர கிராமங்களுக்கான புதிய மருத்துவ சேவை திட்டம்

- தொலைதூர கிராமங்களுக்கான புதிய மருத்துவ சேவை திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் வரும் தொடக்கி வைப்பார் என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.
- சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தில் அதிமுக உறுப்பினர் கே.பி.முனுசாமி பேசும்போது, புதிதாக 25 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படும் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார். அதில் ஒன்று வேப்பன்னஹள்ளியில் அமைக்கப்படுமா என்றார்.
- அதற்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியது: தமிழகத்தில் ஏற்கெனவே 2282 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 8,713 துணை சுகாதார நிலையங்களும் இருக்கின்றன. 272 வட்டார மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளும், 36 அரசு மருத்துவக் கல்லூரிகளும் என 11,303 மருத்துவக் கட்டமைப்புகள் தமிழகத்தில் உள்ளன. புதிதாக 25 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 25 நகர்ப்புற சுகாதார நிலையங்களும் அமைக்கப்படுகிறன.

## 2023–ஆம் ஆண்டு இறுதியில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு

- திமுக ஆட்சியில் இதுவரை ரூ.68,375 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும், 2023–ஆம் ஆண்டு இறுதியில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு தமிழகத்தில் சிறப்பாக நடத்தப்படும் என்றும் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.
- தமிழக சட்டப்பேரவையில் 110–ஆவது விதியின் கீழ் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்பு:
- **130 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்:** திமுக அரசு பொறுப்பேற்ற பிறகு ரூ. 68,375 கோடி முதலீடும், 2,05,802 பேருக்கு வேலைவாய்ப்பும் உருவாக்கக்கூடிய வகையில் 130 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.
- கடந்த மார்ச் மாதம் துபை மற்றும் அபுதாபி நாடுகளில் நடைபெற்ற நிகழ்வுகளில் ரூ.6,100 கோடி முதலீடும் 15,100 பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும் வகையில் 14 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.
- சீரான மற்றும் பரவலான தொழில் வளர்ச்சி என்பது திமுகவின் தேர்தல் வாக்குறுதி. அதை நிறைவேற்றும் வகையில் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கிருஷ்ணகிரி, தருமபுரி, மதுரை, கரூர், நாமக்கல், திண்டுக்கல், புதுக்கோட்டை, தேனி, தூத்துக்குடி, திருச்சி, திருநெல்வேலி, விருதுநகர், கன்னியாகுமரி ஆகிய 25 மாவட்டங்களில் இந்த முதலீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## பிரெய்லி வடிவில் 41 தமிழ்ச் செவ்வியல் நூல்கள்

- பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில், 41 தமிழ்ச் செவ்வியல் நூல்களையும் சந்தி பிரித்து எளிய உரையுடன் பிரெய்லி நூல்களாக வெளியிடும் பணிகள் நடைபெற்று வருவதாக செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் இயக்குநர் இரா.சந்திரசேகரன் கூறியுள்ளார்.
- செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில், பல்வேறு வகையிலான தமிழ் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளப் புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.
- மாதத்துக்கு குறைந்தது ஐந்து நூல்களை வெளியிட வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு அதற்கான பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.
- இணையவழியில் செம்மொழித் தமிழ்க் கல்வியைக் கற்றல், செவ்வியல் சுவடிகளைக் கணினியில் தேடுதல், பன்னாட்டு ஆய்விதழ் வெளியிடுதல், உலகளாவிய மொழிகளைத் தமிழ் மொழியுடன் ஒப்பிட்டு ஒப்பியல் ஆய்வுகளை மேற்கொள்ளுதல், பன்னாட்டு அளவிலான கருத்தரங்கங்களை நடத்துதல் முதலான பணிகளை தீவிரமாக மேற்கொண்டு வருகிறோம்.
- அதேபோன்று புகழும், புலமையும் வாய்ந்த பேராசிரியர்களைக் கொண்டு செவ்விலக்கிய சிறப்புகளைக் காட்சிப்படுத்தி யூடியூப் மூலம் பரவச்செய்யும் வகையில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.
- நாள்தோறும் ஒரு அறிஞரை அழைத்துக் காட்சிப்படுத்தும் வகையில் புதிய வளாகத்தில் உரிய வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- புகழ்பெற்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழங்களில் செவ்வியல் தமிழ் இருக்கைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல்கட்டமாக இந்தோனேசியா, தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம், ரியூனியன் ஆகிய நாட்டுப் பல்கலைக்கழகங்களில் செவ்வியல் தமிழ் இருக்கைகள் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில், 41 தமிழ்ச்செவ்வியல் நூல்களையும் சந்தி பிரித்து எளிய உரையுடன் பிரெய்லி நூல்களாக வெளியிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## அரசுப் பள்ளி மாணவர்களுக்கான 7.5% இடஒதுக்கீடு செல்லும்

- மருத்துவப் படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீத இடஒதுக்கீடு வழங்கி, கடந்த அதிமுக ஆட்சிக்காலத்தில் அரசு சட்டம் இயற்றியது. இதை எதிர்த்து தனியார் பள்ளி மாணவர்களும், தங்களுக்கும் ஒதுக்கீடு வழங்கக் கோரி அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகளைத் தொடர்ந்திருந்தனர்.
- **435 மாணவர்கள்**: வாதங்களுக்கும் பின்னர் நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு நீட் தேர்வை இச்சட்டம் நீர்த்துப் போக செய்யவில்லை; நீட் தேர்வு மதிப்பெண் அடிப்படையில்தான் இந்த இட ஒதுக்கீடும் நிரப்பப்படுகிறது; தமிழக அரசின் சட்டம் தேசிய மருத்துவ ஆணைய விதிகளுக்கு எதிரானது அல்ல; இச்சட்டத்தைக் கொண்டு வரும் முன் 6 அரசுப் பள்ளி மாணவர்கள் மட்டுமே மருத்துவப் படிப்பில் சேர்ந்தனர்.
- ஆனால் சட்டம் கொண்டு வரப்பட்ட பிறகு 435 மாணவர்கள் மருத்துவப் படிப்பில் சேர்ந்துள்ளனர். இதன் மூலம் சட்டத்தின் நோக்கம் நிறைவேறியுள்ளது.
- **அரசியலமைப்பு சாசனம்**: பள்ளிகள் அடிப்படையில் மாணவர்களை வகைப்படுத்துவது காரணமற்றது எனக்கூறி விட முடியாது. சமூகத்தில் பொருளாதார ரீதியில் பின்தங்கிய அரசுப் பள்ளி மாணவர்கள், தடைகளைத் தாண்டி வர ஏதுவாக இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதால் இந்தச் சட்டம் அரசியலமைப்பு சாசனத்துக்கு விரோதமானது அல்ல.
- இந்த இடஒதுக்கீடு என்பது இட ஒதுக்கீட்டின் வரம்பை அதிகரிக்கவில்லை. அதேநேரம் அனைத்துப் பிரிவிலும் உள்ள அரசுப் பள்ளி மாணவர்களுக்கும் இந்தப் பலன் சென்றடையும்.
- நீதிபதி கலையரசன் ஆணைய அறிக்கையில் அரசுப் பள்ளி மாணவர்களின் பெற்றோரை விட, அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களின் பெற்றோரின் வருமானம், சமூக பின்னணி ஆகிய அம்சங்களை ஆராய்ந்ததில் அவர்கள் நல்ல நிலைமையில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## தூய்மையான உணவுவளாகம் திட்டத்தின் கீழ் ஐ.சி.எஃப்-க்கு ஐந்து நட்சத்திர தரச்சான்றிதழ்

- சென்னை இணைப்பு பெட்டி தொழிற்சாலைக்கு (ஐ.சி.எஃப்) இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தின் 'தூய்மையான உணவு வளாகத்துக்கான 5 நட்சத்திர தரச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.
- இந்திய அரசின் உடல்நலம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின் கீழ், இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் (FSSAI) செயல்படுகிறது. இந்த நிறுவனம், பொதுமக்கள் உடல்நல பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், நாடு முழுவதும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.
- தூய்மையான உணவு வளாகம் என்னும் திட்டத்தின் கீழ், இந்த நிறுவனம் சார்பில், பல்வேறு பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், மருத்துவமனைகள், பணியிடங்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளுக்கு தரச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.
- அவ்வாறு சான்றிதழ் வழங்கும் முன்பு உணவு வீணாவதைத் தவிர்த்தல், அவ்வாறு மீதமாகும் உணவை உயிரியல் முறைகளில் மக்கச் செய்தல், உணவு மற்றும் வடிகட்டிய குடிநீரின் தர ஆய்வு, உணவகங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு குறிப்பிட்ட கால அவகாசத்தில் உடல்நல சோதனை, உணவக ஊழியர்கள் சரியான விதத்தில் உடை அணிந்திருத்தல், தரம் கெடாமலிருக்க பாதுகாப்பாக வைக்கப்பட்ட உணவுப் பொருள்களின் உபயோகம் உள்பட பல்வேறு விதமான ஆய்வுகளை மேற்கொண்ட பின்னரே அந்த சான்றிதழ் வழங்கப்படுகிறது.

## காலணி வடிவமைப்பு, உற்பத்தி: தைவான் நிறுவனத்துடன் ரூ.1,000 கோடியில் ஒப்பந்தம்

- தைவானின் புகழ்பெற்ற காலணி வடிவமைப்பு, உற்பத்தி நிறுவனம் தமிழகத்தில் ஆலையை அமைக்க உள்ளது. இதற்கான ஒப்பந்தம் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தமிழக அரசுடன் செய்யப்பட்டது. ரூ.1000 கோடி ரூபாய் முதலீட்டில் 20,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்க ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.
- தைவான் நாட்டைச் சேர்ந்த ஹாங்ஃபூ நிறுவனம் தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. குழுமத்தின் தலைவர் டி.ஒய்.

சாங் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. ஹாங்ஃபூ நிறுவனம் காலணிகள் உற்பத்தியல் மிக முக்கியமான நிறுவனமாகும். காலணி வடிவமைத்தல், தயாரித்தல், விற்பனை செய்தல் ஆகிய பணிகளைச் செய்கிறது.

## காஞ்சி காமகோடி குழந்தைகள் மருத்துவமனை: இந்தியாவின் சிறந்த மருத்துவமனையாகத் தேர்வு

- இந்தியாவின் சிறந்த குழந்தைகள் நல மருத்துவமனையாக காஞ்சி காமகோடி குழந்தைகள்அறக்கட்டளைமருத்துவமனைதேர்வு செய்யப்பட்டுள்ளது. அந்த மருத்துவமனையின் சேவைகள், மருத்துவ வசதிகள் மற்றும் சிகிச்சை கட்டமைப்பு ஆகியவை சிறப்பாக இருப்பதற்காக இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- உலகளாவிய தர ஆய்வு நிறுவனமாக ஸ்டாஸ்டிகா நிறுவனமும், நியூஸ் வீக் இதழும் இணைந்து சர்வதேச அளவில் சிறந்து விளங்கும் மருத்துவமனைகளின் பட்டியலை அண்மையில் வெளியிட்டன.
- அதில் அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, பிரிட்டன், இந்தியா உள்ளிட்ட 27 நாடுகளில் உள்ள தலைசிறந்த மருத்துவமனைகளை தர ஆய்வுக்குட்படுத்தி, அதன் அடிப்படையில் சிறந்த மருத்துவமனைகள் தேர்வு செய்யப்பட்டிருந்தன.
- இந்தியாவைப் பொருத்தவரை மொத்தம் 11 மருத்துவமனைகளின் சேவைகள் சிறப்பாக உள்ளதாக அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது. அதில் குழந்தைகள் நல சிகிச்சைகளைப் பொருத்தவரை நாட்டிலேயே சிறந்த மருத்துவமனையாக காஞ்சி காமகோடி அறக்கட்டளை மருத்துவமனை தேர்வாகியுள்ளது.

## சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.25,000 கோடி கடன் அமைச்சர் பெரியகருப்பன்

- கிராமப்புற மற்றும் நகர்ப்புற சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கி இணைப்பு திட்டத்தின் மூலம் இந்த ஆண்டு ரூ.25,000 கோடி கடன் வழங்கப்படும் என்று ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவித்தார்.
- சுய உதவிக்குழுக்களுக்கு உதவி: சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் மற்றும் நலிவடைந்தோரை ஒருங்கிணைத்து ஊரகப் பகுதிகளில் 10,000 புதிய சுய உதவிக்குழுக்களும் நகரப் பகுதிகளில் 15,000 புதிய சுய உதவிக் குழுக்களும் உருவாக்கப்படும். குழுக்களில் இணைவதன் மூலம் உறுப்பினர்கள் அரசு சலுகைகள் பெறுவதற்கு வழிவகை ஏற்படும். அப்படி உருவாக்கப்படும் புதிய குழுக்களுக்கு சுழல்நிதியாக ரூ.30 கோடி வழங்கப்படும்.

## சிறந்த கல்வி நிறுவனங்கள் பட்டியலில் விஐடி பல்கலைக்கழகம்

- உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்கள், அதன் கல்வித் தரம், மாணவர்–ஆசிரியர் விகிதம், ஆசிரியர்கள் பெற்ற விருதுகள், சாதனைகள் உள்ளிட்ட காரணிகளின் அடிப்படையில், ஆண்டுதோறும் சர்வதேச அளவில் சிறந்த கல்வி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியலை க்யூ.எஸ். என்ற சர்வதேச நிறுவனம் வெளியிட்டு வருகிறது.
- குறிப்பாக, கலை, பொறியியல், தொழில்நுட்பம், மருத்துவம், லைஃப் சயின்ஸ், சமூகம், இயற்கை அறிவியல்,மேலாண்மைபோன்றபாடப்பிரிவுகளில் உலக அளவில் பல்கலைக்கழகங்களை ஆய்வு செய்து இந்த அமைப்பு தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு வருகிறது.
- இந்த அமைப்பு வெளியிட்ட தரவரிசைப் பட்டியலில் பொறியியல், தொழில்நுட்பத்தில் உலக அளவில் வேலூர் விஐடி பல்கலைக்கழகம் 346–ஆவது இடம் பிடித்துள்ளது.
- கடந்தாண்டைவிட 55 இடங்கள் முன்னேறியுள்ளது. இதேபோல, தேசிய அளவில் விஐடி பல்கலைக்கழகம் 9–ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.
- மேலும், விஐடியிலுள்ள 7 பாடப் பிரிவுகளும் க்யூ. எஸ். தரவரிசை பட்டியலில் இடம்பிடித்துள்ளன. கணினி அறிவியல், இன்ஃபர்மேஷன் சிஸ்டம், எலக்ட்ரிக்கல் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் பொறியியல் பாடப் பிரிவுகள் தேசிய அளவில் தரவரிசைப் பட்டியலில் 8–ஆவது இடம் பிடித்துள்ளன.

## மக்கள் நலப் பணியாளர்களுக்கு ஒருங்கிணைப்பாளர் பணியில் முன்னுரிமை

- மாநிலத்தில் உள்ள 12.524 கிராம ஊராட்சிகளில் உள்ள வேலை உறுதித் திட்டப் பணி ஒருங்கிணைப்பாளர் என்ற பணியிடத்தில் விருப்பம் தெரிவிக்கும் முன்னாள் மக்கள் நலப் பணியாளர்களுக்கு முன்னுரிமை அளித்து, இப்பணி வாய்ப்பு வழங்கப்படும்.

- கடந்த 10 ஆண்டு காலத்தில், காலமான மக்கள் நலப் பணியாளர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு, அவர்கள் விரும்பினால், அவர்களுக்கு முன்னுரிமை வழங்கி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணி ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றக்கூடிய வாய்ப்பு வழங்கப்படும்.

## 389 நடமாடும் மருத்துவ சேவை வாகனங்கள்

- தமிழகத்தில் ரூ.70 கோடி மதிப்பிலான 389 நடமாடும் மருத்துவ சேவை வாகனங்களை பொது மக்களின் பயன்பாட்டுக்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கிவைத்தார்.
- மாநிலத்தின் அனைத்து கிராமங்களுக்கும், போக்குவரத்து குறைந்த பகுதிகளுக்கும் கூட சென்று இந்த வாகனங்களின் வாயிலாக மருத்துவ சேவைகள் வழங்க முடியும் என மக்கள் நல்வாழ்வுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.
- ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில், தொலைதூர கிராமங்களுக்கு, மாதந்தோறும் குறிப்பிட்ட நாள்களில் அங்கேயே சென்று நோய்களைக் கண்டறிந்து அதற்கான சிகிச்சை அளித்திட 2007–ஆம் ஆண்டு 100 மருத்துவ சேவை வாகனங்கள் வாங்கப்பட்டு, அப்போதைய முதல்வர் கருணாநிதியால் 100 நடமாடும் மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

## பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டம் விரிவுப்படுத்தப்படும்

- பெருநகர சென்னை மாநகராட்சியில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. அதற்கு முன்னதாக மேயர் ஆர்.பிரியா தொடக்கவுரையாற்றினார். அப்போது, அவர் பேசியதாவது:
- சென்னை மாநகராட்சிப் பள்ளி மாணவர்களின் உடநலம், மனநலம், ஆரோக்கியம் ஆகியவற்றை பேணிகாக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக திருவான்மியூரைச் சுற்றியுள்ள 23 பள்ளிகளில் சுமார் 5,000 மாணவர்களுக்கு சோதனை அடிப்படையில் தன்னார்வலர்கள் மூலம் காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்து வரும் இந்தத் திட்டம், மேலும் பல பள்ளிகளில் தன்னார்வலர்களின் மூலம் விரிவுப்படுத்தப்படும்.

## துணைவேந்தர் டாக்டர் சுதா சேஷய்யனுக்கு பணி நீட்டிப்பு

- தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் சுதா சேஷய்யன் பதவிக் காலம் நிகழாண்டு டிசம்பர் 30–ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை ஆளுநர் ஆர்.என்.ரவி பிறப்பித்துள்ளார்.
- கடந்த 1987–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் 10–ஆவது துணைவேந்தராக டாக்டர் சுதா சேஷய்யன் கடந்த 2018–டிசம்பர் 31–இல் பொறுப்பேற்றார்.
- அவரது பதவிக் காலம் கடந்த ஆண்டு டிசம்பர் 30–ஆம் தேதியுடன் நிறைவடைந்தது. இதையடுத்து புதிய துணைவேந்தரைத் தேர்வு செய்தவற்கான தெரிவுக் குழு அமைக்கப்பட்டது.
- ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி ஆர்.பூர்ணலிங்கம் அக்குழுவின் ஒருங்கிணைப்பாளராகவும், மைசூரில் அமைந்துள்ள ஜெ.எஸ்.எஸ் உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் இணைவேந்தர் டாக்டர் பி.சுரேஷ், போரூர் ஸ்ரீராமச்சந்திரா மருத்துவ மையத்தின் இதய நல சிகிச்சைத்துறை இயக்குநர் டாக்டர் எஸ்.தணிகாசலம் ஆகியோர் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டனர்.
- இந்நிலையில், தற்போதைய துணைவேந்தர் டாக்டர் சுதா சேஷய்யனுக்கு வரும் டிசம்பர் 30–ஆம் தேதி வரை பதவி நீட்டிப்பு வழங்கி ஆளுநர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## பள்ளி மாணவர்களுக்கு விடியோ கணித வகுப்புகள்

- தேசிய உயர்கல்வி நிறுவமான சென்னை ஐஐடி யின் "பிரவர்த்தக்" அமைப்பின் சார்பில், பள்ளி மாணவர்களுக்கு நவீன முறையில் கணிதம் கற்றுத்தரும் விடியோ வகுப்பு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. முழுவதும் இணை வழியில் விடியோவாக நடத்தப்படும் இந்த வகுப்பில் மாணவர்கள் சேர கட்டணம் எதுவும் இல்லை.

## சாகர்மாலா திட்டத்தின் கீழ் ரூ. 11,606 கோடியில் 19 திட்டங்கள்

- தூத்துக்குடி வஉசி துறைமுகத்தில் சாகர்மாலா திட்டத்தின் கீழ் ரூ. 11,606 கோடி மதிப்பில் 19 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன என்றார் துறைமுக ஆணையத் தலைவர் தா.கி. ராமச்சந்திரன்.

- இதுகுறித்து திங்கள்கிழமை அவர் அளித்த பேட்டி: மத்திய அரசின் சாகர்மாலா திட்டம் கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் தூத்துக்குடி வஉசி துறைமுகத்தில் ரூ. 11,606 கோடி மதிப்பில் 19 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதில், ரூ.860 கோடி மதிப்பில் 13 திட்டங்கள் முடிவடைந்துள்ளன. ரூ.791 கோடி மதிப்பில் 4 திட்டங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், ரூ.9.955 கோடி மதிப்பில் இரண்டு திட்டங்கள் அரசுக்கு முன்மொழியப்பட்டுள்ளது.
- துறைமுகங்களை நவீனமயமாக்கும் திட்டத்தில் ரூ.16 கோடி மதிப்பில் தற்போதுள்ள நுழைவாயில் 153 மீட்டர் அகலமாக உள்ளதை 250 மீ. அகலமாக விரிவுபடுத்துவதற்கு பணிகள் தொடங்கப்பட்டு நடைபெறுகின்றன.
- இதன் மூலம் 366 மீ. நீளம் மற்றும் 49 மீ. அகலம் கொண்ட பெரிய கப்பல்களை கையாளும் வசதியை பெற முடியும்.
- இதுதவிர, வடக்கு சரக்கு தளத்தில் ரூ.38.34 கோடி மதிப்பில் 6.9 மில்லியன் மெட்ரிக் டன் அளவுக்கு சரக்குகளை கையாளும் திறன் திட்டப்பணி தொடங்கப்பட்டு முடிவுற்றுள்ளது.

## முதல்வர் தலைமையில் மாநில காட்டுயிர் வாரியம்

- முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் வனத்துறை அமைச்சர், சட்டப் பேரவை உறுப்பினர்கள் உள்பட 28 பேரை உறுப்பினர்களாகக் கொண்ட மாநில காட்டுயிர் வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.
- இதுகுறித்து வனம், சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றத்துறை வெளியிட்டுள்ள அரசாணை:
- தமிழக அரசின் வனத்தறை சார்பில் மாநில காட்டுயிர் வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாரியத்தின் தலைவராக முதல்வர் மு.க.ஸ்டாலின் இருப்பார். துணைத் தலைவராக வனத்துறை அமைச்சர் ராமச்சந்திரன் செயல்படுவார்.
- சட்டப் பேரவை உறுப்பின்கள் என். ராமகிருஷ்ணன் (கம்பம்), டி.உதயசூரியன் (சங்கராபுரம்), ஐ.பி.செந்தில்கமார் (பழனி), தன்னார்வத்தொண்டு நிறவனத்தைச் சேர்ந்த பிராடிம் ராய், ஓசை காளிதாசன், வனவிலங்கு ஆராய்சசியர்பன் டி.பூமிநாதன், எஸ்.பாரதிதாசன், பழங்குடி இனத்தைச் சேர்ந்த இருவர், வனத்துறை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அதிகாரிகள் உள்ளிட்ட28 பேர் வாரியத்தின் உறுப்பினர்களாக நியமிக்கப்ட்டுள்ளனர்.

## அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.50 கோடியில் ஆராய்ச்சி பூங்கா

- முன்னாள் மாணவர்கள், தொழிற்சாலைகளுடன் இணைந்து அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் ஆராய்ச்சி பூங்கா ரூ.50 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும். இங்கு தொழில் நிறுவனங்கள் சார்ந்த ஆராய்ச்சி நடவடிக்கை, அடைகாப்பு மையங்கள் அமைக்கப்படும். இதன் மூலம், சுமார் 20 ஆயிரம் இளநிலை, முதுநிலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு மாணவர்கள் பயன்பெறுவர்.
- பட்டயப்படிப்பு முடித்த மாணவர்கள் நேரடியாக பொறியியல் பட்டப்படிப்பில் இரண்டாம் ஆண்டில் சேர்க்கை பெறுகிறார்கள். இந்த கல்வியாண்டு முதல் அண்ணா பல்கலைக்கழகத்தில் சிஇஜி–கிண்டி, எம்ஐடி–குரோம்பேட்டை, ஏசி டெக்–கிண்டி கல்லூரிகளிலும் பொறியியல் நேரடி இரண்டாமாண்டு மாணவர்கள் சேர்க்கை அறிமுகப்படுத்தப்படும்.
- மாணவர்களின் தொழில் திறன்களை மேம்படுத்துவதற்காக பி.இ., பி.டெக்., எம்.சி.ஏ., படிக்கும் மாணவர்களுக்கு ஐபிஎம் நிறுவனத்துடன் இணைந்து புதிய பாடப்பிரிவு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் ரூ.6 கோடி நிதியுதவியுடன் அண்ணா பல்கலைக்கழகத்தில் தொடங்கப்படும்.

## வாகன ஓட்டுநர் உரிமத்தை இணையதளம் மூலம் புதுப்பிக்கலாம்: முதல்வர் மு.க.ஸ்டாலின்

- வட்டாரப் போக்குரவத்து அலுவலகங்களுக்கு நேரில் வராமலேயே சேவைகள் பெறும் வசதியை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.
- ஆதார் அட்டையை அடையாள ஆவணமாகப் பயன்படுத்தி பொதுமக்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு நேரில் வராமலேயே போக்குவரத்து சேவைகளைப் பெறலாம் என சட்டப் பேரவையில் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது. அதன்படி, பழகுநர் ஓட்டுநர் உரிமம் பெறுதல், ஒட்டுநர் உரிமத்தைப் புதுப்பித்தல், ஒட்டுநர் உரிமத்தில் முகவரியை மாற்றுதல் ஆகிய சேவைகளை இணையதளம் (www. parivahan.gov.in) வாயிலாகப் பெறலாம். இதனை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார். இதன்மூலம் மக்களுக்கு வழங்கப்படும் சேவை

எளிதாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் விரைவாக செயல்படுத்தப்படுவதோடு, வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு பொதுமக்கள் நேரில் வரும் சிரமம் குறையும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

## வண்ணமீன் வர்த்தக மையம் அமையும் இடத்தில் அமைச்சர்கள் ஆய்வு

- சென்னை கொளத்தூரில் அமையவுள்ள சர்வதேச தரத்திலான வண்ணமீன் வர்த்தக மையத்துக்கான இடத்தை மீன்வளம் மற்றும் கால்நடை துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.
- சென்னை வில்லிவாக்கம் மேம்பாலம் சிங்காரவேலன் பள்ளி அருகில், கொளத்தூரில் அமையவிருக்கும் சர்வதேச தரத்திலான வண்ணமீன் வர்த்தக மையத்துக்கான இடத்தை அமைச்சர்கள் அனிதா ராதாகிருஷ்ணன், பி.கே. சேகர்பாபு ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இதைத் தொடர்ந்து அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:
- சென்னை கொளத்தூரில் சர்வதேச தரத்தில் வண்ணமீன் வர்த்தக மையம் அமைக்கப்படும் என சட்டப்பேரவையில் மீன்வளத் துறை சார்பில் அறிவிக்கப்பட்டது.

## 'சமபந்தி போஜனம்" சமத்துவ விருந்தாக பெயர் மாற்றம்

- 'சமபந்தி போஜனம்" என்பது சமத்துவ விருந்தாக பெயர் மாற்றம் செய்யப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை விழிப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியது: ஆதிக்க சக்தி திணித்த தீண்டாமை சமூகத்தில் எந்த வடிவத்திலும் இருக்கக் கூடாது. இதையே இந்திய அரசமைப்பின் சட்டக்கூறு கூறுகிறது. சமத்துவத்தை நிலைநாட்டுவதில் அனைத்து தனிநபர்களும் தங்களது வாழ்க்கை நெறியாக மனதில் பதிவு செய்ய வேண்டும். ஆதிதிராவிடர் பழங்குடியினர் தடுப்புச் சட்டத்தின் படி மாநில அளவிலான உயர்நிலை விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கூட்டம் கடந்த ஆண்டு நடைபெற்றது.

## உலக மரபு நாள்: இணையவழியில் கட்டுரைப் போட்டி

- உலக மரபு நாளையொட்டி தமிழ்ப் பல்கலைக்கழகமும், மரபிடங்களின் நண்பர்கள் அமைப்பும் நடத்தும் இணையவழிக் கட்டுரைப் போட்டிக்கு ஏப்ரல் 15–ஆம் தேதிக்குள் கட்டுரைகள் அனுப்பலாம் என துணைவேந்தர் வி.திருவள்ளவன் தெரிவித்துள்ளார்.
- மரபுகள் மக்கள் குழுக்களை நிலைநிறுத்துகின்றன. மரபுகள் மக்களுக்கு ஊக்கமளிக்கவும், வளர்ச்சிக்கும் நல்லிணக்கத்துக்கும் உதவுகின்றன.

## அம்பேத்கர் பிறந்த தினம் சமத்துவ நாளாகக் கொண்டாட்டம்

- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக, மாநில அளவிலான உயர்நிலை கண்காணிப்புக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பெரியார் பிறந்த தினத்தை சமூகநீதி நாளாக அறிவித்தது போன்று, சட்ட மேதை அம்பேத்கர் பிறந்த தினமான ஏப்ரல் 14–ஆம் தேதியை சமத்துவ நாளாகக் கொண்டாட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்தக் கோரிக்கையை ஏற்று, ஏப்ரல் 14–ஆம் தேதி இனி, சமத்துவ நாளாகக் கொண்டாடப்படும். தமிழகம் முழுவதும் சமத்துவ நாள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்படும்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.150 கோடியில் பால் பொருள்கள் தயாரிக்கும் புதிய ஆலை

- பெரம்பலூர் மாவட்டம் பாடாலூரில் பால் பொருள்கள் தயாரிக்கும் புதிய ஆலை ரூ.150 கோடியில் நிறுவப்படும் என்று பால்வளத்துறை அமைச்சர் சா.மு.நாசர் அறிவித்தார்.
- சட்டப்பேரவையில் பால்வளத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் சா.மு.நாசர் வெளியிட்ட அறிவிப்புகள்.

## தமிழுக்காக இளம் வயதிலேயே சிறை சென்றவர் அண்ணல் தங்கோ

- தமிழறிஞர் கு.மு.அண்ணல் தங்கோவின் 119–ஆவது ஆண்டு பிறந்த நாள் விழா வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.
- கு.மு.அண்ணல் தங்கோ தமிழ் மொழிக்காக பல்பேறு போராட்டங்களை நடத்தியவர். பாரதிதாசன் அண்ணல் தங்கோ குறித்து

கவிதை எழுதியுள்ளார். தமது 19–ஆவது வயதில் மொழிக்காகப் போராடி சிறைக்குச் சென்றவர். நாட்டில் பல்வேறு முக்கிய தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர். அவர் எங்கே சென்றாலும், பேசினாலும் தமிழ் மொழிக்காகவே அது இருக்கும்.

## ஆதரவற்ற வளர்ப்புப் பிராணிகள் பராமரிப்புக்காக வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள் திட்டம்

- ஆதரவற்ற, காயமடைந்த வளர்ப்புப் பிராணிகளைப் பராமரிக்கும் அரசு சாரா நிறுவனங்களுக்கு உதவ வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள் எனும் புதிய திட்டம் தொடங்கப்படும் என்று மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அறிவித்தார்.
- **நாட்டுக்கோழி இனப்பெருக்க பண்ணை:** சிவகங்கை மாவட்டம், செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் நாட்டுக்கோழி இனப்பெருக்க பண்ணை, கோழிக்குஞ்சு பொரிப்பகம் மற்றும் தீவன ஆலை ஆகியவை நிறுவப்படும்.
- **நாட்டின நாய்கள் ஆராய்ச்சி மையம்:** தமிழகத்தில் உள்ள ராஜபாளையம், கன்னி, சிப்பிப்பாறை, கோம்பை போன்ற நாட்டின நாய்களுக்கான இனப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் ரூ.1 கோடி செலவில் தென்காசி மாவட்டத்தில் நிறுவப்படும்.

## அம்பேத்கர் பிறந்த தினம் முதல்வர் தலைமையில் சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்பு

- அம்பேத்கர் பிறந்த தினம், ஆண்டுதோறும் சமத்துவ நாளாகக் கொண்டாடப்படும் எனவும், அன்றைய தினம் சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்கப்படும் என்றும் சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார். இந்த அறிவிப்பின்படி, தமிழக அரசின் சார்பில், முதல்வர் தலைமையில் சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி அம்பேத்கர் மணிமண்டபத்தில் நடந்தது.

## தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம்: பொது சுகாதாரத் துறை மூலம் செயல்படுத்த முடிவு

- தேசிய காசநோய் ஒழிப்புத்திட்டத்தை இனி தமிழகத்தில் பொது சுகாதாரத் துறை செயல்படுத்த உள்ளது. இதற்கான அரசாணையை மாநில மக்கள் நல்வாழ்வுத் துறை பிறப்பித்துள்ளது.
- இதுவரை காசநோய் ஒழிப்புத் திட்டமானது மாநில மருத்துவம் மற்றும் ஊரக சேவைகள் இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த நிலையில், தேசிய நல்வாழ்வுக் குழுமத்திட்ட இயக்குநர் அளித்த பரிந்துரை மற்றும் நிர்வாகக் காரணங்களுக்காக இந்த மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன.
- காசநோயை முழுமையாக ஒழிக்கும் நோக்கில் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன. அதுமட்டுமன்றி, 2025–க்குள் அந்நோயை முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்ற இலக்குடன் தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம் அனைத்து மாநிலங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- தமிழகத்தைப் பொருத்தவரை நோயாளிகளைக் கண்டறிதல், கூட்டு மருந்து சிகிச்சைகளை அளித்தல், தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் என காசநோய் ஒழிப்புத் திட்டப் பணிகள் மாநிலம் முழுவதும் விரிவாக மேற்கொள்ளப்படுகின்றன.

## புதுச்சேரி பல்கலை.க்கு பசுமை விருது மத்திய அரசு அங்கீகாரம்

- புதுச்சேரி பல்கலைக்கழகத்துக்கு மாவட்ட பசுமை சாம்பியன் விருதை மத்திய அரசு அண்மையில் வழங்கி அங்கீகரித்துள்ளது.
- புதுச்சேரி பல்கலைக்கழகம் துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங் தலைமையில், கடந்த 4 ஆண்டுகளாக "பசுமை வளாகம்" ("கிரீன் கேம்பஸ்") என்ற திட்டத்தின் கீழ் பல நிலையான வளர்ச்சி மற்றும் பருவநிலை மாற்றம் தொடர்பான முயற்சிகளை செயல்படுத்தி வருகிறது.
- தூய்மை செயல் திட்டம், முதன்மைத் திட்டங்கள், பல நிலையான வளர்ச்சி இலக்குகள், பல்கலைக்கழக மானியக் குழுவின் கட்டாயத் தேவைகள் போன்ற திட்டங்களையும் கல்வி அமைச்சகம், சுற்றுச்சூழல் அமைச்சகம், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் போன்ற அமைச்சங்களின் திட்டங்களையும் புதுச்சேரி பல்கலைக்கழகம் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது.

## ஆவடி நரிக்குறவர் காலனியில் நலத் திட்ட உதவிகள்

- திருவள்ளூர் மாவட்டம் ஆவடி நரிக்குறவர் காலனி மாணவிகள் பிரியா, திவ்யா, தர்ஷினி ஆகியோர் கடந்த மார்ச்சில், தங்களது கல்வி, சமூகம் உள்பட பல்வேறு பிரச்னைகள் குறித்து விளக்கமாகப்

பேசியிருந்தனர். முதல்வர் மு.க.ஸ்டாலின் அந்த மாணவிகளை சென்னை தலைமைச் செயலகத்துக்கு அழைத்து, அவர்களது படிப்புக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்யும் என உறுதியளித்தார்.

- முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆவடி நரிக்குறவர் காலனிக்கு வந்து பட்டா, குடும்ப அட்டை, முதியோர் உதவித்தொகை, சாலையோர வியாபாரத்துக்கான கடனுதவி உள்ளிட்ட நலத் திட்ட உதவிகளை வழங்கிப் பேசியது.

## ஏப்ரல் 24–இல் கிராம சபைக் கூட்டம்: ஆட்சியர்களுக்கு அரசு உத்தரவு

- தேசிய பஞ்சாயத்து ராஜ் தினத்தையொட்டி, தமிழகம் முழுவதும் வருகிற 24–ஆம் தேதி கிராம சபைக் கூட்டங்களை நடத்துமாறு, மாவட்ட ஆட்சியர்களுக்கு மாநில அரசு உத்தரவிட்டது.
- இதுதொடர்பாக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் பிரவீண் நாயர் மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கை:
- தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் ஆண்டுதோறும் ஏப்ரல் 24–ஆம் தேதி கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதன் ஒருபகுதியாக, நீடித்த வளர்ச்சிக்கான இலக்கை முன்னிறுத்தி தமிழகம் முழுவதும் கிராம சபைக் கூட்டங்களை அன்றைய தினம் நடத்துமாறு அறிவுறுத்தப்படுகிறது.
- இந்தக் கூட்டங்களில், நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு குறித்து விவாதிப்பதுடன், அதுதொடர்பான உறுதிமொழியையும் ஏற்க வேண்டும்.

## 'எல்லா சமயங்களையும் படியுங்கள்'

- பட்டிமன்ற நடுவர் சாலமன் பாப்பையா அகநானூறு பாடல்களுக்குத் திணை அடிப்படையில் உரை எழுதி, அதை மூன்று தொகுதிகளாக வெளியிட்டுள்ளார்.

## கடலில் எண்ணெய் கசிவு அகற்றல்: சர்வதேச பயிற்சி முகாம்

- இந்தியக் கடலோரக் காவல் படை சார்பில் எண்ணெய்க் கசிவுகளை அகற்றுவது குறித்த சர்வதேச பயிற்சி முகாம் சென்னையில் தொடங்கியது. இதில் ஈரான், கமோரோஸ், தாய்லாந்து, சொமாலியா, மோரீஷஸ், மியான்மர், கென்யா, இலங்கை, மாலத்தீவு, ஓமன், ஷெஷல்ஸ், வங்கதேசம், தென்னாப்பிரிக்கா, வியத்நாம், மடகாஸ்கர், ஏமன் மற்றும் நைஜீரியா நாடுகளைச் சேர்ந்த சுமார் 42 பேர் பங்கேற்றனர்.
- இந்தியப் பெருங்கடல், இந்தோ–பசிபிக் மற்றும் கயானா வளைகுடா உள்ளிட்ட பகுதிகளில் எண்ணெய்க் கசிவுகள் ஏற்பட்டால் அவற்றை உடனடியாக அகற்றுவது குறித்து விரிவான ஏற்பாடுகளை தயார் நிலையில் வைத்திருத்தல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுற்றுச் சூழல் சீர்கேடுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் உள்ளிட்டவை இப்பயிற்சி முகாமின் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பேரூராட்சிகளுக்கான பொது நிதி உச்சவரம்பு அதிகரிப்பு

- தமிழகத்தில் உள்ள பேரூராட்சித் தலைவர்கள், துணைத் தலைவர்களுக்கான நிர்வாகப் பயிற்சி முகாம் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. இந்த முகாமை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்து பயிற்சி கையேட்டை வெளியிட்டார்.
- வளர்ச்சித் திட்டப் பணிகளை விரைவாக செயல்படுத்திடும் வகையில் பேரூராட்சி பொது நிதியிலிருந்து நிர்வாக அனுமதி வழங்குவதற்கான உச்ச வரம்பு உயர்த்தப்பட்ட உள்ளது. அதன்படி, இரண்டாம் நிலை மற்றும் முதல் நிலை பேரூராட்சிகளுக்கு நிதி உச்சவரம்பு ரூ. 4 லட்சத்திலிருந்து ரூ.10 லட்சமாகவும், தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை பேரூராட்சிகளுக்கு ரூ. 8 லட்சத்திலிருந்து ரூ.15 லட்சமாகவும், பேரூராட்சி உதவி இயக்குநர் அளவில் ரூ. 20 லட்சத்திலிருந்து ரூ.30 லட்சமாகவும், மாவட்ட ஆட்சியர் அளவில் ரூ.30 லட்சத்திலிருந்து ரூ.50 லட்சமாகவும் உயர்த்தப்படும்.

## டேபிள் டென்னிஸ் வீரருக்கு பேரவையில் இரங்கல்

- தமிழக டேபிள் டென்னிஸ் வீரர் விஷ்வா தீனதயாளன் மேகாலய மாநிலம் ஷில்லாங்கில் நடைபெற உள்ள 83–ஆவது சீனியர் தேசிய சாம்பியன்ஷிப் போட்டிக்கு சென்றபோது சாலை விபத்துக்குள்ளாகி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

## தேசிய அளவிலான மாதிரி நீதிமன்றப் போட்டி

- தேசிய அளவிலான மாதிரி நீதிமன்றப் போட்டியில் தஞ்சாவூர் சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த சட்டவியல் பள்ளி வெற்றி பெற்றது.

## வருவாய்த் துறை செயலி மூலம் வறட்சி நிலை கண்காணிப்பு

- கடந்த 2021–22–ஆம் ஆண்டில் TNSMART செயலி மூலம் மின்னல் தொடர்பான எச்சரிக்கை செய்திகளை அனுப்ப வழிவகை செய்யப்பட்டுள்ளது. வறட்சி நிலையினை கண்காணித்து தகவல் அளிக்கை வசதியையும் அந்தச் செயலியில் ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது ஜூன் முதல் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- ஜாதிச் சான்றிதழ் உள்பட 25 வகையான சான்றிதழ்கள் வருவாய்த் துறையால் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு ஏப்ரல் 1–ஆம் தேதி முதல் கடந்த மார்ச் 31–ஆம் தேதி வரையில் 88 லட்சத்து 98 ஆயிரத்து 334 வருவாய்த் துறை சான்றிதழ்கள் இணைய சேவை மூலமாக மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அரசின் நீர் நிலை மற்றும் இதர புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை 3 ஆயிரத்து 852.16 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலங்களில் இருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

## திருட முடியாத சொத்து கல்வி

- தமிழக அரசுப் பள்ளிகளில் செயல்பட்டு வரும் பள்ளி மேலாண்மைக் குழுக்களை (எஸ்எம்சி) மறுகட்டமைப்பு செய்வதற்கான திட்டத்தை சென்னை திருவல்லிக்கேணி லேடி வெலிங்டன் மேல்நிலைப் பள்ளியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார். பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த "நம் பள்ளி நம் பெருமை" பிரசார வாகனங்களையும் அவர் கொடியசைத்து தொடக்கி வைத்துப் பேசியது:
- ஒரு தலைமுறையில் பெறக்கூடிய கல்வி அறிவானது, ஏழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும். உங்களிடமிருந்து யாராலும் அதைப் பிரிக்க முடியாது. திருட முடியாத ஒரு சொத்து இருக்குமென்றால், அது கல்வி மட்டும்தான். அதனால்தான் பள்ளிக்கல்விக்கு இந்த அரசு, மிகுந்த முக்கியத்துவத்தை வழங்கி வருகிறது. குழந்தைகள் என்னவாக வேண்டும் என்று விரும்புகிறார்களோ அதற்கு பெற்றோர் தடை போடாமல் உதவி செய்ய வேண்டும்.
- அந்தப் பள்ளியின் தேவைகள் என்னவென்று அறிந்து அவற்றை வழங்க வேண்டும். குழந்தைகளுக்கு தரமான சமமான கல்வி கிடைக்கச் செய்ய வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை மேலாண்மைக் குழுக்கள் எடுக்க வேண்டும்.

## முல்லைப் பெரியாறு கண்காணிப்புக் குழு: தமிழகப் பிரதிநிதி நியமனம்

- முல்லைப் பெரியாறு கண்காணிப்புக் குழுவில் இடம்பெறவுள்ள தமிழகப் பிரதிநிதியின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது. காவிரி தொழில்நுட்பக் குழுவின் தலைவர் ஆர்.சுப்பிரமணியன், தமிழகம் சார்பில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகளை பணியமர்த்த உயர்நிலைக் குழு

- மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் அரசு சிறப்புப் பள்ளிகள், அரசு மறுவாழ்வு இல்லங்கள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகங்கள் என 24 கட்டடங்களுக்கு, மேற்கூரை சரிசெய்தல், கணினி ஆய்வகம் அமைத்தல், கழிப்பறை அமைத்தல், இல்லவாசிகளின் விடுதிகள் அலுவலக கட்டட பராமரிப்பு போன்றவற்றுக்காக ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்து மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## வனக் குற்ற தடுப்புப் சிறப்புப் படை: அதிகாரிகளின் பட்டியலை தயார் செய்ய உத்தரவு

- வனக்குற்றங்களைத் தடுக்க அமைக்கப்படும் சிறப்பு அதிரடிப்படையில் இடம்பெறும் அதிகாரிகளின் பட்டியலைத் தயார் செய்ய தமிழக அரசுக்கு உத்தரவிட்ட உயர்நீதிமன்றம், இது தொடர்பான உத்தரவு வரும் 27–ஆம் தேதி பிறப்பிக்கப்படும் என தெரிவித்தது.
- வனக்குற்றங்களைத் தடுப்பது குறித்த பொதுநல வழக்குகளின் விசாரணையின்போது இதனைக் கூறிய நீதிபதிகள் வி.பாரதிதாசன், என். சதீஷ்குமார் ஆகியோர், அந்த பட்டியலில் இடம் பெறும் கேரள அதிகாரிகளின் விவரங்களை அளிக்க அவகாசம் கோரி கேரள வனத்துறை அதிகாரியின் கோரிக்கையை ஏற்று, பட்டியல் வந்தவுடன் அவர்களையும் குழுவில் சேர்க்கலாம் என்றனர்.

## அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் திருக்குறள் ஓவியக் கண்காட்சி

- சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் திருக்குறள் ஓவியக் கண்காட்சியை அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மனோ தங்கராஜ் ஆகியோர் தொடக்கி வைத்தனர்.

## ஆண்டுக்கு 6 கிராம சபைக் கூட்டம்

- தமிழகத்தில் இனி ஆண்டுக்கு நான்கு கிராம சபைக் கூட்டங்களுக்குப் பதிலாக ஆறு கூட்டங்கள் நடத்தப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். மேலும், ஊராட்சிப் பிரதிநிதிகளின் அமர்வுப்படி உயர்த்தப்படுவதாக அவர் அறிவித்தார்.
- சட்டப் பேரவையில் விதி 110–ன் கீழ், முதல்வர் மு.க.ஸ்டாலின் படித்தளித்த அறிக்கை:
- தமிழகத்தில் 1998–ஆம் ஆண்டில் இருந்து ஆண்டுக்கு நான்கு முறை குறிப்பிட்ட நாள்களில் கிராம சபை நடத்தப்பட்டு வருகிறது. குறுகிய கால அறிவிப்புகள் மூலம் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படும்போது,மக்களின்பங்களிப்புகுறைவாக இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு கிராம சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆறாக உயர்த்தப்படுகிறது.
- அதன்படி, ஜனவரி 26– குடியரசு தினம், மே –1 தொழிலாளர் தினம், ஆகஸ்ட் –15 சுதந்திர தினம், அக்டோபர் – 2 காந்தியடிகள் பிறந்த தினம், மார்ச்–22 உலக தண்ணீர் தினம், நவம்பர் – 1 உள்ளாட்சி தினம் ஆகிய தேதிகளில் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படும்.
- அமர்வுப் படிகள் உயர்வு: ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கான மாதாந்திர அமர்வுப் படி திமுக ஆட்சியில் இருந்து வழங்கப்பட்டு வருகிறது. இன்று வரை இதற்கான உத்தரவுகள் அமலில் இருக்கிறது. ஆனால், பல உயர்த்தப்படாமல் இருந்து வருகிறது. பல்வேறு மக்கள் பிரதிநிதிகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்ததன் அடிப்படையில், மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பிரதிநிதிகளுக்கு கூட்டங்களில் கலந்து கொள்ளும நாள்களில அமர்வுப் படித் தொகை பத்து மடங்காக உயர்த்தி வழங்கப்படும்.

## உடல் பருமன் அறுவை சிகிச்சை அமைப்பு: தலைவராக பிரவீண்ராஜ் தேர்வு

- இந்திய உடல் பருமன் அறுவை சிகிச்சை நிபுணர்கள் அமைப்பின் (ஒபிசிட்டி சர்ஜரி சொசைட்டி ஆஃப் இந்தியா) தலைவராக ஜெம் மருத்துவமனையின் மூத்த மருத்துவ நிபுணர் டாக்டர் பிரவீண் ராஜ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## செஸ் ஒலிம்பியாட்: முதல்வர் தலைமையில் குழு

- மகாபலிபுரத்தில்வரும்ஜூலையில்நடைபெறவுள்ள சர்வதேச சதுரங்கப் போட்டிக்கான (ஒலிம்பியாட் ஒருங்கிணைப்புக் குழுவை அமைத்து தமிழக அரசு உத்தரவிட்டது. மு.க.ஸ்டாலின் தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- இது குறித்து தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை பிறப்பித்துள்ள உத்தரவு விவரம்.
- குழுவின் தலைவராக முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்படுவார். குழுவின் உறுப்பினர்களாக பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு, விளையாட்டுத் துறை அமைச்சர் மெய்யநாதன், சுற்றுலாத்துறை அமைச்சர் மதிவேந்தன், மக்களவை உறுப்பினர் ஆ.ராசா, சட்டப்பேரவை உறுப்பினர் உதயநிதி ஸ்டாலின்,தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, டிஜிபி சி.சைலேந்திரபாபு, நகராட்சி நிர்வாகம், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் வனம் விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளின் செயலாளர்கள் அகில இந்திய சதுரங்க கூட்டமைப்பின் தலைவர், செயலாளர் என மொத்தம் 24 பேர் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெடுஞ்சாலைத் துறையில் குறைகளை களைய 'உள்தணிக்கை' திட்டம் அமைச்சர் எ.வ.வேலு

- நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் அலுவலகங்களில் குறைபாடுகளை களைய 'உள்தணிக்கை' (Internal Audit) என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு அறிவித்தார்.
- நெடுஞ்சாலைத் துறையில் குறைபாடுகளை களைய "உள்தணிக்கை" என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும். நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த கண்காணிப்புப் பொறியாளர்கள் தலைமையிலான குழு ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் முதல் வாரத்தில், உள்தணிக்கை செய்து அறிக்கையை நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநருக்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

## வழக்காடும் மொழியாக விரைவில் உள்ளூர் மொழி

- சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற விழாவில், அங்கு புதிதாக கட்டப்படவுள்ள 9 அடுக்குமாடி நிர்வாக கட்டடத்துக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா அடிக்கல் நாட்டினார். தொடர்ந்து, நாமக்கல் மாவட்டம் பரமத்தி, கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரத்தில் கட்டப்பட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், நீதிபதிகளுக்கான குடியிருப்புகளைத் திறந்து வைத்தார்.

- இதைத் தொடர்ந்து, தமிழகத்தில் முதல்முதலாக சென்னை எழும்பூரில் உருவாக்கப்பட்ட வணிக நீதிமன்றத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். பின்னர், அவர் கரோனா காலத்தில் உயிரிழந்த வழக்குரைஞர்களின் குடும்பங்களுக்கு நிவாரண நிதி வழங்கினார்.
- விழாவில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா பேசியதாவது: தமிழர்கள் தங்களது அடையாளத்தையும், மொழியையும், கலாசாரத்தையும் எப்போதுமே பாதுகாக்கக் கூடியவர்கள். தாய்மொழிக்காக 1965–ஆம் ஆண்டிலேயே மிகப்பெரிய போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமிழர்கள். நான் சென்னையில் உறவினர் வீட்டுக்கு வந்தபோது அந்தப் போராட்டத்தைக் கண்டேன்.
- நீதி பரிபாலனம் என்பது அரசியலமைப்புச் சட்டத்தின்படியான நீதிபதிகளின் கடமை மட்டுமல்ல; அது சமூகப் பொறுப்புகளுடன் கூடியதுமாகும். இந்தியா போன்ற நாடுகளில் நீதிபதிகள் கண்ணை மூடிக்கொண்டு சட்டத்தைப் பின்பற்றிவிட முடியாது. சமூக நடைமுறைகளையும் பின்பற்ற வேண்டும்; சமுதாய மாற்றங்களையும் கவனிக்க வேண்டும்.
- சீர்திருத்தம் தேவை: உடனடி காபி, நூடுல்ஸ் போல உடனடி நீதியையும் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். நீதித் துறையின் உண்மை நிலையை அவர்கள் உணர்வது இல்லை. தங்களது உரிமைகளை நீதிமன்றங்கள் பாதுகாப்பதாக பொதுமக்கள் நம்புகின்றனர். இதற்காக நீதித் துறையில் சீர்திருத்தம் தேவைப்படுகிறது.

## அறிவு வேட்கைக்¬கான திறவுகோல் புத்தகங்கள்

- அறிவு வேட்கைக்கான திறவுகோல் புத்தகங்களே என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.
- சர்வதேச புத்தக தினம் ஏப்ரல் 23.

## வழக்குரைஞர் சேம நல நிதி ரூ.10 லட்சமாக உயர்வு

- வழக்குரைஞர்களுக்கான சேம நலநிதியில் தமிழக அரசின் பங்கானது ரூ.10 லட்சமாக உயர்த்தப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் மேலும் பேசியது: நீதித் துறையின் உயிரோட்டமாக விளங்கும் வழக்குரைஞர்களின் நலன் காப்பதில் அரசு கவனம் செலுத்தி வருகிறது. தங்களுக்கான சேமநல நிதியை உயர்த்தி அளிக்க வேண்டுமென வழக்குரைஞர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதன்படி, சேமநல நிதியானது ரூ.7 லட்சத்தில் இருந்து ரூ.10 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

## தமிழகத்தின் முதல் வணிக வழக்குகள் நீதிமன்றம்

- தமிழகத்தில் முதல் முதலாக சென்னை எழும்பூரில் உருவாக்கப்பட்ட வணிக வழக்குகள் நீதிமன்றத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.
- இந்தப் புதிய நீதிமன்றத்தின் முதல் நீதிபதியாக எல்.எஸ்.சத்தியமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

## விவசாய கடன் அட்டை: மே 1 வரை சிறப்பு முகாம்

- விவசாய கடன் அட்டை பெற மே–1–ஆம் தேதி வரை அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு முகாம்கள் நடைபெறும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.
- தமிழகம் முழுவதும் கிராம சபைக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன. இந்த கூட்டத்தின் பொருள்களில் ஒன்றாக பிரதம மந்திரியின் கௌரவ நிதியுதவித் திட்ட பயனாளிகளுக்கு விவசாய கடன் அட்டை வழங்க உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாநிலத்தில் சென்னையைத் தவிர்த்து, அனைத்து மாவட்டங்களிலும் கடன் அட்டைக்கான சிறப்பு முகாம்கள் (ஏப்ரல் 24) தொடங்கி மே 1–ஆம் தேதி வரை நடைபெறவுள்ளன. இந்த முகாம் மூலம் இதுவரை விவசாய கடன் அட்டை பெறாத பயனாளிகளுக்கு அட்டை அளிக்கப்படும்.
- கடன் அட்டை மூலமாக விவசாயிகள் வேளாண்மை செய்வதற்கு ரூ.1.60 லட்சம் வரை பிணையில்லாத கடன் வழங்கப்படுகிறது. இதன்மூலம் விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்றவற்றை வாங்கவும், உற்பத்திக்குத் தேவையான மருந்துகள் போன்றவற்றை வாங்கலாம்.

## அனைத்துக் கிராமங்களுக்கும் அரசின் திட்டங்கள்

- காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், செங்காடு ஊராட்சியில் தேசிய ஊராட்சிகள் தினத்தை முன்னிட்டு, சிறப்பு கிராம சபைக் கூட்டம் அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

- கூட்டத்துக்கு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் மா.ஆர்த்தி தலைமை வகித்தார். ஊராட்சித் தலைவர் செஞ்சுராணி கவாஸ்கர் வரவேற்றார். ஊரக தொழில் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, சட்டப்பேரவை உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
- இதில், முதல்வர் மு.க.ஸ்டாலின் பொது மக்களிடம் கலந்துரையாடி குறைகளைக் கேட்டறிந்த பின்னர் பேசியது:
- தமிழக உள்ளாட்சி அமைப்புகள் பாரம்பரியமான வரலாறு கொண்டவை. காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள உத்திரமேரூர் கல்வெட்டு குறிப்புகள் இதற்குச் சான்றாக விளங்குகின்றன.
- பொதுமக்களின் குறைகளைக் களையத்தான் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. கடந்த 10 ஆண்டுகளாக கிராம சபைக் கூட்டங்களுக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை. தற்போது கிராம சபைக் கூட்டங்களை முறைப்படுத்த முயற்சி எடுத்துள்ளோம். இனி, ஆண்டுக்கு 6 முறை கிராம சபைக் கூட்டம் நடத்தப்படும்.
- ஊராட்சிகளில் அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி, தன்னிறைவு அடையக்கூடிய வகையில், முன்னாள் முதல்வர் கருணாநிதி பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தினார் என்பது நாடறிந்த உண்மை.
- ஊராட்சி அளவில் அனைத்துத் துறைகளின் செயல்பாடுகளையும் ஒருங்கிணைத்து சேவைகள் அனைத்தும் கிராம மக்களைச் சென்றடைய கிராம செயலகம் உருவாக்கப்பட உள்ளது.

## துணைவேந்தர்களை அரசே நியமிக்கும் சட்டத் திருத்த மசோதா

- தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு அளிக்க வகை செய்யும சட்டத் திருத்த மசோதா சட்டப் பேரவையில் நிறைவேறியது.

## காலநிலை மாற்ற இயக்கம் மாவட்ட அளவில் செயல்படுத்தப்படும்

- பசுமைப் பள்ளிகள்: காலநிலை மாற்றம் என்பது நம் வாழ்க்கையில் தவிர்க்க முடியாத உண்மை என்ற நிலையில் அதனால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ளவும், தணிப்பதற்கும் சிறார்களைத் தயார் செய்ய வேண்டியுள்ளது. பசுமைப் பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளன. இந்தப் பள்ளிகளில் ஆற்றல் திறனை மேம்படுத்த சூரிய ஆற்றலின் உதவியுடன் சூரிய மோட்டார் பம்ப்கள் பயன்படுத்துதல், மழை நீர் சேகரிப்பை நடைமுறைப்படுத்துதல், மக்கும் உரம் தயாரித்தல், காய்கறி மற்றும் மூலிகைத் தோட்டங்கள் உருவாக்குதல், பழங்கள் தரும் மரங்களை நடுதல், நீர் பயன்பாட்டைக் குறைத்தல், கழிவு நீரை மறுசுழற்சி செய்தல், நெகிழி இல்லாத சுற்றுச்சூழலை உருவாக்குதல் மற்றும் ஏனைய பசுமைப் பணிகளை இந்தப் பள்ளிகள் மேற்கொள்ளும். பள்ளியின் அனைத்து மின்தேவைகளும் சூரிய ஆற்றல் உற்பத்தி மூலம் பெறப்படும்.

## கருணாநிதி பிறந்த நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்

- மறைந்த முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் பிறந்தநாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்; சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் கருணாநிதிக்கு சிலை நிறுவப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.
- தமிழக சட்டப்பேரவையில் விதி 110–இன் கீழ் அவர் படித்தளித்த அறிக்கை:
- நின்ற தேர்தல்களில் எல்லாம் வென்ற தலைவர் கருணாநிதி ஒருவர்தான். 60 ஆண்டுகள் சட்டப்பேரவை உறுப்பினராகவும், 19 ஆண்டுகள் முதல்வராகவும் இருந்தவர்.

## நடப்பாண்டில் 50,000 விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு

- நடப்பாண்டில் புதிதாக 50,000 விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்கப்படும் என்று மின்சாரத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அறிவித்தார்.
- சட்டப்பேரவையில் மின்சாரத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் வி.செந்தில்பாலாஜி வெளியிட்ட அறிவிப்புகள்:
- தமிழகத்தில் விவசாய உற்பத்தியை பெருக்கவும், விளைநிலங்களின் பரப்பை அதிகரிக்கவும், விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் நோக்குடனும், நடப்பாண்டில் 50 ஆயிரம் எண்ணிக்கையில் புதிய விவசாய இலவச மின் இணைப்புகள் வழங்கப்படும்.

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் 2014 ஏப்ரல் 1 முதல் 2022 மார்ச் 31 வரை நிலுவையில் உள்ள சிறப்பு முன்னுரிமை அடிப்படையில், இலவச விவசாய மின் இணைப்புக் கோரி விண்ணப்பித்திருந்த மாற்றுத்திறனாளிகள், கைம்பெண், மலைவாழ் மக்கள், கலப்புத் திருமணம் செய்தோர், முன்னாள், இந்நாள் ராணுவத்தினர் மற்றும் துணை ராணுவத்தினர் ஆகியோரின் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவும் வகையில் அனைவருக்கும் இலவச மின் இணைப்பு 2022–23–ஆம் ஆண்டிலேயே வழங்கப்படும்.
- விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வண்ணம், பரந்த அடித்தளத்தைக் கொண்ட மின் கோபுரங்கள் அமைப்பதற்கு பதிலாக மிகக் குறுகிய அடித்தளம் கொண்ட மிக கோபுரங்கள் அமைப்பதற்கு பதிலாக மிக உயர் மின்னழுத்த ஒற்றை மின் கம்பங்கள் தேவையான இடங்களில் அமைக்கப்படும்.
- தமிழகத்தில் 10 ஆண்டுகளில் 20 ஆயிரம் மெகாவாட் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம் மற்றும் 10 ஆயிரம் மெகாவாட் மின்கலன் சேமிப்பு நிலையம் அமைத்து தமிழக மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கான திட்டம் சென்ற 2021–22–ஆம் ஆண்டு எரிசக்தி துறையின் மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

## இந்தியா–அமெரிக்கா நட்புறவின் 75–ஆ¬வது ஆண்டு விடியோ வெளியீடு

- இந்தியா–அமெரிக்கா நட்புறவின் 75 ஆண்டுகள் கொண்டாட்டத்தையொட்டி, அமெரிக்காவில் உள்ள இந்தியர்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை பிரதிபலிக்கும் வகையில் விடியோ பதிவு வெளியிடப்பட்டுள்ளது.
- இதுகுறித்து அமெரிக்கத் தூதர் (பொறுப்பு) பாட்ரிசியா லசினா கூறியதாவது: இந்த விடியோவில் டென்னிஸ் வீரர், கொடையாளர், மற்றும் திரைப்படத் தயாரிப்பாளர் அசோக் அமிர்தராஸ், எழுத்தாளர் மற்றும் உடல் நல வல்லுநர் டாக்டர் தீபக் சோப்ரா, 2014 மிஸ் அமெரிக்கா நீனா தவுலூரி, சிஎன்என் தலைமை மருத்துவ நிருபர் டாக்டர் சஞ்சய் குப்தா, இசையமைப்பாளர் மற்றும் இசை தூதர் ஜாகிர் ஹுசைன் உள்ளிட்ட பலர் இடம்பெற்றுள்ளனர். இந்த விடியோவை https://youtu.be/d5E7keyyaVo என்ற இணைப்பில் காணலாம்.

## திரைத் துறையினருக்கு கருணாநிதி பெயரில் விருது

- திரைத் துறையில் சிறந்து விளங்குவோருக்கு கருணாநிதி பெயரில் கலைத் துறை வித்தகர் விருது வழங்கப்படும் என்று செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிவித்தார்.

## மாயூரம் வேதநாயகத்துக்கு அரங்கம், சிலை

- மாயூரம் முன்சீஃப் வேதநாயகத்துக்கு மயிலாடுதுறையில் ரூ.3 கோடியில் அரங்கம், சிலை அமைக்கப்படும்.
- வேலூரில் உள்ள அண்ணா கலையரங்கம், அண்ணா பல்நோக்கு கலையரங்கமாக ரூ.10 கோடி செலவில் மாற்றி புதிதாகக் கட்டப்படும். தருமபுரியில் அமைந்துள்ள அதியமான் கோட்டம் ரூ.1 கோடி செலவில் புனரமைக்கப்படும்.
- மணிமண்டபங்களில் மாணவர்களுக்கு வசதி: செய்தி மக்கள் தொடர்புத் துறை கட்டுப்பாட்டில் உள்ள மணிமண்டபங்களில் அமர்ந்து போட்டித் தேர்வுக்கு தயார் செய்யும் மாணவர்களின் வசதிக்காக முதல் கட்டமாக 10 மணிமண்டபங்களில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.

## மே 1–இல் கிராம சபைக் கூட்டம்

- தமிழகத்தின் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் தொழிலாளர் தினமான மே 1–ஆம் தேதி கிராம சபைக் கூட்டங்கள் நடைபெறும் என ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலர் பி.அமுதா தெரிவித்தார்.
- இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: மே 1–ஆம் தேதி அனைத்து கிராம ஊராட்சிகளிலும் காலை 10 மணியளவில் கிராம சபை கூட்டம் நடைபெறும். இடம், நேரம் ஆகியன கிராம ஊராட்சி அலுவலகங்களின் தகவல் பலகையில் வெளியிடப்பட்டுள்ளன.
- இந்த கூட்டத்தில், ஊராட்சிகளின் 2021–22 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவு அறிக்கை, மேற்கொள்ளப்பட்ட பணிகள்.

## சித்த மருத்துவ பல்கலை. வேந்தராக முதல்வர்

- தமிழகத்தில் சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் அமைக்கப்படுவதற்கான சட்டமசோதாபேரவையில் நிறைவேற்றப்பட்டது. பல்கலைக்கழகத்தின்

வேந்தராக மாநிலத்தின் முதல்வர் செயல்படும் வகையில் இந்த மசோதாவில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## நம்மாழ்வார் இயற்கை வேளாண் ஆராய்ச்சி மையம்

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் கிருஷ்ணகிரி மாவட்டம் ஜீனூரில் புதிய தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஈரோடு மாவட்டம் பவானிசாகரில் புதிய மஞ்சள் ஆராய்ச்சி மையம், கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையம் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.

## சென்னையில் ரூ.10 கோடியில் சர்வதேச தரத்தில் வடிவமைப்பு நிலையம்

- சென்னையில் ரூ.10 கோடியில் சர்வதேச தரத்தில் வடிவமைப்பு நிலையம் உருவாக்கப்படும் என்று கைத்தறித் துறை அமைச்சர் ஆர்.காந்தி அறிவித்தார்.
- ஆமதாபாதில் உள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனம் மூலமாக கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் 50 வடிவமைப்பாளர்களுக்கு ரூ.50 லட்சம் செலவில் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும். காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு சரிகை ஆலையின் உள்கட்டமைப்புகள் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு செய்யப்பட்டு உற்பத்தி திறன் அதிகரிக்கப்படும்.

## 39–ஆவது தலைமை நீதிபதிகள் மாநாடு

- தில்லியின் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி என்.வி.ரமணா தலைமையில் 39–ஆவது தலைமை நீதிபதிகளின் மாநாடு ஏப்ரல் 29 நடைபெறுகிறது.
- இதில் 25 உயர்நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகள் பங்கேற்கின்றனர். இந்த மாநாட்டில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் முதல் நீதிமன்ற வளாகத்தில் காணப்படும் உள்கட்டமைப்பு பிரச்னைகள் வரை கலந்துரையாடல்கள், ஆய்வு நடைபெறும் என உச்சநீதிமன்றம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.
- இதைத்தொடர்ந்து மாநில முதல்வர்கள், தலைமை நீதிபதிகள் பங்கேற்கும் மாநாடு விஞ்ஞான் பவனில் நடைபெறுகிறது.

## இந்தியாவிலேயே முதல் முறை: எழும்பூர் மருத்துவமனையில் "ஸ்டெம் செல்" பதிவேடு

- இந்தியாவிலேயே முதல்முறையாக எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் குருத்தணு (ஸ்டெம் செல்) பதிவேடு தொடங்கப்படும் என்று சட்டப்பேரவையில் தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்தார்.
- தாய்சேய் நல சேவையை மேலும் வலுப்படுத்தும் விதமாக சென்னை ஆர்.எஸ்.ஆர்.எம். மகப்பேறு மருத்துவமனை, கீழ்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவனை, அரசு கஸ்தூரிபா காந்தி மகப்பேறு மருத்துவமனை ஆகிய 3 அரசு மருத்துவமனைகளிலும் செயல்பட்டு வரும் தாய் சேய் நல ஒப்புயர்வு மையங்களுக்கு கூடுதல் கட்டடங்கள் ரூ.84 கோடியில் கட்டப்படும்.
- தமிழகத்தில் பச்சிளங் குழந்தை இறப்புகளை குறைப்பதற்கு தலா ரூ.10 லட்சம் வீதம் 150 பச்சிளங் குழந்தை வென்டிலேட்டர் கருவிகள் ரூ.15 கோடி செலவில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவமனைகளில் உள்ள 74 சிறப்பு பச்சிளங் குழந்தை பராமரிப்பு பிரிவுகளுக்கு வழங்கப்படும்.

## மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் ரூ.424 கோடியில் ஒருங்கிணைந்த ஆய்வக சேவைகள்

- மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் ரூ.424 கோடியில் ஒருங்கிணைந்த அவசிய ஆய்வக சேவைகள் வழங்கப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்தார்.
- தமிழக சட்டப்பேரவையில் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்புகள் வெளியிட்டு பேசியதாவது:
- **ரூ.238 கோடியில் தீவிர சிகிச்சை பிரிவுகள்:** "இன்னுயிர் காப்போம்", "நம்மை காக்கும் 48" திட்டங்களை மேலும் வலுப்படுத்த செங்கல்பட்டு, தருமபுரி, திருவாரூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை ஆகிய 6 அரசு மருத்துவக் கல்லூரி

மருத்துவமனைகளிலும், ஒட்டன்சத்திரம், சீர்காழி, மேலூர், ஊத்தங்கரை ஆகிய 4 அரசு மருத்துவமனைகளிலும் தலா 40 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு ரூ.238 கோடியில் நிறுப்படும்.

- இன்னுயிர் காப்போம் திட்டத்தின் தென்சென்னையில் உள்ள சோழிங்கநல்லூரில் 100 படுக்கைகளுடன் நவீன கட்டமைப்பு வசதிகள் கொண்ட புதிய விபத்து, அவசர சிகிச்சை மருத்துவமனை ரூ.61 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.